# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்



சோ. தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

சோ. தேவராஜா

புதிய நீதி வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் |
| பொருள் | : | அரசியல் கட்டுரைகள் |
| நூலாசிரியர் | : | சோ. தேவராஜா |
| பக்கங்கள் | : | X + 164 |
| முதல் பதிப்பு | : | நொவெம்பர் 2023 |
| விலை | : | 500/= |
| அச்சகம் | : | ஜே.எஸ். பிறின்றஸ், சில்லாலை விதி, பண்டத்தரிப்பு |
| வெளியீடு | : | புதிய நீதி வெளியீட்டகம் இல. 121, ஹம்டன் லேன் கொழும்பு -06 இலங்கை |

| | | |
|---|---|---|
| Book Tittle | : | Thamil thesiyamum kurunalap piththum |
| Subject | : | Political Essays |
| Authour | : | S. Thevarajah |
| Pages | : | X + 164 |
| First Edition | : | November 2023 |
| Price | : | 500/= |
| Print | : | J.S. Printers, Sillalai Road, Pandatharippu |
| Published by | : | Puthiya Neethi Veliyeeddakam No. 121, Hamdan lane, Colombo -06 Srilanka |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

'தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்' என்கின்ற இந்நூலிலுள்ள 21 அத்தியாயங்களும் 'புதிய பூமி' மாதாந்த அரசியல் பத்திரிகையில் 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து 2004 ஜனவரி வரை வெளிவந்த கட்டுரைகளாகும்.

இருபது வருடங்கள் கடந்துள்ளன. இப்போது இக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்க முனையும் போது அதன் போதாமை தெரிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் 2009 மேயில் யுத்த முனையில் இலங்கை அரச இராணுவத்தால் இந்திய-அமெரிக்க அனுசரணையுடன் தோல்வியுறச் செய்த பின்னர் 'சமாதானச்' சூழல் மிகப் பயங்கரமாக மாறியுள்ளது. த. வி. புலிகளால் முண்டு கொடுத்து நிமிர்த்திவிடப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்முரண்பாடுகள் தோன்றி தனித்தனிக் கட்சிகளாக, கூட்டுக்களாகச் சிதறியுள்ளன.

தேர்தல் ஒன்றே இலக்காக மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகத் தொடர்கிறது.

இந்நூலின் 21ம் அத்தியாயத்தில் "தமிழ் தேசியத் தலைமை உழைப்பாளர்களின் கைகளுக்கு மாற்றப்படவேண்டும். நாலாம் கட்டத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்" என்பது கனவாகவே கடந்த இரு தசாப்தங்களைக் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்கள் கையறு நிலையில் நிற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அரச பயங்கரவாதத்தால் நடத்தி முடிக்கப்பட்ட யுத்தத்தின் வடுக்கள் இன்னும் நின்றபாடில்லை.

2009 மேயில் யுத்தத்தின் இறுதியில் அரச படைகளிடம் நிராயுதபாணிகளாக ஒப்படைக்கப்பட்ட போராளிகளும் பொது மக்களும் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் அனைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். காணாமல்போனோரின் விடுதலை பற்றிய உத்தரவாதமெதுவும் அரசால் வழங்கப்படவில்லை.

சொத்தழிவுகளுக்கான இழப்பீடுகளோ யுத்தத்தில் பாதிக்கப் பட்ட மாசற்ற மக்களுக்கு நிவாரணங்களோ வழங்கப்பட வில்லை.

அரச படைகளால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் குடிமனைகளும், ஆதனங்களும் மீளளிக்கப்படவில்லை. இராணுவ முகாம்களே விஸ்தரிக்கப்படுகின்றன.

அரசியல் கைதிகளின் விடுதலையும் இன்னும் முடிவின்றித் தொடரும் அவலம் நீடிக்கிறது.

தமிழரின் பூர்வீக குடிநிலங்களில் சைவ மத வழிபாட்டிடங்களில் பௌத்த ஆலயங்களும் புத்தர் சிலைகளும் திடீரெனத் தோன்றுகின்றன.

தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப் படவுமில்லை. சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வுக் கான ஆயத்தங்கள் எதுவும் செய்யப்படவுமில்லை.

மலையக மக்கள், முஸ்லிம்கள் இந்நாட்டின் தேசிய இனத் தகுதியுடைய மக்கள் எனப் பிரகடனப்படுத்தப்படவில்லை என்பதுடன் பல்லினத் தேசியப் பன்மைத்துவப் பண்பாடு அங்கீகரிக்கப்படாமல் ஒற்றைப் பரிமாணத்தில் ‘சிங்கள பௌத்த நாடு’ என்ற பேரினவாதத்தின் கொடுங்கோலின் வெம்மை இன்னும் தணியவுமில்லை.

கீழ் மாகாணத்தில் விவசாயிகளின் கால்நடை மேய்ச்சல் நிலங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்காக அபகரிக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நகத்தடியில் மாட்டுப்பட்டு வங்குரோத்து நிலையில் உலகத்தில் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கடனிறுக்க வகையற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் பொருளாதார வீழ்ச்சி கண்டுள்ளதுடன் ஊழலும் மலிந்துள்ளது.

இந்நிலையிலும் இந்நாட்டை மீட்பதற்கு இந்நாட்டின் தேசிய இனங்கள் அனைத்தும் இணைந்து பொதுவேலைத்திட்டத்தை முன்வைத்து அரசியல் பணியாற்ற முன்வரவேண்டியது இக்கால கட்டத்தின் சவால்மிகு சந்தர்ப்பமாகும்.

இனிவரும் காலத்தையாவது கையகப்படுத்தும் கருத்தில் அனைவரும் இணைவோம். தேசிய இனங்கள் ஒவ்வொன்றினதும் தனித்துவ வேறுபாடுகளை அங்கீகரித்துக் கொண்டாடுவோம்.

இக்கணத்திலிருந்து பொது வேலைத் திட்டத்தினை எல்லோர்க்கும் முன்வைத்து விவாதித்து இணக்கத்தை ஏற்படுத்திப் பிணக்கின்றி பயணிப்பதற்கு தயாராகுமாறு இந் நூல் மூலம் வேண்டுகின்றேன்.

சிறு தலையங்கங்களாக அவ்வப்போது எழுதப்பட்ட இந்நூலின் கட்டுரைகளை நூலாகத் தொகுத்த சந்தர்ப்பத்தில் அவற்றின் போதாமை கருதிப் புதியபூமியில் வெளிவந்த வேறு நான்கு கட்டுரைகள் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழ்த் தேசியத்தின் குறைபாடுகளை விமர்சனத் துடன் முன்வைத்த கவிஞர்கள் சுபத்திரன், முருகையன், சிவ சேகரம் ஆகியோரின் கவிதைகளையும், 'புதியபூமி' பத்திர்கை யில் வெளிவந்த 'இமயவரம்பன்' எழுதிய கட்டுரைகளையும், பிற கட்டுரைகளையும், பொருத்தம் கருதிப் பின்னிணைப்பாக இணைத்துள்ளேன்.

இந்நூல் வெளிவருவதில் ஊக்கப்படுத்திய தோழர் சி.கா. செந்திவேல், தோழர் சி. சிவசேகரம், தோழர் இ. தம்பையா, பாவலர் அழ. பகீரதன் ஆகியோருக்கும் புதிய நீதி வெளியீட்டுத் தோழர்களுக்கும் புத்தக விநியோகத்தில் அர்ப்பணிப்புடன் ஈடுபடும் ச. சஜீவன், ச. தனுஜன், ச. அனுஜன் ஆகியோருக்கும் பா. கஜீபா, சு. கர்ணிகா ஆகியோருக்கும் அட்டைப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமைப்பிலும் புத்தக வடிவமைப்பிலும் உதவிய தி. அனோஜனுக்கும் எனது நன்றிகள்.

விமர்சனங்களை எதிர்பார்க்கிறேன்.

சோ. தேவராஜா

2021.11.20

அரசடி வீதி,
பண்டத்தரிப்பு
TP: 077-8851989
sothevarajah@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழ்த் தேசியம் கொலனித்துவப் பிடியின் கீழ் 1920களிலேயே தோன்றியது. அது, கொலனிய-ஏகாதிபத்திய எதிர்ப்பையோ தேசிய நலன்களையோ கொண்டிராது, சிங்கள-பௌத்த பெருந் தேசியவாதத்தின் தமிழர் விரோதக் கூறுகளை மட்டும் எதிர்க்கும் ஒரு மென்மையான தமிழ்த் தேசியவாதமாகவே வளர்ந்தது. கொலனித்துவத்தின் கீழும் அதைப் பிந்திய காலங்களிலும், தமிழ்த் தேசியவாதத் தரப்பில், ஆட்சியிற் தமக்குரிய பிரதிநிதித்துவம் பற்றிய அக்கறை காணப்பட்டதே தவிரச், சிங்களப் பெரும் தேசியவாதத் தரப்பிற் போன்றே, சாதாரண மக்களின் நலன்களில், எவ்வித கரிசனையும் காட்டாத தமிழ்த் தேசியமாகவே அது இருந்தது.

ஆரம்பம் முதல் சிங்கள பெருந்தேசியம் சிங்கள பௌத்த தேசியவாதத்தை சிங்கள உயர்வர்க்க மேட்டுக்குடி நலன்களுக்காக எவ்வாறு முன்னெடுத்ததோ அவ்வாறே தமிழ்த் தேசியமும் தன்னைக் குறுந் தேசியவாத எல்லைகளுள் வைத்தே முன்னெடுத்து வந்தது. தமிழ்த் தேசியம் என்பது பழைமைவாத தமிழர் மேட்டுக்குடி ஆதிக்க சக்திகளின் உயர் வர்க்க நலன்கள் சார்ந்தே இன்றுவரை, இருந்துள்ளது. அதனிடம் தேசிய நலன்களோ, உழைக்கும் மக்கள் பற்றிய அக்கறையோ இருந்ததில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்போ முற்போக்கான கூறுகளோ தமிழ்த் தேசியத்தில் இன்னமுங் காணப்படவில்லை. இந்நிலையில், தமிழ்த் தேசியத்தின் பழைமைவாதப் பிற்போக்குக் கூறுகளை விமர்சித்து முற்போக்கான பாதையிற் பயணிப்பதை இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு சக்திகள் விடாது வலியுறுத்தி வருகின்றன.

அதன் அடிப்படையில், தோழர் சோ. தேவராஜா எழுதிப் 'புதிய பூமி' மாத இதழில் 2002-2004 காலப் பகுதியில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்துப் புதிய நீதி வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாக வெளியிடுகிறது. இந் நூலின் கட்டுரைகள் யாவும் ஆரோக்கியமான விவாதத்திற்கும் முற்போக்குத் தமிழ்த் தேசிய வளர்ச்சிக்கும் பங்களிக்கும் என்பது எமது உறுதியான நம்பிக்கை.

புதிய நீதி வெளியீட்டகம்
யாழ்ப்பாணம்
25.11.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

01. அறிமுகம் 1

02. பூகோளமயப் பூகம்பத்தை புரியாமல் போனது ஏன்? 5

03. தமிழ் மக்கள் என்போர் யார், எவர்? 11

04. மதவாதச் சகதிக்குள் தமிழ்த்தேசிய முகங்கள் ஏன் சிதையுண்டன? 18

05. ஆசனப் பற்றும் ஆதிக்கப் போதையும் 26

06. அந்நியர் தயவிலும் ஆயுத முதன்மையிலும் தங்கியிருத்தலே தலைவிதி! 35

07. ஆணாதிக்கச் சிந்தனா முறையும் பெண்களை ஆராதிக்கும் பாசாங்கும் 40

08. பணம் படைத்த முதலாளிகளே சுத்தத் தமிழர்கள்! ஏழைத் தொழிலாளர் தமிழர் ஆகார்! ஆதிக்கத் தமிழ்த்தேசிய ஆதார சுருதி! 46

09. தமிழர் பேரரசில் விவசாயிகள் தமிழர்களாகக் கணிக்கப்படுவார்களா? 51

10. விடுதலை இயக்கங்களின் வீரதீரங்களும் வெகுஜன விரோத நிலைப்பாடும் 57

11. பழமையைக் கடப்பதும் புதுமையை நிகழ்த்துவதும் சாத்தியமா? 63

12. சகல தேசிய இனங்களையும் அங்கீகரிப்பதுவே சுயநிர்ணயத்துக்கான முன் நிபந்தனையாகும் 68

13. போராட்டப் பலத்தில் விளைந்ததை அரசியல் தளத்தில் அறுத்தல் இயலுமா? 72

14. முஸ்லிம்களுக்கு தேசிய அபிலாஷைகள் இல்லையா? இன்று ஈராக், நாளை ஈழம்? 75

15. மனித-ஜனநாயக உரிமைகள் எதிர் சுயநிர்ணய உரிமை 79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை எது?
கியூபப் பாதையா? இஸ்ரேலிய சியோனிசமா? 84
17. இந்துத்துவ-இந்திய ஒட்டகம் தேடும் ஓட்டையாகக்
கீழ் மாகாணம் அமையுமா? 89
18. சுயநலப் புத்தியும் புகழ்நல நாட்டமும் ஒட்டிப்பிறந்த
இரட்டைக் குழந்தைகளா? 94
19. கட்சி சாராத அரசியலும் வெகுஜன வேலைமுறையற்ற
இயக்கமும் வெறும் மாயையே 100
20. இருவேறு உலகங்கள், இருவேறு மனிதர்கள் 105
21. ஆளுக்குப் பத்துப்பேர் ஊருக்கு நூறு பேர் 110

பின்னிணைப்புக்கள்
01. உடைக்க வேண்டிய பிற்போக்குத் தமிழ்த்தேசியம் 116
02. தமிழ்த் தேசியத்தின் பார்வையும்
குறுந்தேசிவாத வளர்ச்சியும் 123
03. தேசிய வாதத்தில் நிலவுடைமைச் சிந்தனை 129
04. பேரினவாதமும் குறுந்தேசியவாதமும் சந்திக்கும் இடம் 134
05. முனைப்பும் முதிர்ச்சியும் 138
06. குறுநலப் பித்தம் 141
07. இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு 145
08. உன் மண்ணும் என் மண்ணும் 149
09. பாட்டன் பரம்பரை 151
10. திசை மாறிய மாஜி நண்பனுக்கு 153
11. புதிய படிமம் 155
12. இஸ்லாமியனதும் இந்த மண் 158
13. பெட்டியிலை முடங்காதை பெத்த திரு நாடே! 160
14. செந்தீ 162
16. அந்நியம் 163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம் 01

இலங்கைத் தமிழ் மக்களின் மத்தியில் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசியத்தில் அடிப்படையான வர்க்கக் கோளாறுகள் பல உள்ளன. இவை இனங்காணப்பட்டு பிரித்துப் பார்க்கப்படும் பொழுது மட்டுமே தமிழ் மக்களின் விடுதலைப் பாதையைச் செப்பனிட முடியும்.

இலங்கையில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டு நூறு ஆண்டுகளையும் அரசியல் சுதந்திரம் பெறப்பட்டு ஐம்பது ஆண்டுகளையும் நாம் கடந்துள்ளோம்.

1505ம் ஆண்டுமுதல் 1948 வரையான 450 ஆண்டுகள் அந்நியரின் ஆதிக்கத்தில் இலங்கைத் தீவகம் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் 1915ல் சிங்கள-முஸ்லிம் இனக்கலவரம் நடந்தது. 'சுதந்திர' மடைந்த பின் 1958, 1977, 1981, 1983ம் ஆண்டுகளில் சிங்கள பேரினவாத அரசுகள் தமிழ் மக்கள் மீதான இனத் துவேஷத்தைக் கக்கி, வெளிப்படையான இன வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டன. இதனால் தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திரம் பற்றிச் சந்தேகமும் வெறுப்பும் கொண்டனர்.

1984ம் ஆண்டில் யூ.என்.பி ஆட்சியில் தேசிய பாதுகாப்பு அமைச்சு உருவாக்கப்பட்டது. சிங்களத் தேசியப் பாதுகாப்பு என்ற ஒருமுனைவாத சிந்தனையில், தமிழ் மக்களின் பாரம்பரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகமெனக் கருதப்படும் வடகிழக்கில் பகிரங்கமாக யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது. தரைவழி- வான்வழித் தாக்குதல் முன்னெடுப்புகள் படைத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டன. இன்றுவரை 1ம், 2ம், 3ம் கட்ட ஈழப்போர்கள் நடந்து முடிந்துள்ளன.

நான்காம் கட்ட ஈழப்போர் மீண்டும் என்று ஆரம்பமாகுமோ என்று அச்சமுற்று அமைதி சாத்தியமாகுமோ என்று சந்தேகம் கொண்டுள்ளனர் பொதுமக்கள்.

இந்த வரலாற்றுப் பின்புலத்தில் தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் விடுதலையைச் சரியான திசை மார்க்கத்தில் வழி நடத்தியுள்ளனரா என்பதை மறுபரிசீலனை செய்வது அவசியம்.

தமிழ்த் தேசியவாதத் தலைமையின் சாராம்சம் என்ன? எத்தகைய உலகக் கண்ணோட்டத்தை அவர்கள் உள்வாங்கியுள்ளனர்? நோக்கு எது? போக்கு எது? இலக்கு எது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய வர்க்கச் சார்பில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது? இவ்வாறான கேள்விகளை எழுப்பும்போது தமிழ்த் தேசியத்தின் தவறான திசை மார்க்கங்களை கண்டறிய முடியும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கொலனித்துவ ஆட்சிகளுக்கெதிராக தமிழ்த் தரப்பில் நடந்த கிளர்ச்சிகள் எவை? 'சங்கிலியன்', 'பண்டாரவன்னியன்' ஆகிய வீரபாண்டிய கட்டபொம்மன் சினிமாப்பாணி நாடகங்களைத் தவிர்த்தால் வரலாற்று ஆதாரங்கள் எத்தகையவை? 'பூதத்தம்பி' இசை நாடகத்தை விட்டால் கதி என்ன? யாழ்ப்பாண வைபவமாலை இதற்கு பதில் தருமா? மகாவம்சம் பாணியிலான ஆய்வு தமிழ்த் தேசியத்துக்கு உதவுமா?

மாறாக, கொலனித்துவ அரசுகளுடன் தமிழ் நிலவுடைமையாளர்கள் கூடி மகிழ்ந்து உடையார், முதலியார், மணியகாரர், விதானையார்களாக தமிழ் மக்களை நிலமானிய நிலை நின்று மேய்ப்பர்களாக வழி நடத்தினரா? சைவவேளாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளத்தைத் தமிழ் மக்களிடையே மேம்படுத்தினரா என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியம் முளை கொள்ளும் போதிருந்தே அதற்கெனத் தனிமைப்படுத்தப்பட்ட விசேட அம்சங்களை கொண்டிருந்தது. காலம், நேரம், சூழல் போன்ற சமூக யதார்த்தங்களை புறக்கணித்தது. அகவயப்பட்ட சிந்தனைக்குள் சிக்கியது. பழமைவாதத்தினுள் மூழ்கியது. கொலனித்துவ- ஏகாதிபத்திய பூகோளமயத்துடன் கள்ளக்கூட்டை வலுப்படுத்தியது. மனிதாபிமானத்தை நிராகரித்தது. ஜனநாயகத்தை சதித்துக்கொள்ள மறுத்தது.

இத்தனை கோளாறுகளுடன் பிறப்பெடுத்த தமிழ்த் தேசியம் சிங்கள மக்களை எதிரிகளாக கருதியது. எனவே யாழ்ப்பாணத் தில் வாழ்ந்த சிங்களப் பொதுமக்களை சி.ஐ.டி.க்கள் என கொன்றும், விரட்டியும், துரத்தியது. சிங்கள பொதுமக்களுடன் உறவு கொண்டவர்களுக்குத் துரோகிகளாகப் பட்டம் சூட்டியது. ஆனால் அதே சமயம் டி.எஸ்.சேனநாயக்கா முதல் சந்திரிகா, ரணில் வரையான சிங்கள பேரினவாதிகளுடன் தமிழ்த் தேசியம் ஒட்டுறவாடியது. "சிங்களத் தலைவர்கள் நல்லவர்கள்: சிங்களப் பொதுமக்களே பொல்லாதவர்கள்" எனப் பகிரங்கமாகவே பிரச்சாரம் செய்தது. எனவே நாற்பதுகள் முதல் இன்றுவரை சிங்கள ஆட்சிகளுடன் சிங்கள மந்திரிசபை அமைப்பதற்கு ஆலோசனை வழங்கிய அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் முதல் சந்திரிகா ஆட்சிக்கு முண்டு கொடுத்து ரணிலை ஆட்சிப்பீடமேற்றியோர் வரை தமிழ்த்தேசியத்தின் ஆண்ட பரம்பரைக் கண்ணோட்டம் பிரசித்தமானது.

ஒடுக்கப்பட்ட மக்களாகத் தமிழ் மக்களைக் கருதாமல் ஆண்ட பரம்பரையான சேர, சோழ, பாண்டியர்களின் வாரிசுகளாகத் தங்களைப் பாவனை செய்து கொண்டனர் தமிழர் தலைமைகள். இது தந்தை முதல் மைந்தர்களுக்கும் பொருந்தும். எனவேதான் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டுத் தேசிய நீரோட்டத்தில் கலந்துகொண்ட விடுதலை இயக்கங்களும் வீரர்களும் அரசாங்கங்களுடன் இணைந்து கொண்டனவே தவிர சிங்களப் பொதுமக்களுடன் தமது உறவை வளர்க்கத் தவறியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

தமிழ்த் தேசியத்தின் அகராதியில் ஏகாதிபத்தியம், சுயநிர்ணய உரிமை, தேசிய இனம் என்ற பதங்கள் அபத்தமான முறையிலேயே பயன்படுத்தப்பட்டன.

தமிழ்த் தேசிய இனம் என்பதற்குப் பதிலாக ஆண்ட பரம்பரை என இறுமாப்படைந்தனர். சுயநிர்ணய உரிமை என்ற பதம் இடதுசாரிகளால் பயன்படுத்தப்பட்டமையால் அதனை இயன்றவரை தவிர்த்துக்கொண்டனர். மாறாக "ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்று அகவயச் சிந்தனையில் அகமகிழ்ந்தனர்.

'சிங்கள ஏகாதிபத்தியம்' என இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுமைக்குமான எதிரியாக சிங்கள அரசை விவரித்து, யதார்த்தத்திறகு விரோதமாக முடிந்தமுடிவாகத் தமிழ்த் தேசியம் கருதியது. எனவே உலக ஏகாதிபத்தியமான அமெரிக்காவையும், வல்லரசுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளையும் நட்பாகக் கொண்டு அந்நாடுகளை இரட்சகர்களாகவும் கொண்டனர். தமிழ்த் தேசியத்தின் உலகக் கண்ணோட்டம் ஏகாதிபத்தியம் சார்பாகவே தந்தை முதல் மைந்தர் வரை, அண்ணன் முதல் தம்பிமார் வரை அமைந்தது.

சிங்களப் பேரினவாதம் எனும் பதத்தை இடதுசாரிகள் பாவித்துப் பல வருடங்களின் பின்னரே தமிழ்த் தேசியம் அப் பதத்தினை ஏற்றுக் கொண்டது. தற்போதும் தான் தேசிய இனம், சுயநிர்ணய உரிமை பற்றிய வெறும் சொற்களை மட்டுமே உள்வாங்கிக் கொண்டனரே தவிர அதன் உள்ளடக்கத்தை வரலாற்றுடன் புரிந்து கொண்டதாக இன்றுவரை தெரியவில்லை.

தமிழ்த் தேசியத்தின் குறுநலப் பித்தம் சுகப்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அது உழைக்கும் வர்க்க தமிழ் மக்களின் உறவுகளோடு பிணைப்பற்ற ஒன்றாகும்.

புதிய பூமி,
ஜனவரி-பெப்ரவரி 2002



சோ. தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோளமயப் பூகம்பத்தை புரியாமல் போனது ஏன்? 02

தமிழ்த் தேசியத்தின் உலகக் கண்ணோட்டம் ஏகாதிபத்திய பெரு வல்லரசாதிக்க நலன்சார்ந்தே அமைந்திருந்தமை தற்செயலாக நிகழ்ந்த ஒன்றன்று.

"இனமேன்மை வாதக் குறுநலப்பித்தம்" முற்றிவிட்டதன் அறிகுறியே இது என்று நாம் ஒரு சூத்திரத்தைச் சொல்லி 'விளக்கம்' தேடலாம். ஆனால் இவ்வாறான சூத்திரிப்புக்கள் பலநூறை நாம் கண்டுகொண்டாலும், தூலமான வரலாற்று நிலைமைகளையும் அவற்றின் ஏதுக்களையும் விளங்கிச் செயற்பட்டாலொழிய 'அமைதிகாணல்' வெறும் கானல் நீரா கவே நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கும்' என்று முருகையன் எச்சரிக்கை செய்திருப்பதினை நாம் நிராகரித்துவிட முடியாது.

தமிழ்த் தேசியத்தின் மூலவர்கள் தமது வர்க்க நலன்சார்ந்த உலகக் கண்ணோட்டத்தில் தமிழர் விடுதலையைச் சாதிக்க முனைந்தமையே உலகு தழுவிய போர் நோய்க்கான மூல காரணமாகும்.

கொலனித்துவ காலத்தில் யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய அமெரிக்க மிஷனறியின் நகர்வு தொடக்கம், சமகாலமாகிய நவகொலனித்துவ யுகத்தில் அமெரிக்க மாநிலமான மசாசூசெட்ஸ் மாநிலத்தில் தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்ட சம்பவம் ஈறாக இரத்த உறவு ருசுப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மோகமும் அந்நிய விசுவாசமும் என்பது இத்தகு உலகக் கண்ணோட்ட நோயின் குணங்குறிகளேயாகும். தேசிய இனமுரண்பாடு சிநேகமானவை என்ற தளத்திலிருந்து பகைமையான முரண்பாடாக ஜே. ஆர். அரசாங்கத்தினால் 'யுத்தம் என்றால் யுத்தம்' எனப் பிரகடனப் படுத்தப்பட்ட அதே சமயம், முகத்துக்குக் குத்துவது போல் பாவனை செய்து வயிற்றுக்குக் குத்தும் வல்லமை கொண்ட ஜே. ஆர். திறந்த பொருளாதார மூலம் பூகோளமயமாதலின் எல்லா வினைகளுக்கும் இலங்கையைத் திறந்துவிட்டார்.

இச் சூழ்ச்சிக்குப் பலியானதில் தமிழர்களே முதலிடம் வகித்தனர். பொருளாதார காரணங்களாலும் இனப்பகை காரணமாகவும் தமிழர் புலம்பெயர்ந்தனர். இனப்பகையை விடவும் பொருளா தாரப் புலப்பெயர்வுகளே முதன்மையுடையன. இனப்பகை போன்று இயக்கப்பகை காரணமாகவும் குறிப்பிடத்தக்களவில் புலம் பெயர்ந்தனர்.

இப் புலப்பெயர்விலும் வர்க்க நலனும் ஆதிக்க மனோபாங்கும் பாதுகாக்கப்பட்டவாறே பயன்பட்டன. பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய ஆங்கில முதன்மை நாட்ட நாடுகளில் புகலிடம் பெறுவதுவே அதி கௌரவமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் கோருவது இரண்டாம் தரத்திலும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் நிர்ப்பந்தத்திலும் இந்தியாவுக்கு உயிரைக் காப்பாற்றும் அகதி வாழ்க்கையிலுமாக ஈழத்தமிழரின் வாழ்வு மறுபுறம் நிலை குலைந்தது.

இவற்றுக்குமப்பால், பேரினவாத இராணுவ முற்றுகைகளால் இலங்கைக்குள்ளேயே தமிழர்கள் இடம்பெயர்ந்து வாழ் கின்றனர். மிக அதிகமாக, வட-கீழ் மாகாணங்களுக்கு வெளியே அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் தமது கல்வி, கலாசார வாழ்வை நிலைப்படுத்திக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலஸ்தீனர் இஸ்ரேலுக்குள் புகலிடம் கோராமல் பிற மத்திய கிழக்கு நாடுகளை நாடினர். இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழர்கள் சிங்களப் பகுதிகளில் வாழ்வது உகந்ததென எண்ணுவது முரண்நகையாகும்.

தமிழ்த் தேசியத்தின் விடுதலைப் போராட்டத்தினை சர்வவியாபகமாக்குவதற்குப் பதிலாக மேற்குலகமயமாக்கும் ஆசையே அதிகம் எனலாம்.

தமிழர் பிரச்சினையை உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. உலகத்துக்கு தமிழர் ஒற்றுமையைக் காட்ட ஒன்றாகப் புள்ளடி போடுங்கள் புள்ளடி என்று தேர்தல்களில் முழக்கம் கேட்பது வழக்கமாகிவிட்டது.

தமிழ்த் தேசியம் காட்டிய உலகம் என்பது பலஸ்தீனத்தின் சுயநிர்ணயத்தைப் பறித்த இஸ்ரேலின் வழியைப் பற்றிக் கொண்டது.

உலகம் முழுமையும் வாழும் ஆறு கோடி தமிழர்களில் எவருக்கும் எங்கும் தேசப்படத்தில் ஒரு நாடு கிடையாது. எனவே அதனை ஈழத்தமிழன் மட்டுமே 'தமிழீழத்தை' பிரகடனப்படுத்துவதன் மூலம் உலகம் முழுமையும் வாழ்ந்த இஸ்ரேலியர்கள் நாட்டை உருவாக்கியது போல் நாமும் தமிழீழத்தை வெல்வோம் என்றனர்.

ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர் என்பதற்குப் பதிலாக உலகமெங்கும் வாழும் தமிழரின் தலையில் தமிழீழ முடி சுமத்தப்பட்டமை தமிழ்த் தேசியத்தின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடாகும். 'சிங்கள ஏகாதிபத்தியத்திடமிருந்து தமிழ் ஈழத்தை மீட்போம், என்று தமிழ்த் தேசியவாதிகள் மிக நீண்ட நாட்களாகவே சொல்லிவந்தனர்.

உலகப் பெரு வல்லரசு ஆதிக்கத்தின் மறைப்புத் திரையாகவே 'சிங்கள ஏகாதிபத்தியம்' என்ற பதம் பாவிக்கப்பட்டது. சிங்களப் பேரினவாதம் என்று இடதுசாரிகளால் பயன்படுத்தப்பட்ட சொல்லை நீண்ட நாட்களாக தெரிந்து கொள்ளாதவர்களாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். உலக ஏகாதிபத்தியத்துடன் உறவாடுவதற்கு உதவும் வகையிலேயே அமெரிக்கா புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப்படுத்தியது.

இன்றைய நாள் வரை அமெரிக்க ஏகாதிபத்தியத்தையோ அதன் உலகப் பயங்கரவாதத்தையோ தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒரு சொல்லாலும் வெளிப்படுத்தத் துணிந்ததில்லை.

உலக மக்களின், தேசங்களின் ஆதரவைக் கோருவதே ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசியத்தின் தேவையாகும்.

ஒடுக்கப்பட்ட மூன்றாமுலக நாடுகள் ஆசிய, ஆபிரிக்க லத்தின் அமெரிக்க நாடுகள் மத்தியில் தமிழ்த் தேசியத்தின் மீதான ஒடுக்குமுறைகளை எடுத்துரைத்து விரிவாக்குவதே விடுதலை யை விரும்பும் தேசத்தின் செயற்பாடாக அமையமுடியும்.

உலக மயமாக்கலின் மூலம் தேசங்களின் இறைமையை, பண்பாட்டை மறுத்து மேற்குலக ஆதிக்கத்தையும் பண்பாட்டையும் ஒரு-வழிப்பாதையாக ஒடுக்கப்பட்ட தேசங்கள் மீது திணிக்கும் ஒற்றைப் பரிமாணத்தை உணர்ந்து கொள்ளாதவர்களாகவே தமிழ்த் தேசிய வாதிகள் தம்மை வெளிப்படுத்துவது அவர்களது ஆதிக்க மனோபாவத்தின் வர்க்கக் குணநலன் சார்ந்த விடயமாகும்.

தமிழ் மக்களின் தனித்துவத்தையும் தன்னிறைவான பொருளாதாரத்தையும் தமிழ்ப் பிரதேசத்தில் கட்டமைப்பது காலத்தின் தேவையாகும். அதைத் தவிர்த்து பூகோளமயப் பூகம்பத்தைப் புரியாதவர்கள் போல் தமிழ்த் தேசிய வாதிகள் அத்தகைய ஆக்கிரமிப்பு நாடுகளுடனேயே தமது நட்பைப் பூண்டுகொள்ள ஆதங்கப்படுவது ஆச்சரியத்துக்குரியதல்ல.

அயல் நாடுகளின் தயவில் அந்நாடுகளின் அனுசரணையுடன் தமிழீழத்தைப் பிரித்துவிடலாம் என்ற பேராசை விரலுக்கு மிஞ்சிய வீக்கமான சிந்தனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தேசத்தின் உதவியுடன் பங்ளாதேஷ், பிரிக்கப்பட்டது போல் 'யாழ் தேஷ்' பிரிக்கப்படும் என்றும் இந்திய பிராந்திய வல்லரசைப் பயன்படுத்தி தமிழீழம் காணப் புறப்பட்ட தமிழ்த் தேசியத் தலைவர்களின் கனவு 1987 - 90களில் சிதைந்து போனது.

இந்தியாவைப் பயன்படுத்தப் புறப்பட்ட தமிழ்த் தேசியத் தலைவர்கள் இந்தியாவின் பலிக்கடாக்களாக்கியமை வரலாற்றுப் பாடமாகியது.

இனி, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பெரு வல்லரசுகளைப் பயன்படுத்தும் முயற்சியில் தமிழர் தேசியத் தலைவர்கள் வீறுடன் புறப்பட்டுள்ளனர். இதன் விளைவுகளை மிகக் குறுகிய காலத்தில் நாம் படித்துக்கொள்ள எமது பாடப் புத்தகங்களைத் திறந்து வைப்போம்.

அமெரிக்காவைப் பயன்படுத்த முனைந்த இஸ்லாமியத் தீவிர வாதிகளான ஒஸாமா பின்லாடன், ஈராக் அதிபர் சதாம் ஹூசைன் ஆகியோரை உலகப் பயங்கரவாதிகளாகப் பிரகடனப்படுத்தித் தனது நலனுக்கு விட்டுக் கொடுக்காத போது அந்நாடுகளுக்கு எதிராக உலக ஆதரவுடன் ஆக்கிரமிப்பைச் செய்தமை மிகக்கிட்டிய பாடமாகும்.

தமிழ்த் தேசியத்தை உலக ஆக்கிரமிப்பாளரின் அனுசரணையில் மீட்க முடியுமா என்பது பற்றி சந்தேகமின்றி மறுபரிசீலனை செய்வதும் உலகக் கண்ணோட்டத்தை மாற்றியமைப்பதும் இன்று எம்முன்னுள்ள முன்நிபந்தனையாகும்.

உலக கண்ணோட்டத்தை மாற்றியமைப்பதன் மூலம் இலங்கை வாழ் முஸ்லிம், சிங்கள மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்கும் உலகம் முழுமையும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்கும் தமிழ்த் தேசியம் தயாராகுமா?

கொலனித்துவத்தின் மூலம் தமிழ்த் தேசியம் பரம்பரையாகப் பெற்ற ஆதிக்க உலகக் கண்ணோட்டத்தை வீசியெறிந்துவிட்டு நவகொலனித்துவத்தின் நாசகாரச் செயல்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

புரிந்துகொள்வதே விடுதலை விருட்சத்துக்கான விதையை ஊன்றுவது போலாகும். நடக்குமா?

புதிய பூமி

மார்ச் 2002



சோ. தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் என்போர் யார், எவர்? 03

தமிழ்த் தேசியத்தை உலக ஆக்கிரமிப்பாளரின் அனுசரணையில் மீட்க முடியுமா என்பது பற்றி சந்தேகமின்றி மறுபரிசீலனை செய்வதும் உலகக் கண்ணோட்டத்தை மாற்றியமைப்பதும் இன்று எம்முன்னுள்ள முன்நிபந்தனையாகும்.

உலக கண்ணோட்டத்தை மாற்றியமைப்பதன் மூலம் இலங்கை வாழ் முஸ்லிம், சிங்கள மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்கும் உலகம் முழுமையும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்கும் தமிழ்த் தேசியம் தயாராகுமா?

கொலனித்துவத்தின் மூலம் தமிழ்த் தேசியம் பரம்பரையாகப் பெற்ற ஆதிக்க உலகக் கண்ணோட்டத்தை வீசியெறிந்துவிட்டு நவகாலனித்துவத்தின் நாசகாரச் செயல்களைப் புரிந்து கொள்வதே விடுதலை விருட்சத்துக்கான விதையை ஊன்றுவது போலாகும். அது நடக்குமா?

தமிழ்ப் பொது மக்கள் மூன்றாம் கட்ட ஈழப்போர் ஓய்வடைந் தமையையிட்டுக் குதூகலம் அடைந்துள்ளனர். இலங்கையில் உழைப்பில் ஈடுபட்டு, அந்த உழைப்பிலேயே தமது ஊதியத் தைப் பெற்று வாழும் தொழிலாளர்கள், சொந்தமாகவோ குத்தகைக்கோ நிலத்தில் பயிரிட்டுத் தம் வயிற்றுக்குச் சோறிட்டு வாழும் விவசாயிகள், கடலில் மீன் பிடித்து வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்தொழிலாளர், அரச தனியார் ஊழியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் அண்மையில் மகிழ்வுற்றுள்ளனர்.

1977களின் பின்னர் திறந்த பொருளாதாரம் இலங்கையில் அறிமுகமாகியது. அதன் அறுவடையாக இலங்கை ரூபாவின் மதிப்பு குறைந்தது. எனவே இந் நாட்டில் உழைப்பதன் மூலம் எவரும் மாதாந்த வரவு செலவைத் துண்டுவிழாமல் நடத்த முடியாது. இதனால் ஈழப்போரைச் சாட்டாகக் கொண்டு வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அடைக்கலம் தேடிச் சென்று அங்கேயே வாழும் தமிழ் மக்கள் இன்னொரு புறம்.

இவ்வாறு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் தயவில் தங்கியிருக்கும் இலங்கையில் வாழும் மக்கள் குடியினர். மறுபுறம், கட்டற்ற வெளிநாட்டுப் பொருள் இறக்குமதியால் பாதிக்கப்பட்ட உள்ளூர் உற்பத்தியாளரான விவசாயிகள், கடல்வலயத் தடைச் சட்டங்களால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர்கள். யுத்த நடவடிக்கைகளால் உள்நாட்டிலேயே தமிழ்த் தேசியத்தால் புறக்கணிக்கப்பட்ட தொழிலாளர், விவசாயிகள்! இடம்பெயர்ந்து வாழும் ஏனைய மக்கள் பிரிவினரும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணங்களிலேயே தங்கி வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்குக்கு வெளியே இடம்பெயர்ந்து வாழும் சாதாரணத் தமிழ்ப் பொதுமக்கள், சிங்களவர், முஸ்லிம்கள், மலையக மக்கள் ஆகிய பிரிவினருக்கு அடுத்தபடியிலேயே போர்க்கால நிலவரங்களில் தம்மை வைத்துக்கொள்ளப் பழகிக் கொண்டனர். பொலீஸ் பதிவு முதல் தேடுதல் வேட்டைவரை அரச பாதுகாப்புப் படையினர் இவர்களை அவ்வாறே அடையாளப்படுத்தினர்.

அடையாள அட்டைப் பரிசீலனையின் போதும் பெயரிலும் பிறப்பிலும் உள்ள பதிவுகளின் அடிப்படையில் பாதுகாப்புப் படையினர் 'பயங்கரவாதத் தமிழர்' என்பதை உறுதிசெய்து கொள்ள வழிவகுத்தது. பிறப்பில் யாழ்ப்பாணம் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு வரையான வட கிழக்கிலுள்ள பிரதேசப் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 'சந்தேகம்' நீடிப்பதே நிலவரமாகும். எனவே இவர்கள் நாலாந்தரப் பிரஜைகளாகவே கணிக்கப்பட்டனர்.

யுத்தகாலத்தில் இலங்கையின் சகல பகுதிகளுக்கும் இவர்கள் செல்ல முடியாதவாறு கட்டுப்பாடுகள் அரச பாஸ் நடைமுறை மூலமும் பல்வேறு பாரபட்ச, புறக்கணிப்புகள் வடிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் பிரிவினர் இலங்கைத் தமிழர்களுடன் உறவு வைத்துக் கொள்வதும் ஊடாடுவதும் ஆபத்தெனப் புரிந்துகொண்டு தொடர்புகளை அச்சத்துடன் மிக்க கவனமாகவே பேணிக் கொண்டனர்.

தமிழ்த் தேசியத்தைக் கட்டமைத்த தமிழ்த் தலைவர்கள் சிங்களவர்களை 'எதிரிகள்' என்றும், முஸ்லிம்களைத் 'துரோகிகள்' அல்லது 'காட்டிக் கொடுப்போர்' என்றும், மலையக மக்களை 'இந்தியர்கள்' அல்லது 'தோட்டக்காட்டார்' என்றும் வகைப்படுத்திக் கொண்டனர். இத்தகைய படிம வகைப்பாடுகள் தமிழ்த் தேசியத்தின் திட்டமிட்ட சூழ்ச்சியாகும். இதன் மூலம் வர்க்க ரீதியில் ஒன்றுபட வேண்டிய சாதாரண சிங்கள-முஸ்லிம்-மலையகத் தமிழ் மக்களைப் பிரித்து வைத்தனர்.

ஆயுத வியாபாரங்களிலும் மேற்குலக ஆயுத உற்பத்திக் கொம்பனிகளுடன் உறவும் நெருக்கமும் கொண்டிருந்தனர். திறந்த பொருளாதாரத்துக்கும் பூகோளமயமாக்கல் என்ற நவகொலனித்துவ நிகழ்ச்சி நிரலுக்கும் தம்மை விசுவாசப்படுத்திக் கொண்டனர்.

1977ல் திறந்த பொருளாதார ஒட்டகத்தை இலங்கையில் நுழையவிட்ட ஜே.ஆரின், திட்டங்களுக்குத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒத்தூதினர். நீலன் திருச்செல்வம் முதல் சகல தமிழ்த் தலைவர்களும் இந்த ஒட்டகம் பற்றிய அக்கறையின்றி புனிதத் தமிழர்களாகத் தமது கற்பைக் காத்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரப் பிரச்சினைகள் என்பதும் பல்தேசியக் கொம்பனிகளுக்கு தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளும் இவர்களைப் பொறுத்தவரை தமிழர்களின் பிரச்சினைகளே யல்ல. அது சிங்களவர்களின் பிரச்சினையென்று ஒதுங்கிக் கொண்டனர்.

1970 முதல் 1977 வரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த விவசாயிகள், அன்றைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தில் வெளி நாட்டுப் பொருட்களுக்கு இறக்குமதித் தடையால் உப உணவு உற்பத்தியில் இலங்கையிலே முன்னின்றனர். வெங்காயம், மிளகாய் உற்பத்தி செய்து பெரு முதலீட்டனர். காணி, நிலம் வாங்கி வீடுகள் கட்டிச் செல்வந்தராயினர்.

வன்னி, கிளிநொச்சி, விஸ்வமடு, ஒட்டிசுட்டான் எனப் பெரு நிலப்பரபெங்கும் நெல், மிளகாய் என விவசாயம் பெரு வளர்ச்சி பெற்றது. கீழ் மாகாணத்தில் அம்பாறை, மட்டக் களப்பில் நெல் அறுவடை உச்சத்தைத் தொட்டன. 'விவசாய மன்னர்கள்' தேர்ந்தெடுக்கப்பட்டனர். வடக்கில் இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் துணி உற்பத்தியில் முதலிடம் வகித்தன. வெளிநாட்டு ஆடைகளின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டமையால் கைத்தறி நெசவாலைகள், மின் தறி நெசவாலைகள் விருத்தி பெற்று வளர்ச்சி பெற்றன. பண்டத்தரிப்பு, சங்கானை வல்லை நெசவாலைகள் இலங்கை முழுவதற்குமான துணிகளை உற்பத்தி செய்து விநியோகிப் பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கத் தொடங்கின.

சீவல் தொழிலாளர்கள், கள்ளு உற்பத்தியில் உயர் சமூகத்தினரின் தனிப்பட்ட தயவில் வாழும் நிர்ப்பந்தம் நீக்கப்பட்டது. கூட்டுறவு அமைப்பு நிறுவப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தொழில் துறையாக சீவல் தொழில் மாற்றம் கண்டது. பனம்பொருள் அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டது. தெங்கு பனம் பொருள் அபிவிருத்தி காணப்பட்டது.

உணவுற்பத்தி, நெசவுத் தொழில், பின்தங்கிய சமூகப் பிரிவினரின் தொழில் அங்கீகாரம் என்பன தேசிய பொருளாதாரம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைப்பில் முன்னெடுக்கப்பட்டன. கூலி விவசாயிகளாக வயற் காணிகளைச் செய்துவந்த குத்தகை விவசாயிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு நெற்காணிச் சட்டத் திருத்தத்தின் கீழ் நிலத்தின் மீது உழுபவனுக்குள்ள உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. வீடுகளுக்குச் சொந்தக்காரராய் இருப்போரிடமிருந்து வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாக்கப்பட்டனர்.

இவையாவும் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை 'மணி-ஓடர் பொருளாதாரம்' என்ற நிலையிலிருந்து தமிழ்த் தேசியப் பொருளாதாரமாகக் கட்டமைக்க உதவின.

எனினும் தமிழ் விவசாயிகளுடைய அபிவிருத்தியை தமிழ் தேசியத் தலைவர்கள் கண்டுகொள்ளவில்லை. 'சோறா, சுதந்திரமா' என்ற கோஷமெழுப்பினர். இடதுசாரிகளின் பொருளாதாரக் கோட்பாட்டை 'பண்டித் தத்துவம்' என்று பகிடி பண்ணினர்.

1981ல் ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற்றபோது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பங்குபற்றாமல் 'தமிழீழம் முடிந்த முடிவு' என்பதனால் 'ஸ்ரீலங்கா' அரசின் தேர்தலை பகிஷ்கரிப்பதாக முழங்கினர். தேர்தல் முடிவு வெளியான போது யாழ்ப்பாணத்தில் வேட்பாளர் கொப்பேகடுவ கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்தார். அப்போது தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் "வெங்காயம் மிளகாய்க்குக் கிடைத்த வாக்குகள்" என்று கொச்சைப்படுத்திக் கூறினார். இதன் சாராம்சம் என்னவெனில் தமிழ்த் தேசியத்தில் தமிழ் விவசாயிகள் உள்ளடக்கப்படவில்லை என்பதேயாகும்.

யாழ்ப்பாணத்தில் தொழிற்சங்கங்களை அமைப்பதில் இடதுசாரிகளே முன்னின்று பணியாற்றினர். மாநகரசபைத் தொழிலாளர் சங்கம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர் சங்கம், காங்கேசன்துறை சீமெந்து ஊழியர் தொழிற் சங்கம், இ.பொ.ச. ஊழியர் சங்கம், சினிமா தியேட்டர் ஊழியர் சங்கம், மில்க்வைற் தொழிலாளர் சங்கம் போன்ற பலவற்றை ஆரம்பித்து தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். அப்போது தொழிலாளர் நியாயமன்றுகளில் சினிமாத் தொழிலாளர் சார்பில் தோழர் நா. சண்முகதாசன் போன்ற தலைவர்கள் வாதாடத் தமிழ் முதலாளிகளுக்காகத் தமிழ் தேசியத் தலைவர்களில் ஒருவர் வாதாடித் தோற்றமை வரலாறாகும்.

இவ்வாறாக தமிழ் விவசாயிகள், தமிழ்த் தொழிலாளர்களைத் தமிழ்த் தேசியத்தின் அகராதியில் சுத்தமான தமிழர்களாக தமிழ்த் தேசியத் தலைவர்கள் கணிக்கத் தவறினர். இது தமிழ்த் தேசியத்தின் உயர் வர்க்கக் குணாம்சமே தவிர வேறல்ல.

தமிழ் மக்களின் ஜனநாயக, மனித உரிமைகள் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட சிம்மாசனங்களின் கீழே ஒடுக்கப் பட்டன.

சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் சமூக உரிமை கோரி 'சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற பதாகையின் கீழ் நடத்தப்பட்ட வெகுஜனப் போராட்டங்களைப் பற்றி பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியத் தலைவர்கள் 'சங்காய்' போராட்டங்கள்தான் சங்கானையில் நடக்கிறதென்று கேலி பேசியதுடன் சிங்கள வழித் தோன்றல்களின் தமிழ் வாரிசுகள் தான் சாதிச் சண்டை செய்கின்றனர்' என்றும் குறிப்பிட்ட இரு வேறு சமூகத்தினரைக் குற்றம் சுமத்தினர்.

ஆலயப் பிரவேசப் போராட்டங்களில் புகழ் பெற்ற மாவிட்ட புரக் கோயில் போராட்டத்தில் தமிழீழப் பிதாமகரான 'அடங்காத் தமிழன்' தமிழர்களை உள்ளே செல்லவிடாமல் மறித்து நின்ற தமிழ்த் தலைவராக விளங்கினார்.

'ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களை சாதியின் பெயரால் அடையாளப்படுத்தினரே தவிர 'தமிழர்கள்' என இன்றுவரை அடையாளப் படுத்துவதில் தமிழ்த் தேசியத் தலைமைக்குத் தயக்கம் இருந்து கொண்டே வருகிறது.

தமிழ் விவசாயிகள், தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பார் ஆகியோர் பாராளுமன்றத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராலும் போராட்டத்தின் பேராலும் தங்கள் உரிமைகளைத் தியாகம் செய்யும்படி தமிழ்த் தேசியத் தலைவர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களுடைய ஜனநாயகமனித உரிமைகள் மதிக்கப்படாமை போக அவர்கள் 'தமிழ்த் தேசிய'த்தினுள் அடக்கம் பெறாமலே அப்புறப்படுத்தப்பட்டு அந்தப்புரங்களிலே வைக்கப்பட்டனர். இத்தகைய வர்க்கப் பின்புலத்திலேயே தமிழ்த் தேசியம் தன்னை ஆண்ட பரம்பரையின் வாரிசுகளாக வார்த்தெடுத்துக் கொண்டதில் வியப்பேதுமில்லை.

புதிய பூமி
ஏப்ரல், 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04 மதவாதச் சகதிக்குள் தமிழ்த்தேசிய முகங்கள் ஏன் சிதையுண்டன?

தேசியம் கட்டமைக்கப்படும் பொழுது அது உருவாகி வளரும் காலமும் சூழலும் அதன் நிபந்தனைகளை வரையறை செய்து கொள்கின்றன.

இவ்வாறு உருக்கொள்ளும் தேசியத்தின் தீர்க்க மையமாக எவ் அம்சம் முன்னிலைப்படுத்த வேண்டுமென்பதனை வரலாற்றுக் காரணிகளே நியாயப்படுத்துகின்றன.

தேசியம் பல்வேறு முகங்களைத் தன்னகத்தே கொண்டுவந்துள்ளது. ஒடுக்குமுறைக்கெதிராகப் போராட்டம் தீர்மானிக்கப்படும்போது அது முற்போக்கான முகத்தைக் கொண்டு விளங்கும். பிரதான எதிரிக்கெதிராக ஏனைய சக்திகளின் ஜனநாயக, மனித உரிமைகளையும் ஏனைய பெறுமானங்களையும் ஒன்றிணைத்து அவற்றுக்காகக் குரல் கொடுத்து ஐக்கியப்படுத்தும். அது தனது போர்க் குணாம்சத்துடன் மக்கள் சமூக விடுதலையையும் இணைத்துக் கொள்ளும் பல்லினப் பண்பாட்டை அரவணைக்கும்.

தேசியத்தின் முற்போக்கு முகத்துக்கு முரணான இன்னொரு முகமும் உண்டு. அது ஏனையவற்றின் மீது ஒடுக்கலைச் செய்வதற்குத் தன்னைத் தயார்படுத்தி பாசிச முகத்துக்கு மாறும் தன்மையை வெளிப்படுத்தும். எந்த மக்களின் விடுதலைக்காக தேசியம் தோற்றுவிக்கப்பட்டதோ அந்த மக்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிப்பதற்குத் தயங்காமல் தனது ஒடுக்கலுக்கான முகத்தை வெளிப்படுத்தும்.

இவ்வாறாக தேசியம் முதன்மைப்படும் பொழுது அதன் விஸ்வரூபத்தின் கீழ் ஏனைய பெறுமானங்கள் கீழ்மைப் படுகின்றன. இத்தகைய தேசியத்தின் மீது ஆதிக்க அம்சமே வலியுறுத்தப்படும். இத் தேசியப் புனைவின் மீது கட்டியெழுப்பப்படும் அலங்காரத் தோற்றத்தில் அனைவரும் மெய்மறந்து பயபக்தியுடையோராய் நம்பிக்கை வைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுவது தவிர்க்கவியலாத நியதியாகிறது.

தேசியம் ஒடுக்குமுறையினை எந்த வடிவில் எதிர்கொள்கிறதோ அதற்கெதிரான வடிவத்தை உருவாக்குவதே தேசிய நியாயமாகும். ஆனால் ஒடுக்குமுறையின் மையம் ஒன்றாக விருக்க அதற்கெதிராகத் தோற்றம் பெறும் தேசியத்தின் மையப்பொருள் இன்னொன்றாக மாற்றம் பெறுவது ஆதிக்க குணாம்சமுடைய அந்நியரின் தலையீட்டுக்கு வழிவகுப்பதற் கான சான்றாதாரங்களைத் தமிழ்த் தேசியத்தில் நாம் தரிசிக்கலாம்.

இலங்கையின் சுதந்திரத்துக்கு முன் ஆங்கிலேயரின் கொலனித்துவத்துக்கு எதிராக உருவான இலங்கைத் தேசியத் தில் பூகோள வரையறையினடிப்படையில் இலங்கைத் தீவும் மொழியடிப்படையில் சிங்களமும் இணைக்கப்பட்டன. சிங்கள மந்திரிசபை உருவாக்கத்துடன் மொழி முதன்மை மறைக்கப்பட்டு தீவு என்ற பூகோள வரையறையே மையம் கொண்டு சுதந்திரம் வழங்கப்பட்டது.

சுதந்திரத்தின் பின் 1958ல் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டதும் இலங்கைத் தேசியம் பிளவுண்டது. கொல்வின் ஆர். டி. சில்வா 'இரண்டு மொழி ஒரு நாடு, ஒரு மொழி இரண்டு நாடு' என்று குறிப்பிட்டமை நிதர்சனமாகியது. இதனால் இலங்கைத் தேசியம் பல்லினத் தேசியப் பண்பை இழந்தது. மொழி அடிப்படையில் வேலை வாய்ப்பு, உத்தியோக உயர்வு என்பனவற்றில் பாரபட்சம், புறக்கணிப்புக்குட்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் தமிழ் மொழியின் அடிப்படையில் தமது தேசியத்தை தக்கவைத்துக் கொண்டனர். (ஏ.ஜே. கனகரட்ணா தனது 'மத்து' என்ற நூலை தனக்கு தமிழ்மொழி அக்கறையை வலுப்படுத்திய சிங்கள அரசகரும மொழிக்குச் சமர்ப்பணம் செய்தமை சுவையான செய்தியாகும்)

தமிழ்த் தேசியம் ஆரம்பத்தில் முஸ்லிம் மக்களையும் மலையக மக்களையும் தன்னுள் அரவணைத்துக் கொண்டது. 'தமிழ் பேசும் மக்கள்' என அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டனர்.

பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக ஒருபுறம் தமிழ் காங்கிரசும், அதற்கெதிராக நின்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மறுபுறம் 'இன்று அவர்களுக்கு நாளை நமக்கு' என புறம்போக்காக வாசகம் உதிர்த்தமையும் மலையக மக்களை அவர்களது பண்பாட்டின் அடிப்படையில் விலகிச் செல்ல வைத்தது. தமது தேசியத்தை மலையக மக்கள் தாமே தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் கொண்டிருந்த மதசார்பின்மை, தீண்டாமை எதிர்ப்பு, பெண்ணுரிமை, டொனமூர் சிபார்சினடிப்படையிலான தேர்தலின் பகிஷ்கரிப்பு என்ற போராட்ட குணாம்சங்களுக்கு மாறாகத் தோன்றிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சைவத்தையும் சேர்த்துக் கொண்டு தமிழ்த் தேசியத்தை வரையறை செய்தது.

சைவமும் தமிழும் ஒன்றெனவும், சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கும் வேடங் கொண்டு வேட்டி சால்வை, சந்தனப் பொட்டு, திருநீற்றுக் குறிகளுடன் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அரசியல் அவதாரமெடுத்தார். யாழ்ப்பாண சமூகத்துடன் அ.இ.த. காங்கிரஸ் 'சைவத்தமிழ்' எனத் தன்னைக் குறுக்கிக் கொண்டது.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் திறப்பது பற்றி அரசு ஆலோசித்த போது 'இந்துப் பல்கலைக் கழகம்' வேண்டுமென தமிழ் காங்கிரஸ் சிபாரிசு செய்தது. தமிழரசுக் கட்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வநாயகமும் 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' என்று முரசறைந்தனர்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் முதல் தனிநாயகம் அடிகளார் ஊடாக இன்றுவரை தமிழ் தேசியத்தில் சைவத்துக்கு மாற்றீடாக கிறிஸ்தவம் முக்கியம் பெற்றுவந்துள்ளது. தமிழ்த் தேசியத் தலைவர்கள் தமது பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் ஆயர்களின் ஆலோசனைகளைப் பெற்று ஆசீர்வாதமும் பெறத் தவறுவதில்லை. தமிழ் விடுதலை இயக்கங்களும் தமது ஆயுதப் போராட்டத்தில் திருச் சபைகளுடனும் கிறிஸ்தவப் பாதிரிமாருடனும் தமது உறவைப் பேணிக் கொண்டனர்.

வடமேல் மாகாணத்தில் கத்தோலிக்கத் திருச்சபையின் தீர்மானத்தை ஒட்டி ஆயர் எட்மன் பீரிசின் வேண்டுகோளின் படி புத்தளம், சிலாபம் பகுதிவாழ் கிறிஸ்தவத் தமிழர்கள் தங்களுடைய கல்விப் போதனா மொழியை சிங்களமாக மாற்றிக் கொண்டதனால் தமிழ் கிராமங்களே சிங்களக் கிராமங்களாக மாற்றமடைந்துள்ளன.

தமிழ்த் தேசியத்தில் சைவத்தினதும் கிறிஸ்தவத்தினதும் ஆதிக்கம் மேலோங்கியமையால் இஸ்லாம் தனிமைப்படுத்தப்பட்டது. இந்தியத் தமிழகத்தில் 'இஸ்லாமியத் தமிழர்' என்று அடையாளம் காணப்பட்டது போல் இலங்கை முஸ்லிம்கள் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற வரையறைக்குள் தொடர்ந்தும் இருக்க முடியவில்லை. தமிழ் மொழியால் இணைந்திருப்பினும் மதத்தாலும் பண்பாட்டாலும் வேறுபடுத்தப் பட்டிருப்பத னாலும் தமிழ்த் தேசியத்தின் போதாமையினாலும் முஸ்லிம் தேசியம் தனிவழி போனது.

பல்லின தேசியத்தையும் மதச்சார்பின்மையையும் தமிழ்த் தேசியம் அங்கீகரிக்கும் பக்குவம் பெறாதவரை அது நீதி, நியாயத்தின் பக்கத்தில் நிற்பதற்கான வாய்ப்பு அருகிக் கொண்டே செல்லும்.

தென்னாசிய பிராந்திய வல்லரசான இந்தியா அகண்ட பாரதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுத் தேசியத்தைப் பலப்படுத்த, இந்து மதத்தை மையமாக வைத்தே இந்து சமுத்திரம் பிராந்திய அரசியல் வரலாற்றைத் தீர்மானிக்கிறது. எனவே இந்தியாவைப் பொறுத்த வரையில் அது மொழிவழித் தேசியத்தை அங்கீகரிக்கத் தயாரில்லை. தமிழ்த் தேசியத்துக்குப் பதிலீடாக வைணவம், சைவம், பௌத்தம் ஆகியவற்றுக்கிடையிலான சமரசத்தை ஏற்படுத்தி இந்துத் தேசியத்தில் அமைதி காணவிரும்புகிறது.

கொழும்பில் ஆஞ்சனேயர், நம்பொடையில் ஆஞ்சனேயர், நுவரேலியாவில் சீதையம்மன், மட்டக்களப்பில் திரௌபதியம்மன், யாழ்ப்பாணத்தில் கண்ணகையம்மன், மருதனாமடத்தில் ஆஞ்சநேயர், விஸ்வஹிந்து பரிஷத் சமாஜங்கள் ஆகியன இந்திய இராணுவம் **1990**ல் வெளியேறிய பின்னர் வீறுகொண்டு எழுந்தருளத் தொடங்கியுள்ளன. இந்திய இராமனின் அனுமன் மீண்டும் இலங்கைத் தமிழ்த் தேசிய வழிபாட்டில் ஒரு முழுமுதற் கடவுளாக பரிமாணம் பெறத் தொடங்கியுள்ளார். யுத்தத்தின் மூலம் தமிழ்த் தேசியத்தை அழிக்க முடியாவிடினும் பயபக்தியின் மூலம் இலங்கைத் தமிழ் மொழித் தேசியத்தை ஏப்பமிட எத்தனிக்கப்பட்டுள்ளது. மத முதன்மை என்பது கேள்விக்குட்படுத்த முடியாதது. ஆய்விலிருந்து விலக்களிக்கப்படக் கூடியது. திராவிட இயக்கங்களே பார்ப்பனர்களுடன் இரண்டறக் கலந்து கரைந்துள்ளன. புலிகளைப் பிடிக்கும்படி தமிழ்நாடு அரச சட்டசபையில் தீர்மானமெடுத்துத் தனது பாரதப் பண்பாட்டைப் பாதுகாத்துள்ளது.

மகாவம்சம், சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் என்பவர் அந்நியர் என்று ஆசிரியப்பா பாடுகிறது. கந்தரோடை அகழ்வாய்வு பௌத்த குடியேற்றங்கள் பற்றிக் கூறியுள்ளது. யாழ்ப்பாண இடப்பெயர்களில் ஊர்ப்பெயர்கள் சிங்கள பௌத்த உறவைக் காட்டிவிடுமென்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. தமிழில் ஐம்பெரும் காப்பியங்கள் எனப் போற்றப்படும் காவியங்களில் பௌத்த முதன்மை போற்றப்படுகிறது. இதனாலே தமிழ் இலக்கிய ஆய்வுகளில் காப்பியங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவ ஆய்வுகள் கைவிடப்பட்டுள்ளன. அது திருக்குறளைச் சைவசித்தாந்தமாகவே மாற்றிவிடுகிறது. கண்டும் காணாதவாறு தமிழ்த் தேசியம் அமைதி காக்கிறது.

சைவத் தமிழ் மரபே தமிழ்த் தேசிய மரபாக ஒரு புறத்தில் அங்கீகரிக்கப்படும் பொழுது மறுபுறத்தில் கிறிஸ்தவ ஆதிக்கம் தமிழ்த் தேசியத்தின் மேற்குலக மயமாக்கலுக்கு வழிகாட்டித் துணை செய்கிறது.

இந்தியாவிலிருந்து தமிழ் நூல்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்ட 1970-77 காலப்பகுதியில் தமிழ்த்தலைவர் அ. அமிர்தலிங்கம் அதனைக் கண்டித்தார். இந்தியத் தமிழகத்தை ஈழத்தமிழகத்தின் தாய்நாடாகக் கண்டார். தமிழ் நூல் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதில் எச். எம். பி. முஹைதீன் அன்றைய அரசுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். அதனை ஆட்சேபித்து அமிர்தலிங்கம் "யார் அந்த எச். எம். பி. முஹைதீன்" என்று மதத் துவேஷத்துடன் கேள்வி எழுப்பினார். அப்போது அவரது தமிழ் தேசிய வரையறைக்குள் 'தமிழ் பேசும் மக்களில்' ஒருவராக முஸ்லிம்களைக் கண்டுகொள்ள முடியவில்லை. (இந்நூல் இறக்குமதிக் கட்டுப்பாடு ஈழத்திலக்கிய வளர்ச்சிக்கு உந்து விசையளித்தமை கவனங்கொள்ளத்தக்கது)

1972ல் அரசியலமைப்பு உருவாக்கிக் கொண்டிருந்த அரசியல் நிர்ணய சபையில் பௌத்த மதத்துக்கு முதன்மையளிப்பது என்ற ஏற்பாட்டுக்கெதிராக தமிழரசுக் கட்சியினர் வெளிநடப்புச் செய்து பகிஷ்கரித்தனர். பௌத்த மத அங்கீகாரம் தமிழ்த் தேசியத்துக்கு வெறுப்பைக் காட்டியதில், தமிழ் மொழி அக்கறையைக் காட்டிலும் இந்து மதவுணர்வுக்கும் மேலாக கிறிஸ்தவ மத ஆதிக்கமே தமிழ்த் தலைவர்களின் மண்டையைக் கனக்கச் செய்தது என்பதில் வியப்பேதும் இல்லை.

பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட காலத்தில் தமிழ்மொழி பரவலாக போதனா மொழியாக 'சகலருக்கும் கல்வி' வழங்குவ தற்கு அரசாங்கம் தீர்மானித்தபொழுது எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் தலைவர்களுக்கு கிறிஸ்தவ திருச்சபைகள் முண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து ஆலோசனை வழங்கின. தமிழ் மக்கள் மத்தியில் கல்வி பரந்தமை, ஜனநாயகப் பண்பையும் ஆளுமையையும் விருத்தி செய்தமையை தமிழ்த் தேசியவாதிகளால் புரிந்து கொள்ள இயலவில்லை.

கிறிஸ்தவப் பாடசாலைகளையும் இந்துப் பாடசாலைகளையும் வரவேற்றுத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் பௌத்த தமிழ்ப் பாடசாலைகள் பின்தங்கிய கிராமங்களிலே உருவாக்கப்பட்ட போது மத முதன்மை வாதத்தில் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கெனப் பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரிக் கட்டிடங்கள் அரசினால் கையேற்கப்பட்டபோது யாழ்ப்பாணக் கல்லூரிக் கட்டிடங்கள் கிறிஸ்தவ மிஷனிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்பதில் தமிழ்த் தலைவர்கள் விடாப்பிடியாய் நின்றனர். கிறிஸ்தவச் செல்வாக்கு தமிழ்த் தலைவர்களை ஆட்டிப் படைத்தது மட்டுமல்ல யாழ். பல்கலைக்கழகத் திறப்பு விழாவைப் பகிஷ்கரித்ததோடு பல்கலைக் கழக முதலாவது தலைவர் பேராசிரியர் க. கலைசபதியின் வீட்டுக்குக் குண்டெறிந்தமை கண்டு குதூகலமடைந்தனர்.

1984களில் யாழ். நாகவிகாரையைத் தாக்கியழிப்பதில் யாழ்ப்பாணக் கத்தோலிக்க செல்வாக்குக்கு உட்பட்ட குண்டர்படை மிகத் தீவிரமாக இயங்கியது.

1990களின் பின்னர் தமிழ்த் தீவிரவாத முத்திரை குத்தியோர் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகவும் 'கிறிஸ்ரியன் எயிட்' போன்ற பிற நிறுவனங்களினூடாகவும் கோடிக்கணக்கில் காசு வருவாய் பெற்றனர்.

ஒருபுறத்தில் இந்தியாவையும் இந்து மதத்தையும் அண்டியும் கம்பன் கழகம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் வளர்ச்சியடைந்தன. மறுபுறத்தில் கிறிஸ்தவ மேற்குலக நிதியிலும் அரங்க, கலைக் குழுக்களும் இன்னும் பிறவும் ஊட்டம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலர் அமெரிக்கா முதல் அயல் நாடுகளுக்கு தமிழ்த் தேசிய பண்பாட்டை விளக்க காவடியெடுத்து வருகின்றனர். பொங்கு தமிழில் இராணுவத் தின் சப்பாத்து எரிப்பது முதல் 'சிங்கள இராணுவத்தினர் நாற்பதாயிரம் பேரையும் யாழ்ப்பாணத்தில் வெட்டிப் புதைப்போம்' என்று சமாதானத்தின் பேரில் 'யுத்த வெறி'யை விதைக்கின்றனர். சிங்கள- தமிழ்- முஸ்லிம் மக்கள் மத்தியில் மதவெறியை ஊட்டும் தேசிய அகோரக் காட்சியையும் நிகழ்த் திக் காட்டுவது தமிழ்த் தேசியம் மட்டுமன்றி சகல தேசியவெறிக் கோட்பாட்டாளர்களாலும் நியாயப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசியம் மதவெறிக் கூண்டிலிருந்து தப்பிப்பிழைப்பது எப்போது?

மதச்சார்பின்மை என்பது தமிழ்த் தேசியத்தின் குரலாக மாற வழி பிறக்குமோ?

புதிய பூமி
மே, 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05 ஆசனப் பற்றும் ஆதிக்கப் போதையும்

தமிழ் மக்கள் தமது மொழியில் பற்றும் தமது பண்பாட்டில் அக்கறையும், தமது தாயகப் பிரதேசத்தில் தமது வாழ்வும், தமது பொருளாதாரத்தில் விடாப்பிடியான கடின உழைப்பும் சேமிப்பும் மிக்கவர்களாக வாழ்ந்தனர். வாழத்தலைப்பட்டனர்.

மொழி, பண்பாடு, பிரதேசம், பொருளாதாரம் மீது பேரினவாதம் தயவு தாட்சண்யமின்றித் தொடுத்த பாரபட்சம், புறக்கணிப்பு என்பன வளர்ச்சி பெற்றன.

தனிச்சிங்கள மந்திரிசபை, திட்டமிட்ட குடியேற்றம், மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிப்பு, தனிச்சிங்களச் சட்ட அமுலாக்கம், அடையாள அட்டை அறிமுகம், தரப்படுத்தல், இன ஒழிப்புக் கலவரங்கள், பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலப் பிரமாணங்கள், அரச பயங்கரவாதம், தமிழ் மக்களுக்கெதிரான பகிரங்க யுத்தம் எனச் சிங்களப் பேரினவாதம் தலைவிரித்தாடியது.

தமிழ் மக்களை வழி நடத்தத் தலைவர்களும்-கட்சிகளும், விடுதலை இயக்கங்களும் எழுச்சி பெற்றன.

அரசியல் என்பது தலைவர்களுக்கும் கட்சிகளுக்குமுரிய விடயங்களென மக்கள் ஒதுங்கிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் என்பது விடுதலை இயக்கங்களின் செயற்பாடென விரும்பியோ, விரும்பாமலோ, வில்லங்கமாகவோ மக்கள் ஆதரவு செய்தபடி மிகக் கவனமாகவே விலகி நின்றனர்.

தலைவர்களும் கட்சிகளும் விடுதலை இயக்கங்களும் விடுதலைப் பாதைகளை வடிவமைத்தனர். மக்கள் அரசியலிலும்-போராட்டத்திலும் இணையாமலும் விலகாமலும் இருக்கும் படி கடிவாளத்தை மிகக் கவனமாகவே இறுக்கிக் கொண்டனர்.

டொனமூரால் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஆரம்பத்திலேயே எதிர்த்தது. கொலனித்துவ வாதிகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியைத் தமது நேரடி நிர்வாகத்தின் கீழ் வைத்திருந்தது போல 'கருணை'யால் தாமாகவே இலங்கைக்கு வழங்கிய சுதந்திரத்தின் பின்னர் மிகுதி பிற்பாதி ஐம்பது ஆண்டுகளும் அதற்குப் பின்னரும் கூட அவர்கள் வகுத்தளித்த தேர்தல் செக்கையே ஒரே பாதையில் சுற்றிவர இலங்கைத் தலைவர்கள் நிர்ப்பந்திக்கப்படனர்.

தொகுதிவாரி தேர்தலிலும் விகிதாசாரத் தேர்தலிலும் இனங் களுக் கிடையிலான பகைமையும் முரண்பாடும் நன்றாகவே பரஸ்பர ஊட்டம் பெற்று வளர்க்கப்பட்டன.

தேர்தல் காலங்களிலும் போராட்ட காலங்களிலும் தேர்தல் என்பது தமிழ்த் தலைவர்களுக்கும் போராளிகளுக்கும் தக்கதொரு புகலிடமாகவும் அங்கீகாரமாகவும் இருந்தது.

தேர்தலில் வெற்றி பெற்றதும் எந்தக் கட்சிகளைச் சிங்களக் கட்சிகள் என்று தூற்றினார்களோ அவர்களுடன் ஒட்டியும் ஒட்டாமலும் உறவாடி, அமைச்சரவையில் அமர்ந்தும் அமராமலும் அணைந்து தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த தக்கபடியே தமிழ்த் தலைவர்கள் பழகிக் கொண்டனர்.

மக்கள் என்போர் தேர்தல் நாளில் மட்டும் இந்நாட்டின் மன்னர்களாக புள்ளடி போடும் முறையை ஆறுவருடமோ, வருடாந்தமோ முறையாகப் பழகிக் கொண்டனர். தேர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினத்தில் மக்கள், தலைவர்களால் நன்றாகவே மேயப்படுவர். தேர்தலில் வென்றபின் அடுத்த தேர்தல்வரை முறையாகவே மேய்க்கப்படுவர். மக்கள் அரசியல் தமக்காகாதென்று மிக ஒதுங்கியே தமது அன்றாட அலுவல்களில் உழன்று வாழும் தலைமுறைகளாக விட்டு விடுதலையாவார்.

போராட்ட காலங்களில் வரிகொடுக்கவும், வேண்டும் போது வியாபாரி களின் போக்குவரத்து வாகனங்களில் அடைக்கப்பட்டுக் கூட்டங்களில், ஊர்வலங்களில் தமிழ் மக்களின் எதிர்ப்புகளை வெளிப்படுத்தத் தமிழ்த் தேசிய ஆதிக்க சக்திகளால் மக்கள் அவ்வப்போது பயன்படுத்தப்படுவது ஓர் வழக்கமாயே மாறியுள்ளது. தமிழ்த் தேசியப் போராட்ட எழுச்சிபெற்ற 1970களிலிருந்து பாடசாலைகளும் பிள்ளைகளும் மிக நன்றாகவே இதற்காகப் பயன்படுத்தப்பட்டனர்.

தனிச் சிங்கள மந்திரிசபை முதல் அரச பயங்கரவாத யுத்தம் வரை தமிழ்த் தேசியத் தலைவர்கள் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் முதல் ஆனந்தசங்கரி வரை அவ்வப்போது ஒட்டியும்-விலகியும் தமது தமிழ்த் தேசியத் தலைமைக் கற்புக்குப் பங்கமேற்படாமல் தமது உயர்வர்க்க நலன்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

தமிழ்த் தலைவர்கள் என்போருக்குச் சில இலக்கணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அத்தகுதிகளை உடையோரே தலைவர்களாக அங்கீகாரம் பெற முடியும்.

பல்லாண்டு கால ஆதிக்கப் பரம்பரையில் பிறந்தவராக இருக்கவேண்டும்.

தேர்தலுக்கு இலட்சக் கணக்கில் செலவழிக்க வல்லமையுடைய பணபலம் அல்லது வியாபாரிகளின் அனுசரணையும் அரவணைப்புமுடையவராய் இருக்க வேண்டும். வியாபாரியாய் இருந்தால் இன்னும் விஷேசம்.

எங்காவது ஏதாவது படித்தவர் என்று பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது சண்டியர்களின் சகவாசமும் அவர்களைப் பயன்படுத்தும் வல்லமையும் உடையவராய் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மக்களை நையாண்டி பண்ணியும் எதிரிகள் என்று ஏசவும் பயிற்சி பெற்றவராயுள்ள அதே சமயம் சிங்கள அரச தலைவர்களுடன் அளவளாவவும் அணைந்து தமது சுய காரிய அலுவல் பார்க்கவும் கூடிய விசுவாசியாயும் இருக்க வேண்டும்.

சுத்தச் சைவத் தமிழன் என்று பிறர் சொல்லும்படிக்குத் தோற்றமளிக்க வேண்டும் அல்லது அசல் கிறிஸ்தவனாக இருக்க வேண்டும். அதிலும் உயர் வேளாள குலத்தவராக இருத்தல் விரும்பத்தக்கது.

மக்களுடன் சாதாரண இடங்களில் பழகக்கூடியவராக இருக்கக் கூடாது.

தூரத்தில் தொலைவில் கண்காணாத இடத்தில் காட்சிக்கு அரியவராய் இருக்க வேண்டும். அதாவது கண்டபடி எவரும் அவரது வீட்டுக்குச் சென்றுவர முடியாதபடி விலகி இருக்க வேண்டும். கொழும்பில் வசிப்பது விரும்பத்தக்கது.

எதுவும் பேசாமலும் எழுதாமலும் இருக்க வேண்டும். அவ்வப்போது ஏதாவது தீர்க்கதரிசன வார்த்தைகளை உதிர்க்கத் தெரிந்திருத்தல் நல்லது.

கட்டாயமாக காலால் நடந்து செல்பவராகவோ பொது பஸ்களில் பயணம் செய்பவராகவோ இருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். அல்லாவிடின் அவர் ஆயுள் காலத்தில் தமிழ் தேசிய அகராதியில் தலைவராவதற்கு எவ்வித அருகதையும் அற்றவர்.

மெல்லியவராகவோ கறுப்புநிறமுடையவராகவோ இல்லா திருத்தல் விரும்பத்தக்கது. அதாவது சரியாகச் சொல்வதெனில் நிச்சயமாக ஒரு தொழிலாளியாகவோ, விவசாயியாகவோ, வறுமையில் உழல்பவராகவோ, அல்லது ஏழைகளுடன் உறவு பூணுபவராகவோ இருத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

மேற்குறித்த பத்து அம்சங்களும் முழுமையாக வாய்க்கப் பெற்ற ஒருவரே ஆதிக்க போதையுடையவராகவும் ஆசனப் பற்றுடையவராகவும் கணிக்கப்படுவார். எனினும் குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களில் ஏதேனும் ஒரு சில குறைவுபட்டிருப்பின் ஆதிக்க வகுப்பாருக்கு விசுவாசமுடையவராய் ஆதிக்க போதை யுடையவரெனத் தன்னைப் பிரகடனப்படுத்தினால் அவருக்கு விலக்களிக்கப்படும்.

கிட்டத்தட்ட ஆலயத்தின் மூலஸ்தானத்தில் உள்ள முழுமுதற் கடவுளுக்குரிய அம்சங்கள் பொருந்தி வரவேண்டும். விழாக்களுக்கு வெளியே வரும்போது குடை, கொடி, ஆலவட்டம், தேர், சப்பறம், ஆளணி, அடியழிக்கும் பயபக்தியுடைய பக்தர்கள் புடைசூழ ஆடை, ஆபரணம், சாத்துப்படி அலங்காரம் செய்து அழகு பொலியத் தோற்றமளிக்கவேண்டும். அப்போதுதான் தமிழ் ஊடகங்களில் அதிக கவனத்துக்கு உள்ளாகலாம். வேட்டைத் திருவிழாவில் ஊரைச் சுற்றி வருவது போல் ஒவ்வொரு வீட்டாரும் தமது வீட்டு வாசல்களின் முன் வந்த கடவுளுக்கு படையல் வைத்து அர்ச்சனை செய்து வரவேற்பதுபோல் தேர்தல் காலத்தில் மட்டும் ஊராரின் வீட்டுப் படலையைத் திறக்கவேண்டும். கண்டபடி எவரது வீடுகளுக்கும் செல்லக்கூடாது. பெரிய வசதியான இடங்களில் ஹோட்டல்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் கலந்துகொள்வது பரவாயில்லை. மொத்தத்தில் தனது 'இமேஜ்' பழுதாகாமல் தன்னைக் கண்டதும் எவரும் எப்போதும் எழுந்து மரியாதை செய்யவும், காலில் வீழந்து வணங்கி ஆசிபெறவும் கூடிய சிலர் மட்டுமே தமிழ்த் தேசியத் தேவைக்குத் தக்க தலைவர்களாக வரமுடியும்.

இத்தகு முறையான தகுதிகள் பெற்ற ஒருவரே அரசியல் பேசவும் அரசியலில் ஈடுபடவும், தமிழ்த் தேசியத் தலைவர்களில் ஒருவராகத் திகழவும், தமிழர்களின் தன்னிகரில்லாத தலைவராக மிளிரவும் இயலும் என்பதனால் சாதாரண தொழிலாளர், விவசாயக் குடும்பங்களில் பிறந்தவர்கள் அத்தலைவர்களுக்கு அடியாட்களாகவோ அல்லது தொண்டர்களாகவோ செல்லும் பாக்கியம் பெற்றவர்களே தவிர தலைவர்களாவதற்குத் 'தப்புக் கணக்கு'ப் போட்டுத் தலையைக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

இதற்கு வரன்முறையான வசதிகள் வாய்க்கப் பெற்றவர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தமிழ்த் தலைவர்களாக உலாவந்துள்ளனர். முத்துக் குமாரசுவாமி, சேர். பொன். இராமநாதன், அ. மகாதேவா, சி. சுந்தரலிங்கம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், மு. சிவசிதமரம். வீ. ஆனந்தசங்கரி ஈறாக அனைவரும் தந்தை முதல் மைந்தர்கள் சகலரும் இவற்றுக்குள் சங்கமமாவார்.

ஆதிக்க போதை என்பது வர்க்க ரீதியில், பிறப்பில் இருந்து கூடிப் பழகும் குழாம் வரை தக்கபடி வைத்துக் கொள்வது மட்டுமே நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ ஆண்டபரம்பரைக்குரிய வன்மத்தை ஊட்டச்சத்துடன் பேண வழி செய்யும்.

சிங்கள, முஸ்லிம், மலையகத் தலைமைகளுக்கும் இது பொருந்தும். குறிப்பாக மூன்றாமுலக நாடுகளிலுள்ளள ஆதிக்க சக்திகளும் ஏகாதிபத்திய- அந்நிய விசுவாதத் தலைமைகளுக்கும் இவை ஏற்புடையவை.

உலகமயமாதல் திட்டத்தின் கீழ் தமது தேசிய இனங்களின் விடுதலையை விட்டுக் கொடுக்கவும் நாட்டின் சுதந்திரத்தை மேலாதிக்க வல்லாதிக்கங்களுக்குப் பலியிடவும் இத்தகைய குறுந் தேசியவாதத் தலைவர்கள் தயங்கமாட்டார்கள் என்பது உலக வரலாற்றுப் பாடமாகும்.

இத்தகு தலைமைகள் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி அரசியலில் நீடித்து நிற்பதற்கான அங்கீகாரத்தை வழங்குவது பாராளுமன்ற ஆசன அமர்வு மட்டுமே! பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றினால் மட்டுமே இந்நாட்டு மக்கள் முதல் வெளிநாட்டுத் தூதரங்கள் வரை அனைவரதும் பார்வையில் அரசியல் ஆதிக்கம் நிலை நிறுத்தப்படும்.

அதனால்தான் தமிழ்த் தேசியத் தலைவர்கள் அனைவரும் பாராளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்றலே தமது இறுதி இலக்காகக் கொள்வது தவிர்க்கவியலாத் தலையாய பெரும் பணியாகக் கொண்டுள்ளனர்.

தேர்தல்களில் பங்குபெறும் போது மட்டுமே மக்கள் ஒற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டை பிடிப்பதற்குப் பழக்கப்பட்டுள்ளனர். ஐம்பதாண்டு காலத்துக்கு மேற்பட்ட தேர்தல் அரசியல் அநுபவ முதிர்ச்சி பெற்ற மக்கள் குழாத்திற்கு அவ்வப்போது அவர்கள் தலைமீது ஒரு வினா தொடுக்கப்படும். அது என்னவென்றால் கடவுள் வேண்டுமா - பிசாசு வேண்டுமா, ஆண்டவர் வேண்டுமா - சாத்தான் வேண்டுமா, கதாநாயகன் வேண்டுமா - வில்லன் வேண்டுமா, தியாகி வேண்டுமா - துரோகி வேண்டுமா, இரட்சகர் வேண்டுமா - இரணியன் வேண்டுமா, தேவர் வேண்டுமா - அசுரர் வேண்டுமா, சுத்தத் தமிழன் வேண்டுமா - வேண்டாமா என்ற கேள்விகளில் இரட்டையில் ஒற்றை பிடித்து ஒன்றுக்கு புள்ளடி போட்டுத் தமது 'மாபெரும்' அரசியல் கடமையை நிறைவேற்ற மக்கள் 'நன்றாகவே' பயிற்றப்பட்டுள்ளனர்.

இதற்கேற்ப தலைவர், தந்தை, அண்ணன், தளபதி, கடவுள், ஆண்டவர், இரட்சகர், தேவர். கதாநாயகன், தியாகி, தூய தமிழன் என்ற படிமங்ககள் மிக நன்றாகவே பொருந்தும்படி பத்திரிகை, வெகுஜன ஊடகங்கள், சுவரொட்டிகள், கூட்டங்கள், ஊர்வலங்களில் கட்டமைக்கப்பட்டுவிடும். இப்படி மக்களுக்கு வாய்க்கப் பெற்ற தலைவர்கள் தமிழர்களை ஆட்சி பண்ணும் தகுதியும் தன்னாதிக்கமும் பெற்றவர்களாக மக்கள் கணித்து தமது பொன்னான வாக்குகளை மண்ணாக்காமல் தக்கபடி பயன்படுத்தி தமது தலைவர்களைத் தெரிவு செய்வர்.

இதற்காகவே அவ்வப்போது தேர்தல் காலங்களில் பிசாசு, சாத்தான், இரணியர், அசுரர், வில்லன், துரோகி என்ற பட்டங்களைச் சூட்டக் கூடியவர்களை பாராளுமன்ற அரசிய லில் தேடிப் பிடித்து விடுவார்கள். எனவே தேர்தல் மேடைகளில் எவ்வித கூச்சநாச்சமுமின்றித் தூஷித்து 'அவமானம்- வெட்கம்- துரோகம்-இவர்களுக்கு இயற்கை மரணமில்லை' என்று வெட்ட வெளியாகவே மாற்றுக் கருத்துடையோரை தாக்கி மகிழ்ந்து காறி உமிழ்வர். மகாதேவா, ஜீ. ஜீ. பொன்னம்பலம், அல்பிரட் துரையப்பா, பொத்துவில் கனகரத்தினம், டக்ளஸ் தேவானந்தா வரை இத்துரோகிகள் பட்டியல் அவ்வப்போது தேர்தல் காலங்களில் உதவி செய்து வந்த வரலாற்றைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் துரோகிகள் பட்டியல் கால தேவைக்கேற்ப கூடும்- குறையும்- மறையும் அல்லது தொலையும். கூட்டுக்கள் இடைக்கிடை ஏற்படும். இப்போது ஜீ. ஜீ. பொன்னம்பலம் தியாகியாகிவிட்டார். அண்ணன் அமிர்தலிங்கம் தியாகியாக விருந்து இறுதியில் துரோகியாக கொல்லப்பட்டார். சிவ சிதம்பரம் சுடப்பட்டபோது துரோகியானவர் மரணத்தின் போது தியாகி ஆக்கப்பட்டுள்ளார்.

தோழர் சி. கா. செந்திவேல் கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் இத்தியாகப் பட்டங்கள் பற்றியும் துரோகப்பட்டியல்கள் பற்றியும் மிகவும் நேர்த்தியாகவே புட்டு வைத்தாரென்பது இன்று நினைத்துப் பார்க்கும் போதும் அனைத்தும் அப்பட்டமான பம்மாத்துக் கைங்கரியங்களே பாராளுமன்ற ஆசனப் பற்றின் பின்னால் நிறைவேறுகின்றன என்பது துல்லியமாகிறது.

ஆதிக்க சக்திகளின் நிகழ்ச்சி நிரலே பூர்த்தி செய்யப்படுகிறதே ஒழிய ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்களின் தன்னாதிக்கமோ, சுயநிர்ணயமோ, மனித உரிமைகளோ, ஜனநாயகப் பாரம் பரியங்களோ எவ்வித நிகழ்ச்சி நிரலிலும் இடம்பெறாமலே மறைந்துவிடுகின்றன.

இந்தியப் படை நின்றபோது நடந்த 1988ம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியல் பாராளுமன்ற ஆசனத்துக்கான சண்டையில் அண்ணன் அமிர்தலிங்கத்துக்கும் தம்பி வரதராஜப்பெருமாளுக்குமிடையில் நடைபெற்ற அடிபிடி ஞாபகம் வருகிறது.

கூட்டணித் தலைவர் சிவசிதம்பரத்தின் மறைவின் பின்னால் தலைவர் ஆனந்தசங்கரிக்கும்- செயலாளர், தலைவர் சம்பந்தனுக்கும்- மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் அருமைத் தம்பி குமரகுருபரனுக்குமிடையில் நடைபெறும் ஆசனப் பற்றின் மீதான அகோரச் சண்டையின் பின்னால் இருக்கும் அங்கீகாரம் என்ன என்பதை நாம் அனைவரும் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

தங்கள் தனிப்பட்ட தன்னாதிக்கங்கள் பற்றிக் கரிசனை மிக்கவர்கள் தயவு செய்து தமிழ் மக்களின் தன்னாதிக்கம் பற்றியும் சிந்தித்துச் சிறிது நேரமாவது செயற்படுவார்கள் என்று நாம் சமரசம் செய்வதில் அர்த்தமெதுவுமில்லை.

ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை என்பது இலங்கைத் தீவின் சுதந்திரத்துக்கு குழி பறிக்காமல் மக்களின் உரிமைகளைக் குழி தோண்டிப் புதைக்காமல், சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் வல்லமை தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

புதிய பூமி
யூன்-யூலை 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியர் தயவிலும் ஆயுத முதன்மையிலும் தங்கியிருத்தலே தலைவிதி! 06

தமிழ்த் தேசிய அரசியலின் வரலாற்றையும் வளர்ச்சியையும் நாம் நோக்கும் போது ஊற்றுமூலம் ஒன்றானபோதும் ஒன்றாகியும் வேறாகியும் மீண்டும் ஒன்றாகியும் மீண்டும் வேறாகியும் நகரும் திசை மார்க்கத்தை நாம் அவதானிக்கலாம்.

சட்டசபைக் காலத்தில் கொலனித்துவ ஆட்சியுடன் ஒன்றாகியும் பாராளுமன்ற மாற்றத்தின்பின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என ஒன்றாகியும், பின்னர் தமிழரசுக் கட்சி என வேறாகியும், மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி என 'தமிழ் ஈழ' சுலோகத்துடன் ஒன்றாகியும் தேர்தல் காலத்தில் செயற்பட்டனர்.

தேர்தல் விளையாட்டில் சலிப்பேற்பட்டதும் எல்லோரும் ஒன்றாகவே **1984**ல் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தத்துக்கமைய தமிழீழத்துக்கு விரோதமாகச் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்து பாராளுமன்றப் பதவிகளைத் துறந்து பாரதத்துக்கு பாய்ந்தோடினர்!

**1976**ல் தமிழீழப் பிரகடனத்தை வட்டுக்கோட்டை மாநாட்டில் முன்மொழிந்தபோது **1977**ல் வரப்போகும் தேர்தல் கனவுகளில் அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சங்கமித்திருந்தனர்.

**1971**ல் பங்ளாதேஷ் பிறந்தபோது இந்தியப் படையினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுடன் முஜிபுர் ரஹ்மான் தலைவரான காட்சிகளில் 1970 தேர்தலில் தோல்வியுற்ற தலைவர்களும் அவர்களது தம்பியரும் தம்மை மறந்தனர்.

பாரதத் தாயகத்தின் உதவியுடன் யாழ்தேஷ் அல்லது தமிழ் ஈழம் மலரும் என நம்பினர். அல்லது நம்ப வைக்கப்பட்டனர்.

இதற்கு முன்னர் 'சமஷ்டி' என்ற நினைப்பில் 'தமிழரசு' என உச்சரித்து மக்களைத் 'தனிநாடு' பற்றிய கனவுகளில் மூழ்க வைத்த 'காற்சட்ட காந்தி' என வர்ணிக்கப்பட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது தனயர்களூடாக 'இஸ்ரேல்' நாட்டின் உதயம் பற்றி தேர்தல் காலங்களில் உச்சாடனம் செய்வித்தார். இதில் முதன்மையாகச் செயற்பட்டவர் யாரெனில் 'தமிழரசு' உதயமாகாதவரை எனது தாடியை வழிக்க மாட்டேன் என வீரசபதம் பூண்டு மறைந்த சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் வீ. என். நவரத்தினம் 'உலகமெலாம் வாழ்ந்த யூதர்கள் ஒருமுகமாக இரண்டாம் உலகப்போருக்குப்பின் வரவழைக்கப்பட்டு இஸ்ரேல் நாடு உருவானது. பாலைவனம் எவ்வாறு சோலைவனமாக்கப்பட்டதோ அதே போல யாழ்ப்பாண வரண்ட பூமியையும் பூத்துக் குலுங்கும் பொன் விளையும் பூமியாக்குவோம்' என்று இஸ்ரேல் பிறப்பின் முன்னுதாரணம் சிலாகிக்கப்பட்டது.

இஸ்ரேல் என்ற நாட்டின் யூத வெறிமிக்க சியோனிச ஆதிக்க அம்சத்தையோ, ஏற்கனவே இருந்த பாலஸ்தீன மக்களை பரதேசிகளாக்கி -அகதிகளாக அலைய வைத்து- அவர்களது மண்ணைப் பறித்து ஆக்கிரமித்த அடாவடித்தனத்தையோ, உலகச் சண்டியனாக விளங்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அடியாளாக விளங்கும் இஸ்ரேலின் முழுமையையோ தமிழரசால் வசதியாகவே மறக்கப் பட்டது.

தமிழரசின் வீ. என். நவரத்தினம் இஸ்ரேலின் விருந்தாளியாக அதிகமாக அங்கு சென்று வந்தாரென்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்நாம் மீது ஆக்கிரமித்த அமெரிக்காவின் ஜனநாயக மீட்புக்கான பணியை வாயாரப் புகழ்ந்தது மட்டுமன்றி, வியட்நாம் வெற்றிபெற்று அமெரிக்க விசுவாசிகள் வெளியேற்றப்பட்டபோது எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் சுதந்திரன் பத்திரிகையும் கோவை மகேசனும், வட்டிக்கடைக்காரரும் முதலாளிகளுமான இந்தியத் தமிழர் களின் வெளியேற்றம் பற்றி மட்டுமே மிக வேதனைப்பட்டுக் கட்டுரை தீட்டியது. தமிழ் மக்கள் மத்தியில் மாக்ஸியர்கள் மட்டுமே வியட்நாம் விடுதலையை வாழ்த்தி வரவேற்றனர்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களின் கூட்டும் குழைவும் அமெரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் இந்தியாவுடனுமே இருந்தது. அன்றிச் சொந்தநாட்டில் வாழும் விவசாய-தொழிலாளத் தமிழ் மக்களுடனோ பிற தேசிய இனஞ்சார்ந்த முஸ்லிம், மலையக, சிங்கள மக்களுடனோ ஒட்டும் உறவுமில்லாமல் மிகக் கவனமாகவே சகல இனங்களிலுமுள்ள வசதி படைத்த தலைவர்களான முதலாளித்துவ சக்திகளுடன் தமது உறவைப் பேணிவந்தனர்.

சாதாரண சாமானிய விவசாயிகள்-தொழிலாளர் என வாழும் மக்களைவிட அந்நியரின் அரவணைப்பை மிக அதிகமாகவே விரும்பினர். விரும்புகின்றனர். ஆங்கில விசுவாசமும் இன்றுவரை தொடர்கிறது.

தமிழர்களின் தாயகம் இலங்கை என்பதை இவர்கள் ஒப்புக்கொள்வதை விட இந்தியாவே தமது தாயகமெனப் பெருமிதம் கொள்வர். இந்தியாவைத் தாய் நாடாகவோ தந்தையர் நாடாகவோ கொள்வதில் புளங்காகிதமடையும் தமிழ்த் தேசியவாதிகள் இலங்கையை சேய் நாடாகவே இன்றும் உணர்ந்து உள்ளம் மகிழ்வர்.

தேசிய நீரோட்டத்தில் கலந்து வரும் அனைத்து ஆயுத இயக்கங்களும் இந்தியாவை இன்றுவரை இரட்சகராக கருதும் போக்கு அகன்று விடவில்லை. ஏனெனில் 1983ன் பின்னர் சகல விடுதலை இயக்கங்களும் இந்தியாவுக்கு இழுக்கப்பட்டு இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'றோ'வினால் போஷிக்கப்பட்டு ஏ.கே.47 முதல் பல நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டு, முகாம்கள் அமைக்கப்பட்டு வளர்க்கப்பட்டமை வரலாறு. உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கின்ற நன்றி மறவாத் தமிழ்மரபு பேணுதல் எல்லோரதும் கடனே!

தமிழீழப் பிரகடனத்தை தொடர்ந்து 1977 தேர்தல் முழக்கங்களில் மிகப்பிரபலமானவர் வண்ணை ஆனந்தன் என்ற சிறை மீண்ட செம்மலாவார். இவர் தனது தேர்தல் மேடைகளில் 'இலுப்பை பழுத்தால் என்னவரும்' என்று கேட்பார். பின்னர் தானே சொல்வார். 'வெளவால்கள் வரும். தமிழீழம் தரும்' என்பார். கரகோஷம் வானைப் பிளக்கும். அவர் கருதியது தமிழ்த்தேசிய இலுப்பையில் வாக்குகள் சிதறாமல் பாராளுமன்ற கதிரைகள் வந்து நாட்டைப் பிரித்துத் தரும் என்ற நப்பாசையேயாகும். இது பங்ளாதேஷ் உருவாக்கத்தில் போல இந்தியத் தலையீட்டின் தயவிலேனும் தமிழீழம் மலரும் என்ற போதையினாலேயேயாகும்.

வண்ணை ஆனந்தன், 'வெளவால் ஆனந்தன்' என்று வடபுலத்து கொம்யூனிஸ்ட் மேடைகளில் கிண்டல் செய்யப்பட்டார். இந்திய வெளவால்கள் வந்தன. போயின. மீண்டும் 2002 தேர்தலில் 'தமிழர் கூட்டமைப்பு' என்று ஒன்றாகித் தேர்தலில் ஒட்டிப்பிறந்தது.

அதன் தலைவர் ஆனந்த சங்கரியார் வெளிப்படையாகவே வெளிநாட்டுத் தூதுவர்களும் தலைவர்களும் கேட்டுக் கொண்டதன்படியே கூட்டமைப்பு தேர்தலில் ஒன்று பட்டதென்றார்.

ஜெயலலிதா விடுதலைப் புலிகளை இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டுமெனச் சட்டசபையில் பிரேரணை கொண்டுவந்த வேளை இலங்கைத் தமிழர்கள் எதிர்ப்பார்ப்பாட்டங்களை நடாத்தியபோது ஆனந்தசங்கரியார் தமிழகத் தலைவர்களைக் கோபமூட்டவேண்டாம் என்று கடிந்து அறிக்கைவிட்டு தனது அந்நிய விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் விடுதலை இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தமை சரியானபோதும் மக்களை மதியாமையும் மக்கள் மீது ஆயுதங்கள் திணிக்கப்பட்டமையும் பேரழிவுகளை ஏற்படுத்தும் யுத்தப் பிரியர்களாக இயக்க வரலாறுகள் அமைந்தமையும் சகோதரப் படுகொலைகளும் துரோகிகளின் பட்டியலின் தொடர்ச்சியும் நீட்சியுமே தமிழ்த்தேசிய வரலாற்றின் துயராகும்.

விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பானது. மக்களுக்கெதிராக எச்சந்தர்ப்பத்திலும் துப்பாக்கி நீளமுடியாது. குறுநில மன்னர்களாக மக்களை ஆள நினைப்பது விடுதலைப் போராட்டம் சார்பானது அன்று.

யுத்தத்தை முன்னெடுப்பதும் மனிதர்களே ஆயுதங்களாக மாறி மரிப்பது என்பதும் தற்செயலாகவும் தற்காலிகமாகவும் அமையாமல் அதுவே நிரந்தர நிகழ்ச்சி நிரலாக மாறுவதும் ஏகாதிபத்திய ஆயுத வியாபாரிகளின் நவீன ஆயுதங்களிலேயே தங்கியிருந்து டொலர்களைச் சேர்ப்பதும் குவிப்பதும் சிந்துவதும் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குப் பலம் சேர்ப்பதற்குப் பதிலாக ஊறும் கேடும் விளைவிப்பதுடன் ஆயுத வியாபாரிகளை வழிநடத்தும் ஏகாதிபத்திய வலைகளிலே வீழவும் வாழ்வைத் தொலைக்கவும் உதவுமே தவிர மக்களின் மீட்சியைக் காண உதவாதென்பதே வரலாறு கற்றுத் தரும் பாடமாகும்.

மீளவும் திருமலையில் இந்திய வௌவால்கள்! வானத்திலும் கடலிலும் அமெரிக்க வௌவால்கள்! வௌவால்களின் வரவுக்காக வாசலைத் திறந்து காத்திருப்போம்! மாலையிட்டு வரவேற்கப் போட்டி போட முனைவோம். இதுதான் தமிழ்த் தேசியத் தலைவிதியா?

புதிய பூமி
ஓகஸ்ட 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07 ஆணாதிக்கச் சிந்தனா முறையும் பெண்களை ஆராதிக்கும் பாசாங்கும்

'தமிழ்த்தாய் தலைவிரிகோலமாய் நிற்கிறாள். கண்ணீர் சிந்துகிறாள். தன்மானத் தமிழர்கள் தலைநிமிர வேண்டுமெனில் தமிழ்த்தாயின் துயர் துடைக்கப்பட வேண்டும். ஐம்பெருங்காப்பியங்களை அணியாய்ப் பூண்ட தமிழ்த்தாயின் பேரில் தமிழர்கள் அனைவரும் அணிதிரள்வோம்' என்றிவ்வாறெல்லாம் பெருமுழக்கம் செய்வார்கள் தமிழ்த் தலைவர்கள்.

இந்து மதத்திலே இறைவன் சிவனார் தனது இடது பக்கத்திலே உமையை அமர்த்தி அந்தஸ்து வழங்கி அர்த்த நாரீஸ்வரராகக் காட்சியளிப்பார். ஆலயத்திலே வீதிவலம் வரும்போது அம்மையப்பன் ஒருருவில் இருப்பினும் அப்பன் அமர்ந்திருக்கும் வலப்பக்கமாகவே வீதி வலம் வருவது பக்தர்களின் பரவச நடத்தையாகும்.

நற்காரியங்களிலும் சடங்கு சம்பிரதாயங்களிலும் வலதுகாலை முன் வைத்துப் பழகிப்போனவர்கள் தமிழர்கள். திருமணங்களிலும் வீடியோப் படங்களிலும் நின்று போஸ் கொடுப்பது வழக்கமான சடங்காகிவிட்டது.

ஆண் பெண் வேலைப்பிரிவினையே முதலாவது உற்பத்தி முறையிலேற்பட்ட பிரிவினையாகும். வலதுசாரிகளின் வரலாறும் பண்பாடும் தேசியமும் ஆணாதிக்க முதன்மையையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தி வந்தமையே நிதர்சனமாகும்.

பெண்களின் வாழ்வும் வரலாறும் பண்பாடும் இடதுசாரிகளின் சங்கதிகளாகவே கண்டுகொள்ளப்படுவதே உண்மையாகிறது. இதற்குத் தமிழ்த் தேசியவாதிகளும் என்ன விதிவிலக்காகவா போகிறார்கள்? வர்க்க நலனும் ஆணாதிக்க நலனும் இணைபிரியா உடன்பிறப்புக்களாக உலாவருவதை நாம் சமகாலச் சம்பவங்களின் மூலம் அன்றாட வாழ்வில் கண்டு அனுபவிக்கலாம்.

அம்மையப்பன் முதல் அனுராதா வரை அழகு ராணி ஐஸ்வர்யா முதல் பாளையத்து அம்மன் வரை பத்தினித் தெய்வங்கள் முதல் பரத்தையர் வரை ஆணாதிக்கத்தின் வணிக உலகின் விளம்பர யுக்திகளுக்கு விலைபோனவர்களாகவே பெண்கள் கணிக்கப்படும் அவலம், சர்வதேசச் சமூகம் முதல் தமிழ்த்தேசியம் வரை வியாபித்துள்ளதை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்ற பாரதியின் புதுமைப் பெண்ணைப் புரிந்துகொண்டவர்களாகவோ 'பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீராது' என்ற பாரதிதாசனின் தமிழ்த் தேசிய நவீனப் போக்கின் மீது அக்கறை கொண்டவர்களாகவோ தமிழ்த் தேசியத் தலைவர்கள் தமிழ்ச் சமூகத்தில் தம்மை அடையாளப்படுத்தத் தவறிவிட்டனர்.

சிங்களப் பேரினவாதத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்தும் மையமாகத் தமிழ்ப் பெண்கள் மீது அக்கறை கொண்டவர்கள்போல் தமிழ்த் தலைவர்கள் தம்மைக் காட்டிக்கொண்டனர்.

1958 முதல் 1983 வரை இனவன்முறைகளின் போதும் அவ்வப்போது யுத்த முன்னெடுப்புக்களிலும் தமிழ்ப் பெண்களின் பாதிப்புக் கவ னிக்கப்பட்டதும் இனவுணர்வை ஊட்டி வளர்ப்பதற்குக் 'கற்பு'ம் காணிக்கையாக்கப்பட்டு வெறிகொண்ட தமிழ் உருவேற்றத்திற்கு தமிழ்ப் பெண்கள் பயன்படுத்தப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமுரண்பாடு முதல் குடும்பமுரண்பாடுகள் வரை தமிழர் சமூகத்தில் சாதிப் பிரச்சினை, ஊர்ப் பிரச்சினைகளில் பெண்களையே பண்பாட்டு மையப் பொருளாகக் கருதி, உண்மையான பிரச்சினைகளை ஊதிப் பெருக்க வைத்து உருக்குலைத்துச் சீரழிப்பதே வரலாறாகியதே தவிர, பெண்களின் வர்க்க-பாலின சிக்கல்களைத் தெளிவுபடுத்தி தமிழர் சமூகத்தில் பெண்களின் ஸ்தானத்தை உறுதிப்படுத்த இயலாது போய்விட்டது.

பொதுவாழ்வில் பெண்களின் பங்களிப்புக்குக் கௌரவம் வழங்காமை மட்டுமன்றி அங்கீகாரம் வழங்குவதுமே அருகிவிட்டது.

தனிப்பட்ட சொந்த, சுயலாபம் ஈட்டக் கூடியதும் தொழில்சார் வருமானந் தரக் கூடியதுமான செயல்களில் பெண்கள் ஈடுபடவேண்டிய பொருளாதார நிர்ப்பந்தம் சமூகச் சூழலில் ஏற்பட்டமை தவிர்க்க இயலாத நிலையென்பதனால் அதனைச் சகித்துக் கொள்ளத் தமிழர் சமூகம் பழகிக்கொள்ள வேண்டியதாயிற்று.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிநாட்டுப் பயணங்கள் பல மாதங்களாக முன்பின் தெரியாத முகவர்களுடன் பெண்கள் தனித்துச் செல்வதும் முகவர்களுடன் முறைக்காமல், கோபிக்காமல் நடந்து பயணத்தை நிறைவு செய்யும்படி பெற்றோர் முதல் கணவன் வரை சகலரின் ஆசிர்வாதமும் ஆலோசனையும் வழங்கும் நடப்பியல் தோன்றிவிட்டது. எனினும் ‘கற்பு’ பற்றிய ஐதீகங்கள் இன்றுவரை கட்டுடைக்கப் படவில்லை.

பொதுவாழ்வில் பெண்களின் ஈடுபாடு தமிழ்த் தேசியத்தில் ‘விளம்பரப்’ பாணியில் அங்கீகரிக்கப்படுவதே தவிர, நெருக்கடி நேர நிவாரணியாகக் கருதப்படுவதேயொழிய எக்காலத்திலும் குடும்ப-சமூகச் சூழலில் அங்கீகரிக்கப்படாமை போகச் சகிக்கப்படுவதனைக் கூடக் காண முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வாழ்வியல் சமகாலத்தில் அரசியலில் ஈடுபட்ட மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் அரசியல் அநாதையாக்கப் பட்டுள்ளார். சரோஜினி யோகேஸ்வரன், ராஜினி திரணகம ஆகியோரின் எழுத்தும் வாழ்வும் இல்லாதொழிக்கப்பட்டன. இயக்க வரலாற்றில் ஊர்மிளாவின் வரலாறு மறைந்துவிட்டது. பூபதி அன்னை பூபதியானார்.

தமிழர் விடுதலை இயக்கங்களில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதும் பெண்களுடன் தொடர்பு வைப்பதும் தவறு எனக் கண்டிக்கப்பட்டதுமான சிந்தனைமுறை ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும் பின்னாட்களில் இராணுவமாக அங்கீகரிக்கப்பட்டமையும் சிறுவர் பராமரிப்பு நிருவாகிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் 'நெருக்கடி நிவாரணியாக' கொள்ளப்பட்டதே தவிர தமிழர் சமூகத்தில் பெண்களுக்கு அத்தகைய சமூக அங்கீகாரம் இன்றுவரை மறுக்கப்பட்டே வருகிறது. குடும்பவாழ்வில் அவர்கள் போராளிகளால் ஏற்கப்படுவார்களே தவிர தமிழர் சமூகத்தால் அல்ல.

பெண்களை ஏற்பதும் நிராகரிப்பதும் என்பது ஆண்சார், சமூகக் கடமையாகிறதேயொழிய, 'தியாகம்' எனப் பட்டம் சூட்டப்படுகிறதே தவிர பெண்களின் ஸ்தானம் இன்றுவரை நிதானிக்கப்படவில்லை.

திருமணம் மட்டுமே பெண்களுக்கான சமூக அங்கீகாரம் ஆகும். அல்லது பெண்களைத் தெய்வங்களாக்கி வழிபடுவதே கௌரவமாகும். அவ்வாறில்லையெனில் துர்க்கையம்மனின் தோற்றத்தை வெளிப்படுத்திய துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் உருவப்படத்துக்கு உயிருடன் வாழும் போதே பொட்டிட்டு மாலை சூட்டும் அவலம் கொழும்பில் ஏற்பட்டிருக்காது.

பெண்களுக்குப் பூவும் பொட்டுமே பொதுச்சின்னமாகி விட்டது. சீதன முறைமைபற்றிச் சிறிதும் சிந்தனையிலேனும் பாதிப்பேற்படுத்தப்படவில்லை. சில 'தியாகங்கள்' அவ்வப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப்பட்டாலும் சீதனம் சமூக நியதியாகிவிட்டது.

பெண்கள் 18 வயதில் சட்ட அங்கீகாரம் பெற்றாலும் தேச வழமைச் சட்டத்தின் கீழ் அவர்கள் 40 வயதில் திருமணமானாலும் தமது தனித்துவ ஆளுமையை இழந்தவர்களாகக் கருதப்பட்டுப் பராயமற்றவர்களாகவே (Minors) கணிக்கப்படுவர். அப்பெண்மணி தாரமாகி, தாயாகி, பேத்தியானாலும் தனது சொத்துரிமை தொடக்கம் சகல சட்ட நடவடிக்கைகளிலும் தனது நாயகனின் பூரண சம்மதத்துடனேயே கருமங்களை ஆற்றலாம். கைம்பெண்ணானால் மட்டுமே விலக்குண்டு.

தமிழ்த் தலைவர்கள் பலர் சட்ட மேதைகளான போதும் தமிழ்ப் பெண்களின் உரிமை, கடமைகள் பற்றிய தேசவழமைச் சட்டத்தின் பாதிப்புக்களைப் பற்றிப் பாராமுகமாகவே இருந்துள்ளனர்.

வீட்டுவேலைகளுடன் முடக்கப்படுவதும் அல்லது சற்று அதற்கு மேலாய் எனில் ஆசிரியராகவோ, தாதியாகவோ வேலை பார்ப்பதும் ஏற்றுக் கொள்ளப்படலாம். கூலித் தொழிலாளர்கள் மத்தியில் ஆண் - பெண் சம்பள வேறுபாடு முதல் அனைத்துத் தனியார் நிறுவனங்களிலும் பெண்கள் மீது பாரபட்சம் காட்டப்படுவதே தமிழர் வாழ்வியலின் இயல்பாகிவிட்டது. பெண்கள் மீது வீட்டு வேலை திணிக்கப்பட்டுள்ளதுடன் 'பூவையர்க்குப் பொது ஞாயம் கூடாது' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆலயங்களில் சுமங்கலி பூசை என்பது மிகப்பிரமாண்டமான அளவில் முன்னெடுக்கப்பட்டு ஆலய வியாபாரமாகிவிட்டது. பெண்கள் சேலைகளுடனும் பூவும் பொட்டுடனும் வாழவே ஆணாதிக்கம் நிர்ப்பந்திக்கிறது.

தமிழ்நாட்டுத் தலைவர்களின் வீரியம், முருகனை விட மேலாக இரண்டு மனைவியரிலும் அதிகமாகக் கொண்டிருப்பதே அரசியல் கௌரவம் ஆக்கப்பட்டுள்ளது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பராமயணத்தில் சீதையின் கற்பு மீளமீளப் பட்டிமன்றங்களில் தமிழ் அறிஞர்களால் பரீட்சிக்கப்பட்டு வருகிறது. அதற்கு அங்கீகாரமும் பாராட்டும் வழங்கப் பெரும் படையணியே மொய்த்து வருகிறது.

ஆலயங்களில் இரு தசாப்தங்களின் முன்னர் சின்ன மேளங்கள் ஆடப்பட்டு பரத்தையராகக் கணிக்கப்பட்ட கண்ணோட்டமே தமிழ் நாடகக் கலைகளில் ஈடுபடுவோருக்கு ஏற்படுவதனால் தமிழில் தொழில்சார் நாடகக் கலையே அழிந்துவிட்டது.

புதிய வணிகப் பொருளாதாரத்தின் கீழ் பெண்களின் சுயம்வர விளம்பரமாகவே 'பரத நாட்டிய அரங்கேற்றம்' நிகழ்ந்து முடிகின்றது. கலையம்சத்தை விடப் பலமடங்கு வணிக அம்சமே மேலோங்கியுள்ளது.

சுயநிர்ணய உரிமைக்காகவும் தேசிய விடுதலைக்காகவும் போராடும் தமிழ்த் தேசிய போரில் விதவைகள் பெருகியுள்ளனர். விதவைகள் மறுமணம் காணக் கிடைக்காது.

'செத்தவன் பெண்டிலைக் கட்டினாலும் விட்டவன் பெண்டிலைக் கட்டக்கூடாது' என்ற விவாகரத்து உரிமைக்கான பெண்களின் உரிமையை, தமிழ்த் தேசியம் தனது சுயநிர்ணயப் போராட்டத்தினை நடத்தினாலும் இன்னும் இன்றும் அங்கீகரிக்கத் தயாரில்லாத நிலையே நீள்கிறது. பெண்கள் இன்றுவரை பாதிப்புக்குள்ளாகும் பாலியல் பிரச்சினை இன்று வரை பேசாப் பொருளாகவே உள்ளது.

அரசியல் வேறு வாழ்க்கை வேறு என்பது தமிழ்த் தேசியத்தின் தாரகமாகுமா? பெண்ணின் விடுதலையே மண்ணின் விடுதலையாக மாறும் நாள் எந்நாளோ!

புதிய பூமி
செப்டம்பர், 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 பணம் படைத்த முதலாளிகளே சுத்தத் தமிழர்கள்! ஏழைத் தொழிலாளர் தமிழர் ஆகார்! ஆதிக்கத் தமிழ்த்தேசிய ஆதார சுருதி!

தமிழ்த் தேசியத்தின் முளையிலேயிருந்து தன்முனைப்பு என்பது மேலோங்கி வளர்ந்து விஷ விருட்சமாகியது. இத்தகைய தமிழ்த் தேசியம் என்பது சமூகரீதியிலே ஒடுக்கப்பட்ட மக்களைத் தனது கடைக்கண்ணால் கூடப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டது.

மக்கள் மீது ஏழ்மை, எளிமை, கருணை, அன்பு, தன்னடக்கம் என்பவற்றைக் கொண்ட தலைவர்களையும், தொண்டர்களையும் காண்பது அரிதாகவே இருந்தது. மாறாகப் பண வருவாய், ஆடம்பரம், அடங்காத்தன்மை, அடியார் கூட்டம் என்ப வற்றுடன் கூடிய ஆணவம் மிக்க தன்முனைப்பே தமிழ்த் தேசியத் தன்னடையாளமாகத் தன்னை முன்னிலைப்படுத்தியது.

இத் தன்முனைப்பின் தவிர்க்கவியலாப் பண்பாக அழுக்கற்ற, கசங்கலற்ற, ஆடை அணி பூண்டவர்களும் பட்டு வஸ்திரம் பூண்ட நகையலங்காரம் மிக்க நெஞ்சர்களுமாக விளங்கிய பண முதலைகளே தமிழ்த் தேசிய ஆத்மார்த்தத் தொண்டர்களாகவும் தலைவர்களாகவும் விளங்கினர்.

தமிழ்த் தேசியத்தின் தெரிவாக அலங்காரப் பிரியர்களும் ஆடம்பரத் தாசர்களும் அந்நியப் போகர்களுமே தேறினர் என்பதற்கு மேலாய் அத்தகையவர்களால் புடைசூழப்பட்டதோர் கூடாரமாகவே அது வளர்ச்சி பெற்றமை வரலாறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தொழிலாளி' என்ற அடையாளம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 'தொழிற்சங்கம்' என்பது மேற்கத்தியச் சிந்தனை வெளிப்பாடு எனக்கருதி 'ரஷ்யாவில், சீனாவில் மழை பெய்தால் யாழ்ப்பாணத்தில் குடைபிடிப்பார்கள்' என்று தொழிலாளி, தொழிற்சங்கம் என்ற பதங்களைக் கேட்டதுமே துடித்தார்கள் பண முதலைகள்.

'முதலாளி' என்போரே சுத்தத்தமிழர் என வரைவிலக்கணப் படுத்தப்பட்டனர். பாராளுமன்ற சந்தர்ப்ப அரசியலில் முதலாளிமாரே ஆசனங்களைத் தீர்மானிக்கும் வல்லமை பெற்றோராவர்.

வட-கிழக்குப் பிரதேசமெங்கும் 1950களின் பின்னர் தொழிற்சாலைகள் உருவாகி வளர்ச்சி பெற்றபோது தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்கவும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தொழிலாளர்களின் உரிமைகளை அனுபவிக்கவும் அனுமதிக்கப்படாமல் முதலாளிமார் தமிழ்த் தேசியத்தின் அரவணைப்பில் அடாவடித்தனம் புரிந்த வரலாறு மறுக்கப்பட்டுவிடக் கூடியதல்ல.

வாழைச்சேனை காதிதத் தொழிற்சாலை, திருகோணமலைத் துறைமுகம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வல்வை நெசவாலை, யாழ். மாநகரசபை ,மில்க்வைற் சோப் தொழிற் சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, பீடித் தொழிற்சாலை கள், சுருட்டுத் தொழிற்சாலைகள், சினிமாத் தியேட்டர்கள் எனத் தொழிலாளர் கூட்டம் வளர்ச்சி பெறத்தொடங்கியது.

தோழர்கள் தர்மகுலசிங்கம், துரைராஜசிங்கம் ஆகியோர் தனி யார் பஸ் கம்பனித் தொழிலாளர் சங்கம், சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றை அமைத்து அரும் பணியாற்றிய லங்கா சமசமாஜக் கட்சியினராவர்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமையில் தொழிலாளர்கள் அணி திரட்டப்பட்டனர். தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் சகல தொழிற்சாலைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டுப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் தொழிற்சங்க உரிமை உட்படத் தொழிலாளர் கோரிக்கைக்கான போராட்டங்களில் தோழர்கள் நா. முத்தையா, சந்தியாப் பிள்ளை, கே. ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் தமது தொழிலை இழந்தனர்.

வல்வை நெசவாலைத் தொழிற்சாலையில் தொழிலாளர் கோரிக்கைமீது நடந்த தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக தமிழ் முதலாளி அப்பகுதியின் நியாயாதிக்கத்துக்குரிய வல்வெட்டித்துறைப் பொலிசாரின் உதவியை நாடினார். அது மறுக்கப்படவே கே. கே. எஸ். பொலிசாரின் அடாத்தான நுழைவுடன் வல்வை நெசவாளர் போராட்டத்திற்கு எதிராக, தொழிலாளர் போராட்டத்திற்கு எதிராகத் தொழிலாளர் மீது தாக்குதல் ஏவப்பட்டது. இத்தாக்குதலில் தோழர் சி. கா. செந்திவேலும் வேலைநிறுத்தத் தொழிலாளர்களும் தாக்கப்பட்டனர். அப்போது வயல்களில் வேலை செய்த விவசாயிகள் திரண்டு பொலிசாரைத் தாக்கி விரட்டியதைத் தொடர்ந்து அத்துமீறித் தலையிட்ட கே. கே. எஸ். பொலிஸ் சார்ஜன்ட் தனது துப்பாக்கியைப் பறிகொடுத்ததுடன் தற்கொலை செய்துகொண்ட சம்பவமும் நேர்ந்தது. வல்வை நெசவாலைத் தொழிலாளர் தமது உரிமைகளைப் பெற்றுக்கொண்டனர்.

மில்க்வைற் முதலாளியின் திருக்குறள் பிரச்சாரமும், பகவத்கீதை சுலோங்கங்களும் தொழிலாளரின் கடமைகளை வலியுறுத்தினவே தவிர தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க மறுத்ததுடன் தொழிற்சங்க உரிமைகளும் நிராகரிக்கப்பட்டன. இதற்கெதிராகவும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் போராடி வெற்றிபெற்றமை வரலாறாகும். மில்க்வைற் முதலாளியின் 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற ஒற்றைவழிப் பிரச்சாரமே தமிழ்ப்பணியாகக் கணிக்கப்பட்டதன்றித் தொழிலாளர் என்ற சமூகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்தேசியம் கண்டுகொண்டதாகவே காட்டிக் கொள்ள வில்லை. இம்முதலாளிக்கே யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது.

யாழ். மாநகரசபைத் தொழிலாளரின் தொழிற்சங்க உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தபோது தோழர்கள் சண், எம் ஏ. சி. இக்பால், சி. கா. செந்திவேல், கா. பஞ்சலிங்கம் ஆகியோர் முன்னின்று வழி காட்டினர். அல்பிரட் துரையப்பா, நாகராஜா, விஸ்வநாதன் வரை, அப்போது யாழ் மேயராக இருந்தோர் தொழிலாளர்களை உதாசீனம் செய்தே செயற்பட்டனர். ஆணையாளர் சி. வி. கே. சிவஞானம் வேலைநிறுத்தம் காரணமாக ஆஸ்பத்திரியிலிருந்தபடி தொழிலாளரின் கோரிக்கைக்கு உடன்பட்டு ஒப்பமிட நேர்ந்ததே தவிரத் தமிழ்த் தேசியத்தின் நிகழ்ச்சி நிரலிலே தொழிலாளர் என்ற வர்க்கத்தினரின் நலன் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படவில்லை. அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் என்பனவும் மாக்சி யக் கட்சினரின் செல்வாக்கிலேயே உதயமாகின.

பின்னர் நாளடைவில் தமிழ்த்தேசியம் மத்தியதர வகுப்பாரின் மனோநிலைக்கேற்ப அவர்கள்மீது 'தொழிலாளர்' என்ற வரைவிலக் கணத்துக்கு அப்பால் 'உத்தியோகத்தர்' என்ற மேலாண்மையை உருவேற்றி ஊழியர், தொழிலாளர் என்ற பதம் வராதபடி 'தமிழ் அரசாங்க எழுது வினைஞர் சங்கமாக' புடம்போடப்பட்டது. இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு மாற்றீடாக 'தமிழாசிரியர் சங்கம்' உருவானது. இங்கு தமிழ் என்ற சொல்லை வைத்துச் சிலம்பமாடப்பட்டது போக, இது தவிர தொழிலாளர் என்ற வர்க்க சமூக உணர்வை மறுதலிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியேயாகும்.

தமிழ்த் தேசிய வரலாறு தனது 'உயர் வர்க்க குணாம்சக் கற்பு' களங்கப்படாமல் தன்னைப் பாதுகாத்துக் கொண்டதில் இதுவரை வெற்றி பெற்றுள்ளது.

தொழிலாளர் எனத் தமிழர்களாகப் பிறந்து வாழ்வோரை இனந் தெரியாதவர்களாகவே தமிழ்த் தேசியம் கருதிவருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை அனுமன்வால்போல் நீண்டு வருகிறது.

பாராளுமன்ற வாக்களிப்பு முதல் சமகாலப்போராட்டம் வரை தமிழ்த் தேசியத்தின் முதுகெலும்பாக வர்த்தகர் சங்கங்களே விளங்குகின்றன.

வர்த்தகப் பண முதலாளிகளின் வாகனமும் காசும் கையாட்களும் தமிழ்த் தேசியத்தின் காப்பாளர்களாகத் தம்மைக்காட்டி வருவதே நடைமுறையாகும்.

தொழிலாளர் என்போர் இன்னும் தமிழர்களாக அங்கீகரிக்கப் படவில்லை. சமூகப்பற்று, மொழிப்பற்று, தேசியப்பற்று, நாட்டுப்பற்று என்பவற்றுக்கு மேலாகப் பணத்தின் மீதான பற்றே சுத்தத் தமிழ் முதலாளிமாருக்குரியது. இச்சுத்தத் தமிழர்களிடம் தமிழ்த் தலைமை தப்பிப்பிழைத்துத் தமிழ்த் தேசியம் விடுதலைபெறும் சமூக - மானுட விடுதலையை எதிர்பார்க்கலாமா?

புதிய பூமி
ஒக்ரோபர் 2022

 சோ. தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பேரரசில் விவசாயிகள் தமிழர்களாகக் கணிக்கப்படுவார்களா? 09

காதலும் வீரமும் போனால் தமிழுக்கு வேறு கதி இல்லை என்றாகி விட்டது. உழைப்பைப் பற்றிச் சிந்திப்பதற்கு வள்ளுவரிலும் பாரதியிலும் மேடைப்பிரசங்கத்துக்கு மேற்கோள்களாகப் பயன்படுத்தும் வரிகளை தவிர்த்துவிட்டால் உள்ளத்தில் வேறு எதுவும் மிஞ்சப்போவதில்லை.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வார்' இக்குறள் இரண்டாயிரமாண்டுப் புளித்துப் போன வாசகம் போலாகிவிட்டது. இதை நம்பி கடன்பட்டு வட்டி கொடுத்து இலங்கை எனும் கிராமங்கள் சூழ்ந்த விவசாய நாட்டில் உழைத்த விவசாயிகள் உருக்குலைந்தும் அநேகர் தற்கொலை செய்து கொண்டமையும் சமகாலச் சான்றுகளாகும். இன்று விவசாயிகளே தொழுதுண்டு பின்செல்லும் அவலம் ஏற்பட்டுவிட்டது. கிராமங்கள் வறுமையில் வாடுகின்றன, விவசாயக் காணிகள் கையிழக்கப்படுகின்றன,

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்

உண்டு கழிப்போரை நிந்தனை செய்வோம்'

என்பது பாரதியின் சங்கநாதமாகும். எனினும் உற்பத்தியில் உழைப்பில் ஈடுபடாமல் மூலதனம் உள்ளவனே உலகை ஆளும் வல்லமை பெற்றுள்ளான். அவன்தான் சரண் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிந்துள்ளோம்.

'கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த

தொழிலாளி விவசாயி! விவசாயி!'

என்ற பாடல் கண்ணதாசன் எழுதி ரி. எம். சௌந்தரராஜன் பாடி எம். ஜி. ஆர் நடித்த பிறகும் கூட தமிழகமெங்கும் விவசாயி தோளில் சால்வையை எடுத்துக் கூனிக்குறுகி நிற்பதையே காணமுடிகின்றது.

எந்தவொரு அரச, தனியார் அலுவலகத்திலோ அல்லது எந்தவொரு தமிழ்ப் பெருமகனார் முன்னிலையிலோ சென்று "நான்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. விவசாயி வந்திருக்கிறேன்" எனக்கட்டியங் கூறி அறிமுகப்படுத்தினால் எவரும் இருக்கை கொடுத்துக் கௌரவிப்பார்களா?

ஒன்றும் வேண்டாம், செத்தவீடு, கலியாண வீடுகளில் ஒரு விவசாயி சென்று அங்கு வெட்டிப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கும் விளலலம்பிகளிடம் தன்னை விவசாயி என வெளிப்படுத்தினால் ஏதேனும் ஒரு கணிப்புக் கொடுத்துத்தான் எவரேனும் கதைப்பார்களா? அங்கே தன்னும் அந்த விவசாயியின் வாய்ச்சொல்தான் எடுபடுமா?

விவசாயிகளின் வாழ்வும் இருப்பும் இன்று அச்சுறுத்தப்படுகின்றன. நிச்சயிக்கமுடியாத நிலைமையில் வறுமையில் சுழல்வதே அவர்களின் விதியாகிவிட்டது. கிராமங்களில் நோயும் பிணியுமே அவர்களின் முதுசொம் ஆகிவிட்டன. நகரங்களில் உற்பத்திசாரா பொருளாதாரச் சூதாட்டமே செல்வத்தை ஒரு சிலரின் கரங்களுக்கு உரித்தாக்கிக்கொண்டுள்ளன.

இதற்கு இலங்கையை இரையாக்கிய பெருமை ஜே. ஆர். முதல் இன்றைய சகல தலைவர்களையுஞ் சாரும். இதில் எவரும் சிங்கள - தமிழ் வேறுபாட்டுடன் தனித்துச் செயற்படவில்லை. தமிழ்த் தேசியமே இதில் முதல் பலியானது. இலங்கையைச் சிங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூராக மாற்றும் பணி எமது சிந்தையில் வியாபித்துவிட்டது.

'எல்லாம் சிவமயம்' என்று வாழ்ந்த சமூகத்தில் இன்று 'எல்லாம் உலக மயம்' ஆகிவிட்டது. எங்கள் உற்பத்தி உலகமெங்கும் செல்ல முடியாது. எல்லா உலகிலும் உற்பத்தியாகும் கிழங்கு, வெங்காயம் முதல் முட்டை, மீன் வரை இங்கு இறக்குமதியாகி எங்கள் விவசாயிகளையும் மீனவர்களையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

நகர மானுடரின் நுகர்வுப் பண்பாட்டுத்தேவையே முதன்மைப் படுகின்றது. உலமயமாதல் ஒட்டகம் உள்நுழைய அனுபதி கிடைத்துவிட்டது. இலங்கை சிங்கப்பூராகாவிடினும் தமிழீழம் சிங்கப்பூராக மாறும் என்ற சன்னதம் தொடங்கியுள்ளது.

உலகெலாம் புலம்பெயர்ந்து வாழும் தமிழரின் வழித்தோன்றல் கள் தமிழைப் பேசாது மறந்துவிடினும் உலகத்தமிழர் என்று உணரப்படுவார்கள். உள்ளூரில் வாழும் விவசாயி தமிழ் தவிர வேறு மொழி தெரியாவிடினும் வேறு ஊர்களுக்கு ஓடாது தனது குடிலிலும் கூரைத் தாவாரத்திலும் குந்தியிருந்தாலும் தமிழர் ஆகார்.

தமிழ் என்பது மொழி. அது தமிழருக்கு அடையாளம் ஆகாது. "தமிழன் என்று சொல்லடா - தலை நிமிர்ந்து நில்லடா" என்பது ஆதிக்கம் தொடர்பானது. தமிழ் என்பது வெறும்மொழியா னால் தமிழன் என்பது ஓர் சமூகத் தகுதியாகும்.

அத்தகுதிப் பாட்டில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் ஆசிரியர்கள் மாணவர்கள், எழுதுவினைஞர், அதிகாரிகள், வர்த்தகர்கள் மட்டுமே அடக்கம். ஏனைய தொழிலாளர், விவசாயிகள், பெண்கள், 'தமிழன்' என்ற தகுதி பெறார்.

தமிழ்த் தேசிய வரலாற்றில் விவசாயிகளுக்கென்று சங்கங்கள் அமைத்த வரலாறு கிடையாது. தமிழர்கள் ஒரு பெரு இனம். அவற்றினுள் இத்தகைய பேதங்கள் அவசியமில்லை. தொழிலாளர், விவசாயிகள், பெண்கள் அனைவரும் தமிழர் என்பதில் கரைந்துவிடுகின்றனர். அவர்களின் தனித்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரிக்கப்படுவதில்லை. மாறாகத் தமிழ் மேலாதிக்கத்தினுள் அவர்கள் உள்ளடங்கி உலர்ந்து விடுகின்றனர்.

வட-கிழக்கில் தொழில் நியாய மன்றுகள் இல்லையே? ஏன் என்று விசாரித்தபோது தொழிலாளி-முதலாளி பேதமற்ற சமூகமே தமிழ்ச் சமூகம் என்ற பதில் எவ்வளவு ஆதிக்க மனோபாவத்தின் இயல்பான வெளிப்பாடு என்பதை புரிந்து கொள்ளல் ஒன்றும் கடினமல்ல.

இத்தமிழ்த் தேசிய வரலாற்றுக்கும் கண்ணோட்டத்துக்கும் அப்பால் தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் 1970களில் பல விவசாய சங்கங்கள் உருவாக்கப்பட்டு விவசாயிகள் என்போர் உதிரிகளல்ல. ஒன்று பட்டுச் செயற்படவேண்டியோர் என்ற உணர்வு எழுச்சி பெற்றது. விஸ்வமடு, கிளிநொச்சி போன்ற விவசாயப் பிரதேசங்களில் விவசாயச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன.

விவசாயிகளுடைய சங்கங்கள் இணைக்கப்பட்டு விவசாயிகள் சம்மேளனம் அமைக்கப்பட்டு அவர்கள் மத்தியில் கருத்துக்கள் பரிமாறப் பட்டதுடன் அனுபவங்கள் பகிரப்பட்டன. தேசிய பொருளாதாரக் கூட்ட மைப்பில் விவசாயிகளின் பங்கு உணரப்பட்டது. இத்தகைய விவசாயிகள் மாநாடுகள் அனுராதபுரம் உட்படப் பல சிங்கள மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன.

எந்த ஒரு தேசியப் பிரச்சினையும் சாராம்பசத்தில் நிலப் பிரச்சினையேயாகும். ஆகவே நிலத்துடன் உறவு பூண்ட விவசாயியைத் தவிர்த்து தமிழ்த்தேசியம் நிலைக்க முடியாது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் கல்லோயா முதல் வெலிஓயா (மணலாறு) வரை யூ. என். பி அரசு திட்டமிட்டுச் செயலாற்றி விவசாயப் பிரதேசங்களைக் கபளீகரம் செய்த போது தமிழ்த்தலைவர்கள் யூ. என். பியுடன் சங்கமமாகிக் கூடிக்குலவினர். அதற்கெதிராகப் போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கப்படவில்லை. அவர்கள் விவசாயிகளே தவிர தமிழர்களல்லவே!

அம்பாறை மாவட்டந்தான் தமிழ்த்தேசியப்பரப்பில் நெல் செழித்து விளையும் பெருநிலப்பரப்பு. ஆனால் அப்பிரதேசத்தின் அடையாளத்துக்கும் அங்கீகாரத்துக்கும் தமிழ்த்தேசியத் தலைமைகள் இரண்டாம் பட்ச அவதானிப்பையே செலுத்தின. அங்கு வாழும் முஸ்லிம்-தமிழ் விவசாயிகளின் பிரச்சினையை பொதுமைப்படுத்திப் பார்த்து அணுகித் தீர்ப்பதற்குப் பதிலாக துவேஷத்தைத் தூண்டி அவ்வின மக்களின் பண்பாட்டைச் சிதைக்கும் முயற்சியில் இறங்கினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கிழக்கின் பல்கலைக்கழகங் களிலும் மீன்பிடித்தொழிலை முதன்மைப் படுத்தும் கல்விப்பீடங்கள் இதுவரை இல்லை. 1990இல் நிறுவப்பட்ட யாழ்ப்பாண விவசாய பீடம் மந்த வேகத்திலேயே முன்னேறுகிறது. மீன்பிடியோ விவசாயமோ தமிழரின் அரசியலுக்கு வேண்டியனவல்ல. எனவே அவை தமிழ் அரசியல் தலைமைகளின் அக்கறைக்குரிய விடயங்களல்ல.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட நெற்காணித் திருத்தச் சட்டத்தை எதிர்த்துத் தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்றத்தில் வாக்களித்தனர். உழுபவர்க்கே நிலம் சொந்தம் என்று கூட அச்சட்டம் சொல்லவில்லை. குத்தகை விவசாயிகளை அவர்களது விருப்பத்துக்கு விரோதமாக வயல் நிலங்களிலிருந்து வெளியேற்ற முடியாது என்ற அச் சட்டத்தைக் கூடத் தமிழ்த் தலைவர்களால் சகிக்க முடியவில்லை.

மலையகத் தொழிலாளர்களை வடக்கில் வந்து குடியேறும்படி தமிழர் தலைமை கோரியது. வன்னிப்பெரு நிலப்பரப்பில் தமிழ் மக்களைச் சென்று எல்லைப்பிரதேசங்களைப் பாதுகாக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆவரங்கால் மாநாடு முழங்கியது. ஆனால் அங்கு சென்று வாழ முயன்ற விவசாயி மக்களைத் தமிழாதிக்க சக்திகள் தமிழர்களாகக் கௌரவிப்பதற்குப் பதிலாக மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் கூலிகளாகக் கருதி இழிவு செய்தனர்.

அபிவிருத்தித் திட்டங்களும் புனர்வாழ்வும் இடிந்த கட்டிடங்களைக் கொண்ட நகர் சார் பகுதிகளுக்கேயன்றி வயலும் வயல் சார்ந்த நிலங்களுமான கிராமங்களுக்குக் கிடையா.

அபிவிருத்திப் பங்காளிகளாகிய தமிழர் தலைமை, சிங்களப் பேரின வாத யூ.என்.பி. அரசுடன் உறவு கொண்டாலும் குளங்களைக் கட்டவோ வயல்களைத் திருத்தவோ வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விவசாயிகளின் வீடுகளில் உலைகள் கொதிக்கவோ உதவமாட்டார்கள் என்பது நாம் தெளிவாக அறிந்ததே!

உழவர் திருநாளில் யாழ். வர்த்தகப் பெருமகன் வீட்டில் தமிழ் அமைச்சர் பொங்கி மகிழ்ந்து தொலைக்காட்சிக்குப் போஸ் கொடுத்ததே பெரும் புண்ணியம்.

பாவப்பட்ட விவசாயிகள் தமிழர்களாக அங்கீகரிக்கப்படும் நாள் வருமா? நம்பியிருக்கலாம். எதுவுமே நடக்காது.

புதிய பூமி
நவம்பர், 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை இயக்கங்களின் வீரதீரங்களும் வெகுஜன விரோத நிலைப்பாடும் 10

*1970களின் பிற் பகுதியிற் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்களின் தோற்றமும் 1983 - சிங்களப் பேரினவாத ஒடுக்கலின் பின் விடுதலை இயக்கங்கள் பல்கிப் பெருகியமையும் இந்தியாவைத் தளமாகப் பயன்படுத்த தொடங்கியமையும் மக்கள் மத்தியில் பலவித சிந்தனைக் கோலங்களை உருவாக்கின.*

மேட்டுக்குடிக் கனவான்களைப் பாராளுமன்றம் அனுப்பி இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகப் பெறமுடியாதவற்றை இளைஞர் இயக்கங்களின் எழுச்சியாலும் வளர்ச்சியாலும் இந்தியாவின் முயற்சியாலும் பெற்றுவிட முடியுமென மக்கள் நம்பவைக்கப்பட்டனர்.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இரண்டு பிரதான நோய்கள் உள்ளன 1. வறுமை. 2. அறியாமை - இவை இரண்டுமே மேலாண்மைத் தமிழர் அந்நிய ஆக்கிரமிப்புச் சக்திகளுடன் இணைந்து சாதாரண தமிழ்ப் பொதுமக்கள் மீது சவாரி செய்யும் வசதியை ஏற்படுத்துவன.

வறுமையும் அறியாமையும் தேசங்களின் மூலதனமாக இருக்கும்வரை விடுதலை என்பது கற்பனையானது. பொது மக்களின் கருத்துக்கள் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் மீது விதேசியக் கருத்துக்கள் திணிக்கப்படும். மக்களது ஜனநாயக-மனித உரிமைகள் என்பன விடுதலையின் பேராலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தின் பேராலும் சிதைக்கப்படும்.

பொதுமக்கள் என்போர் வெறும் விட்டில் பூச்சிகளாகவே கணிக்கப்படுவர். பொதுமக்களின் மரணங்கள் கணக் கெடுப்புக்குப் பயன்படுகின்றனவே தவிர அரசியல் அவதானிப்புக்கு உள்ளாவதில்லை.

பொதுமக்கள் மீதான வன்முறை என்பது வெறுமனே படுகொலைகளையும் உடல்ரீதியான உபாதைகளையும் ஏற்படுத்துவது மட்டு மல்ல. "வன்முறை" எனும்போது நேரடியான சரீரத் தாக்குதல் மட்டுமே வன்முறை என்று அதை வரையறுக்க முடியுமா? மனிதருக்கு உணவும், மருந்தும், நிழலும் மறுக்கப்படுவது வன்முறையாகாதா? உண்மையில் ஒருவரை நோயில் வாடி அழியவிடுவதைவிட, பட்டினியில் சாகடிப்பதைவிட, இயற்கையின் சீற்றத்துக்குப் பலியாக விடுவதைவிட அவரைச் சுட்டுக் கொல்வது இரக்கம் மிக்கது என்று தோன்றுகின்றது" என்று 'மறுபக்கம்' கட்டுரை ஒன்றிற் கோகர்ணன் என்பார் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது.

இவ்வகையில் கடந்த 19வருட யுத்தத்தின் கோரப்பிடியில் சிக் குண்டு மரணமடைந்த எழுபத்தையாயிரம் பொதுமக்கள் புண்ணியம் செய்தவர்களெனினும் அவர்களைச் சார்ந்தவர் களும் அவர்களைத் தங்கி வாழும் பெற்றோர், பிள்ளைகள், குடும்பத்துணைவர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் பிரிவுத்துயர் தாங்க முடியாதது. இவ்வாறு நடைப்பிணங்களாக வாழும் மக்கள் தொகை கணக்கற்றது.

யுத்த காலத்தில் மக்களின் கடல் - வயல் உழைப்புகளுக்கு அனுமதி இல்லை. சொந்தவீடுகளில் வாழ்வதற்கு உத்தரவாதம் இல்லை. இடப் பெயர்வு மட்டுமே நிச்சயமானதாக இருந்தது. மருத்துவ வசதிகளில்லை. பட்டினியும் நோயுமே வாழ்வின் நிரந்தர உடன்பிறப்புக்களாயின, இவற்றையெல்லாம் தாங்கி யும் தாண்டியும் வாழும் மக்களின் மனவடுக்களும் உடல். உளத் துன்பங்களும் சொத்திழப்புகளும் சீர்செய்யப்படுவதன் மூலம் மட்டுமே சமாதானத்துக்கான வாசல் திறக்கப்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களத்தில் மரித்த மாவீரர் மட்டுமே மரியாதைக்குரியோர், போர்க்காலத்தில் மரித்த மக்கள் அப்பாவித்தனமாக மடிந்தோர் என இவ்வாறெல்லாம் எண்ணி மரித்த மக்கள் பற்றிய விபரச் சேகரிப்பு உதாசீனப்படுத்தக் கூடியதல்ல.

மிதிவெடிகளிலும் யுத்தக் கெடுபிடிகளிலும் ஊனமுற்ற பொதுமக்கள் பற்றிய விபரம் எவரிடமும் கிடையாது. இவற்றை வைத்து ஏய்த்து வாழும் என். ஜி. ஓக்களே அதிகம். ஊனமுற்ற மக்களின் குடும்ப வாழ்வுக்குரிய பொருளாதார வசதிகளையும் நிரந்தர உழைப்பையும் வருமானத்தையும் பெறுவதற்கான சிந்தனையோ அதற்கான அரசியலோ எவரிடமுமில்லை.

புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் என்பன உடைந்த கட்டிடங்களுக்கு மட்டுமன்றி உடைந்த உள்ளங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டியதாகும். உடல் ஊனமுற்றோரும் இறந்தோரும் மட்டுமன்றி முப்பது வருட யுத்தக் கொடூரங்களினூடாகப் பயணித்த பொதுமக்களின் வாழ்வு, வன்முறைச் செயல் திணிப்புகளிலிருந்தும் சிறை மீட்பது காலத்தின் கட்டாயமாகும்.

பேரினவாதக் கொடுமைகளிலும் அரச பயங்கரவாதத்திலும் விடுதலை இயக்கங்களுக்கிடையிலான மோதல்களிலும் விடுதலை இயக்கங்களின் உள்முரண்பாடுகளிலும் இந்திய இராணுவ அட்டூழியங்களிலுமிருந்து தட்டித் தவறித் தப்பிப் பிழைத்த பொதுமக்களுடைய வாழ்வு விரக்தி நிலையிலிருந்து மீட்டு நம்பிக்கையூட்டப்பட வேண்டியதாகும்.

தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப்போராட்டத்தின் முக்கிய கட்டங்களைத் தாண்டிச் சமாதானக் காலத்தில் வாழும் பொதுமக்களின் விருப்பு வெறுப்புக்களை அரச அதிகாரிகள் முதல் விடுதலைப் போராளிகள் வரையான சகல மேய்ப்பர்களும் புரிந்து கொள்ளுதல் முக்கிய கடனாகும்.

பொதுமக்கள் மத்தியில் அரசியல் போதம் ஊட்டப்பட வேண்டும். மக்களை மேய்வதற்கோ மேய்ப்பதற்கோ எவரும் முயலக்கூடாது. மக்களின் அரசியல்-ஜனநாயக-மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளை எவரும் விடுதலையின் பேரால் இரவல் பெறக்கூடாது. மக்கள் தமது இவ்வுரிமைகளை எவரிடமும் விட்டுக்கொடுத்துத் தியாகிகளாகிப் பொறுமை காக்கும்படி எவரும் நிர்பந்தமாக ஆலோசனை வழங்குவது தவிர்க்கப் படவேண்டும்.

விடுதலை இயக்கங்களில் இணைந்து கொள்ளும் பிள்ளைகள் பெற்றோரின் அனுமதியுடன் சேர்வதைக் காண்பது இல்லை எனலாம். அவ்வாறு செல்வோரில் மிக அதிகமானோர் வீட்டைவிட்டு ஓடுவோராகி விடுதலையாகின்றனர். குடும்பங்களில் ஏற்படும் குழப்பங்களும், அரச பயங்கரவாதம் குடும்ப அங்கத்தவர்களில் எவரையேனும் ஊனப் படுத்தியோ கொன்றோ அழிப்பதால் ஏற்படும் விரக்தியும் வேதனையும் குடும்பத்தில் நிலவும் பட்டினியும் வறுமையும், கல்வியைத் தொடரமுடியாத அழுத்தங்களும், இளைஞர்களின் பருவ உணர்வுகளைப் பகிரமுடியாத சமூகத்தின் பழமைவாதக் கெடுபிடிகளும் இளைஞர்களை வீடுகளைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கின்றன.

இளைஞர்கள் இயக்கங்களுடன் இணைந்து கொண்டதும் தமது குடும்பத்தினருடன் உறவுகளை அறுத்துக்கொண்டு இராணுவ மயப் படுத்தப்படுகின்றனர். இராணுவ வெற்றியைத் தமிழ்த் தேசிய இயக்கங்கள் பெற்றுக் கொள்வதற்கு இத்தகைய குடும்ப முறிவுகள் உதவும் அதேவேளை போராளிகள் சமூகத்தில் இருந்து விலகியவர்களாக உருமாறும் அபாயம் நேர்கிறது.

தமிழ்த்தேசியப் போராளிகளின் உணர்விலும் செயலிலும் பொதுமக்கள் பற்றிய தமது பார்வையில் ஆதிக்க உணர்வைப் பெறுகின்றனர். மூத்த பொது மக்களை 'நைன்ரிகள்' என்று கூறி முதுமை எள்ளி நகையாடப் பட்டது. பொதுமக்களை 'ஐயா' என்று அழைக்கும்போதே தொனியில் எள்ளல் வெளிப்படும். 'என்ன' என்று விசாரிக்கும் போதோ 'ஏன், எதற்கு' என்று கேள்விகள் தொடுக்கும்போதோ வெருட்டல் மேலோங்கும். தனியே வயோதிபர்கள் தமது வீடுகளிலே வாழும்போது 'அப்புவுக்கு பெரிய வீட்டில இருக்கிறதுக்குத்தான் ஆசையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கோ. எங்களுக்கு வீடு தேவை. வேறை சின்ன வீடு தாறம். வெளிக்கிடத் தயாராய் இருங்கோ' என்பது போன்ற போராளிகளின் நற்றமிழ்ப் பேச்சுப் பண்பின் உத்தரவுகளுக்கு மக்கள் ஒடுங்கியே போய்விடுகிறார்கள்.

புலம்பெயராமல் தமது சொந்த நாட்டிலேயே தொடர்ந்து வாழும் தமிழ்ப்பொதுமக்கள் பேரினவாத வடுக்களைச் சுமந் தும், தமது ஊரவர். அயலவர். நண்பர்கள், உறவினர். பிள்ளைகளைப் போரில் இழந்தும், புகலிடங்களுக்குப் போன தால் பிரிந்தும் தனித்துப்போய் தம்மண்ணில் தமது உயிர்போவதை விரும்பி வாழுவோருக்கு விடுதலை இயக்கங்களின் வரியும், விசாரணையும், வெருட்டலும், ஹர்த்தாலும், பேரணிகளும் பயத்தையும் வருத்தத்தையும் கூட்டுகின்ற சேதிகளை நாம் வீரஞ்செறிந்த எமது மறத்தமிழ் மண்ணில் அன்றாடம் அறிந்து வேதனைப்படுகிறோம்.

மக்களின் 'பயபக்தி' விடுதலைக்குச் சார்பானது அல்ல. ஒடுக்குதலுக்கே உதவக்கூடியது. விடுதலையின் பங்குதாரர்களாக வேண்டிய மக்கள் பார்வையாளராகக்கூட இருக்கப்பயந்து ஒதுங்கி ஓரங்கட்டப்பட்டவர்களாக நடைப்பிணங்களாக வாழ்வது நம்மால் சகிக்கக்கூடியதல்ல.

இராணுவச் சுற்றிவளைப்புக்கள் நடக்கும்போது கூடப், பின்தங்கிய ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் கிராமங்களில் அவை நடப்பதை நியாயப்படுத்தும், "தாம் உயர்குடிப்பிறந்தோர்" என்ற உயர்வுச் சிக்கல் எனும் உளநோய்க்கார் "ஆமிக்காரர், இஞ்சை வராங்கள். கஷ்டப்பட்டதுகளும் கண்ட நிண்டது களுந்தானே உதுகளுக்குப் போறது" என்று சொல்வதை நாம் அதிகம் கேட்டும் பார்த்தும் இருக்கிறோம்.

'என்ரை பிள்ளைக்கு என்ன குறை வைச்சனான். ஏன்தான் இந்த பிள்ளை எங்களை விட்டிட்டு இப்பிடிப் போவிட்டுது" எனப் புலம்பும் பெற்றோரின் அழுகுரல் எங்களுக்குக் கேட்கிறது.

இவ்வாறாக மக்களுக்கும் விடுதலை இயக்கங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடையிலான உறவில் விரிசலும் வர்க்க வேறுபாடுகளும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

தற்போது கொழும்பில் புதுமுறைக் களவு ஆரம்பித்துள்ளது. "புலிகள்" எனப் போலி ஆவணங்களுடன் தங்களை அறிமுகப்படுத்தி 'பாஸ்' எடுத்த முறையில் தவறிருப்பதாகக் கூறி மல்லாவிக்கு விசாரணைக்கு வரும்படியும், வராமல் சரிக்கட்டுவதெனில் குற்றப்பணம் தரும்படியும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள சம்பவங்கள் பத்திரிகைகளில் கூட வராமல் நடந்தேறி உள்ளன. அவ்வளவுக்கு மக்கள் பயந்துபோய் உள்ளனர். பயம் என்பது பொது மக்களை தேச விடுதலையிலிருந்தும் வெகுதூரத்தில் வைத்துள்ளது.

'பெடியள் விடாங்கள்' என்று விலகி நின்று தமது பிள்ளைகளைப் பாதுகாப்பாக பிறநாடுகளுக்கு அனுப்பி வைத்த மேற் குடித் தமிழரையும், "ஐயோ, சமாதானம் வந்துவிடுமோ, பிள்ளை களை அனுப்பிப் போடு வாங்கள்" என அங்கலாய்ப்போரையும் அவர்களது வர்க்க சிந்தனையையும் புரிந்து கொள்ளல் அவசியம். விடுதலை இயக்கங்கள் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் மக்கள் யார் எனத்தேர்ந்து செயற்படுங் காலங்கனியுமா? வர்க்கப் போராட்ட அரசியல் முன்னுக்கு வந்து தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு வழிகாட்டும் வரை பீடிக்கப்பட்ட நோய் தொடரவே செய்யும்.

புதிய பூமி
டிசம்பர் 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையைக் கடப்பதும் புதுமையை நிகழ்த்துவதும் சாத்தியமா? II

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு. மூட்டை கட்டி அந்த முழுப்பாரம் பின் முதுகிற் போட்டுக் குனிந்து புறப்பட்டோம் நீள் பயணம், தேட்டம் என்றே நம்பி, சிதைந்த பழம் பொருளின், ஓட்டை, உடைசல், உளுத்த இறவல்கள், பீத்தல், பிறுதல், பிசகி உதிர்ந்தவைகள், நைந்த கந்தல், நன்றாக நாறிப் பழுதுபட்டுச் சிந்தி இறைத்த சிறிய துணுக்கு வகை, இப்படியான இவற்றையெல்லாம் சேகரித்து மூட்டை கட்டி, அந்த முழுப்பாரம் கண் பிதுக்கக், காட்டுவழியிற் பயணம் புறப் பட்டோம். இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு.

... மேலிருக்கும் மூட்டை இறக்கி, அதை அவிழ்த்துக் கொட்டி உதறிக் குவிக்கின்ற கூளத்துள் வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி அப்பாலே செல்லும் அறிவு விழிப்பென்பதோ சற்றேனும் இல்லோம். சலிப்பும் வலிப்பும் எழ. பின்முதுகைப் பாரம் பெரிதும் இடர்ப்படுத்த ஊருகிறோம், ஊருகிறோம்- ஓயாமல் ஊருகிறோம்.

"பரந்த உலகோர் பலரும் சுமையைச் சுருங்கும்படியாய்க் குறைத்துச் சிறிதாக்கிக் கைப்பைக்குள் வைத்துக் கருமங்கள் ஆற்றுகையில், வெற்றுக் கை கொண்டும் வியப்புக்களை ஆக்குகையில்,, புத்தி நுட்பம், செய்கை நுட்பம். போக்கு நுட்பம் என்பவற்றால் சித்தி பல ஈட்டிச் செகத்தினையே ஆட்டுகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எனிலோ நலிந்து மிக, இரங்கிப் பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர்படுத்த ஊருகிறோம் ஊருகிறோம்- ஓயவில்லை. ஊருகிறோம். வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி அப்பாலே செல்லும் அறிவோ குறைவு. ஓர் இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு, பண்பாட்டின் பேராற் பலசோலி எங்களுக்கு".

ஆம் இது மக்கள் கவிஞர் முருகையனின் 'இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு' என்ற கவிதையின் பகுதி.

தேசியம் என்பது நவீனத்துவம் சார்ந்தது. புதுமையை நிகழ்த்துவது அதன் முன்நிபந்தனையாகும். நிலமானியத்தையும் அதன் வழியான பழைமைச் சிந்தனையையும் செயலையும் எவ்வித நிபந்தனையும் இன்றி நிராகரிப்பது. அத்தேசியத் தகைமைகளை எமது தமிழ்த்தேசியம் பெற்றுள்ளதா? பழைமை எது, புதுமை எது என்பதையேனும் சிந்தித்துள்ளதா? அகற்றப் பட வேண்டியவை எவை? சேர்க்கப்பட வேண்டியவை எவை எனத் தமிழ்த்தேசிய நிகழ்ச்சி நிரலில் ஏதேனும் உள்ளதா? அல்லது ஏதேனும் அத்தகைய நிகழ்ச்சி நிரல் பற்றிய சிந்தனையாவது இருந்துள்ளதா? எவ்வாறெனினும் இனியும் சிந்திக்கத் தாமதித்தால் விளைவுகள் மிகவும் பாரதூரமாகச் செல்வதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

முதலாவதாக, யுத்தம் எனும் எண்ணக்கருவை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்கிறோம்? போராட்டம் என்பதன் அர்த்தம் என்ன? ஓர் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் யுத்தம் சார்பாக இருக்க முடியாது. ஏனெனில் யுத்தம் என்பது முன்னர் ஒரு மன்னனையோ அல்லது அவனது குழாத்தினரையோ மையப்படுத்தி நடாத்தப்பட்டதாகும். நவீன சகாப்தத்தில் ஏகாதிபத்திய ஆயுத வியாபாரிகளின் பேராசைக்கு உலகைக் கூறுபோடும் நோக்குடைய யுத்தம் மக்களை, தேசங்களை, நாடுகளை அவற்றின் இறைமையை, சுயநிர்ணயத்தை, எல்லைகளை அழிப்பதனையோ தகர்ப்பதனையோ நோக்கமாகக் கொண்டது. மக்களை அழிப்பது பற்றியோ அவர்களைக் கொன்று குவித்து - இடம்பெயர்ச் செய்து அகதிகளாக அலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யச் செய்வதுபற்றியோ யுத்தத்தினை நடாத்தும் எசமானர்கள் கவலைப்படுவதில்லை.

போராட்டம் என்பது ஒடுக்குமுறைக்குட்பட்ட மக்கள் சார்பானது. அது ஏகாதிபத்தியத்துக்கும் ஆண்டபரம்பரைக்கும் எதிரானது. யுத்தம் திணிக்கப்படும்போது போராட்டம் மக்களின் ஆயுதப் போராட்டமாக உச்சக் கட்டத்தை அடைகிறது. போராளிகள் என்போர் யுத்தப்பிரியர்களாக ஒருபோதும் இருப்பதில்லை. கூலிப்படையினரே யுத்தப்பிரியர்களாவர். மக்கள் போராளிகள் போராட்டப்பிரியர்களாக விளங்குவர்.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' 'அன்னை இட்ட தீ' ஆகிய நாடகங்கள் யுத்தத்துக்கெதிரான நாடகங்களே தவிர போராட்டத்துக்கெதிரான நாடகங்களல்ல. முருகையனின் 'வெறியாட்டு' யுத்தத்துக்கு எதிரான நாடகமே தவிரப் போராட்டத்துக்கு எதிரானதல்ல. இந்நாடகங்கள் மேடையேற்றப்பட்ட போது அவை "அந்நேரங்களில் போராளிகளை மகிழ்விக்கவில்லை" என்று கூறப்பட்டது. இது யுத்தம் -போராட்டம் பற்றிய தெளிவீனத்தையே வெளிப்படுத்தியதனை அவதானிக்கலாம்.

பண்டைய தமிழ் அரசர்களைக் கற்பனை செய்துகொண்டு "மண்பிடி மாடுபிடி" சண்டை நடாத்த முடியாது. நவீன யுகத்தில் மக்கள் நலன் மட்டுமே முதன்மையானது. பழிவாங்கும் ஆண்ட பரம்பரை எண்ணத்தில் குறுநில அரசுகளை ஒன்று சேர்ப்பது போல் சகல இயக்கங்களையும் சகல வர்க்கங்களையும் ஒன்றிணைப்பது நவீன யுகத்தில் சாத்தியப்படக் கூடியதல்ல. இத்தகு செயற்பாடுகள் யுத்தத்தைத் தோற்றுவிக்க உதவுவனவேயன்றிப் பரந்துபட்ட மக்கள் போராட்டத்தை வலுப்படுத்தப் பயன்படமாட்டா.

இரண்டாவதாக, தேசியத்தின் நவீன சிந்தனை, ஜனநாயகத்தைச் சாராம்சமாகக் கொண்டது. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பதே ஜனநாயகத்தின் அடிப்படையாகும். தமிழ்த் தேசியப் போராட்டம் சரியான திசைமார்க்கத்தில் செலுத்தப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமெனில் மக்கள் அரசியல் போதம் ஊட்டப்பட்டு ஆளுமை பெற்றவர்களாக ஏன், எதற்கு, எப்படி என்ற ஆய்வுத் திறன் மிக்கவர்களாக, காசுக்கும் சலுகைக்கும் ஆடம்பரத்துக்கும் மக்களின் இறைமையையும் அரசியலையும் விலைபேசும் பேரப்பேச்சு ஆதிக்க சக்திகளைத் தெளிந்து அறிவுடை மக்களாய் மாற்றமடைதல் தவிர்க்கவியலாத தேவையாகிறது.

மூன்றாவதாக, ஜனநாயகப் பண்பைச் சாத்தியமாக்க வேண்டுமெனில் மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். 'ஆமா' போடும் கூட்டத்தையோ 'அரோகரா' பாடும் பக்தர்களையோ மட்டும் தேசியம் கொண்டிருத்தல் தோல்விக்கே இட்டுச் செல்லும். சமகாலத்தில் கூட்டுக் குடும்பத்து ஆணாதிக்க தந்தைவழி அதிகாரக் கட்டமைப்பு மாறி மக்களிற் பாதித் தொகையினருக்கு மேற்பட்ட பெண்களின் புத்தி மதிக்கப்பட்டு குடும்பம் ஒன்றின் தீர்மானங்கள் கலந்துரையாடி மேற்கொள்ளப்படுவதற்கு ஒப்ப, மாற்று இயக்கங்களையும் கட்சிகளையும் கருத்துக்களையும் மதிப்பதும் முன்நிபந்தனை ஆகிறது.

நான்காவதாக, சாதியமைப்பு முறை நீண்டகால நோக்கில் நீக்கப்பட்டு மனித உரிமைகளைப் பேணும் வகையில் அகமணத் திருமண உறவு முறை எனக் கருதப்படும் ஒரே சாதியினருள் திருமணங்கள் நடைபெறுவதற்குப் பதிலாகக் கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட்டுச் சமூக அங்கீகாரம் வழங்கும்படி ஊக்கப்படவேண்டும். சாதிக்கொரு கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப்படுவதையும் ஆலயங்களுக்குள் சாதி வேறுபாடு காரணமாக எவரையும் உள்ளே அனுமதியாது மூடப்பட்டுக் கிடக்கும் ஆலயங்கள் திறக்கப்பட்டு சமத்துவ சமூகத்துக்கான தேசிய உணர்வு கட்டமைக்கப்படவேண்டும்.

ஐந்தாவதாக, எளிமைக்கும் உழைப்புக்கும் கூட்டுச் செயற்பாட்டுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு ஆடம்பர மோகமும் அந்நிய பண்பாட்டு ஆதிக்க வெறுப்பும் பழமைப் பண்பாட்டுச் சடங்கு சம்பிரதாயங்களை நிராகரிப்பதும் அவசியமாகும். எனினும் தமிழர் மத்தியில் எஞ்சியிருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரமும் பழமைச் சடங்கு சம்பிரதாயங்களுமே? எளிமைக்கு மதிப்பளிக்கப்படுமா? உழைப்புக்கு உரிய கௌரவம் வழங்கப்படுமா? இக் கேள்விகளுக்கான பதில்களை ஒன்றுபட்ட கூட்டுச் செயல்கள் மூலமே நிதர்சனமாக்கப்பட முடியும். தேசியம் என்பது ஏனைய இனங்களின் தனித்துவத்தை மதிப்பதும் அங்கீகரிப்பதன் மூலமும் மட்டுமே முன்னோக்கிச் செல்லமுடியும். பழமையைக் கடப்பதற்கும் புதுமையை நிகழ்த்துவதற்கும் பரந்த மனப்பாங்கும் உலகப் பார்வையும் தேவை. இவை தமிழ்த் தேசியத்தினுள் தேடினும் கிடைக்குமா?

புதிய பூமி
ஜனவரி-2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 சகல தேசிய இனங்களையும் அங்கீகரிப்பதுவே சுயநிர்ணயத்துக்கான முன் நிபந்தனையாகும்

இலங்கையின் தேசிய இனங்களுக்கான அரசியல் தீர்வில் தற்போது தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் பல கட்டங்களைத் தாண்டிச் செல்வதையும் சர்வதேச சமூகத்தின் நேர்மையான பங்களிப்புடன் முன்நோக்கிச் செல்வதையுமே மக்கள் விரும்பி வரவேற்கின்றார்கள்.

இலங்கையின் பெரும்பான்மை இனமாக சிங்கள இனத்தையும் சிறுபான்மை இனமாக இலங்கைத் தமிழர்களையும் கருத்திலெடுத்துக் கொண்டு இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தேறுகின்றன.

பிறப்படிப்படையிலும் எண்ணிக்கை அடிப்படையிலும் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற எண்ணக்கருவைக் கணிப்பதற்குப் பதிலாக கருத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் அவ்வப்போது மாற்றமடையக்கூடிய வகையிலேயே ஜனநாயக சமூகத்தில் இவ் எண்ணக்கரு பற்றி தீர்மானித்தல் ஆரோக்கியமானதாகும். ஜனநாயக சமூகத்துக்குரிய இயங்குதிசை நெறியாகிய பெரும்பான்மை-சிறுபான்மை என்ற கருதுகோள் தேசிய இனங்களுக்கு ஏற்புடையதல்ல. எத்தனை பேர் என்று எண்ணிக்கை அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியாது. மாறாக, ஒரு தேசிய இனத்தின் தேவைப்பாடுகளை ஓர் இனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்குமாயின் அவ்வினத்தை அங்கீகரிப்பதும் அதன் சுயநிர்ணயத்துக்கான ஏற்பாடுகளை வரையறை செய்வதும் சகல தேசிய இனங்களினதும் முன்தேவையாகும்.

சிறுபான்மை இனம் என்பதிலும் தேசிய இனம் என அழைப்பதே ஆரோக்கியமானதாகும். தேசிய இனம் என்பதும் அதன் சுயநிர்ணயத் தகுதி என்பதும் அவ்வினத்தைச் சேர்ந்தோரில் எத்தனை பேர் உள்ளனர் என்பதையோ, எப்படிப் போராடினர் என்பதையோ எவரெவருடன் கூடினர் என்பதையோ பற்றியதல்ல.

இவ்வடிப்படையில் நோக்கும்போது இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை தமிழ்க் குறுந்தேசியக் கண்ணோட்டத்திலோ சிங்களப் பெருந்தேசியக் கண்ணோட்டத்திலோ காணமுடியாது. மாறாக, சமூக விஞ்ஞானக் ண்ணோட்டத்தில் பல்லினப் பண்பாட்டுச் சூழலின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவத்துடன் நோக்க வேண்டும்.

'போராடுவது நாம் இவர்கள் வருவது எப்படி?' என்று தமிழர் தரப்பிலிருந்து குறுகிய இனவாதக் கண்ணோட்டத்தில் சிலர் கேள்வியெழுப்புவது அபத்தமானது.

போராட்டம் என்பது முழு மக்களை பற்றியது. அதைத் தனியொரு இனம் முன்னெடுப்பதில் மும்முரமும் தலைமைப் பாத்திரமும் வகித்திருப்பினும் அது சகல மக்களினதும் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுடன் சம்பந்தமுடையதாகும். அதைத் தமிழருக்கும் சிங்களவருக்குமிடையிலான தனிப் பட்ட கொடுக்கல் வாங்கலாகக் கருத முடியாது. நாட்டில் இருக்கும் இனத்தவர்களுக்கிடையில் பிரச்சினைகள் முனைப் படைந்திருப்பினும் அது சகல தேசிய இனத்தைச் சேர்ந்த மக்களையும் பாதித்திருப்பதை நிராகரிக்க முடியாது.

எனவேதான் சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் பிரச்சினைகளை நோக்குவதற்குப் பதில் தேசிய இனத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கணிப்பில் தீர்வை நோக்குவது பரந்த மனப்பாங்கைத் தோற்றுவிப்பதாகும்.

பெரும்பான்மை இனம் என்பது சிறுபான்மையினத்துக்குத் தனது நலன்களையும் உரிமைகளையும் கையுதிர்ப்பதென்று ஒப்பாரி வைப்பதும் நாடு துண்டாடப்படுகிறது என்று அயல் நாடுகளுக்குத் தூது சென்று கூப்பாடு போடுவதும் குறைப்பிரசவக் கருத்துக்களின் குழப்பத்தினாலேயேயாகும். இதனாலேயே ஜே.வி.பி யினரும் சிஹல உறுமயவினரும் சிந்தை கலங்கி இந்தியாவே கதியென்று வரவுப்பாட்டுப் பாடுகின்றனர்.

இந்நிலையில் தமிழ் மக்களுடைய சுயநிர்ணயத்துக்கெதிராகத் தற்போது நேரடியாக பொதுஜன முன்னணியும் மறைமுகமாக மிகப் பயங்கரமாக யூ.என்.பியும் ஏனைய சிங்கள துவேஷி களும் ஒன்று கூடியுள்ளனர். இவர்களின் பின்னால் இந்தியப் பிராந்தியமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அணிவகுத்துள்ளன. இச்சூழலில்தான் தமிழ்த் தேசியவாதிகள் தம்மைச் சுதாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் தமது ஏனைய சகோதர தேசிய இனத்தவர்களையும் அரவணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்குக்-கிழக்குத் தமிழர் தாயகத்தில் சிங்கள, முஸ்லிம், மலையகத் தேசிய இனத்தவர் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் அவர்களின் தனித்துவத்தையும் சுயநிர்ணய உரிமையையும் உறுதி செய்துகொள்ளவதில் சிங்களப் பேரினவாதிகளை விடவும் முன்மாதிரியாகப் போராடி அதன் பயனை அனுபவிக்கச் செய்யும் ஆர்வத்தில் ஒன்றிணை வது அவசியமாகும்.

அப்போதுதான் தென்னிலங்கையில் வாழும் பிறதேசிய இனத்தவரான தமிழர், முஸ்லிம்கள், மலையகத்தவரதும் வேடர், பறங்கியர், மலாயர் ஆகிய சமூகத்தவரதும் தனித்துவமும் தேசிய இனங்களுக்கான கௌரவமும் அங்கீகரிக்கப்படுவதும் நடைமுறையில் சாத்தியமாகும். அதுவே அமைதிக்கும் அந்நியரின் ஆக்கிரமிப்பில் இருந்து தவறுவதுக்கும் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைப்பதாகும்.

அதே சமயத்தில், தமிழர்கள் மத்தியில் போராடும் விடுதலை இயக்கங்கள் மக்களினதும் ஏனைய கட்சிகள், ஸ்தாபனங்களின தும் அரசியல், சமூக, ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொள்வ தும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதும் தேசிய இனத்தின் உறுதிக்கும் ஒற்றுமைக்கும் பலம் சேர்ப்பதாகும்.

மனித உரிமைகளும் ஜனநாயக உரிமைகளும் தனி மனிதர் களுக்கானது என்பது அங்கீகரிக்கப்பட்டு அனுபவிக்கப்படும் பொழுதே சுயநிர்ணய உரிமை என்பது முழுச் சமூகத்துக்கும் செழுமை சேர்க்கும் ஓர் வல்லாயுதமாக எழுச்சி பெறமுடியும்.

மனித உரிமைகள் மக்களுக்கு மறுக்கப்படும்போதும் சமூகத்தின் சுயநிர்ணயம் நிராகரிக்கப்பட்டு தனி மனித உரிமை தாக்கப்படும்போதும் ஆரோக்கிய சமூகம் சாத்தியப்படாது.

அரசியல் தீர்வு என்பது ஜனநாயக மனித உரிமைகளின் விரிவாக்கமும் மலர்ச்சியும் எழுச்சியுமாகுமாறே தேசிய இனங்களின் சுயநிர்ணயம் அமைதல் வேண்டும்.

புதிய பூமி
பெப்ரவரி, 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 போராட்டப் பலத்தில் விளைந்ததை அரசியல் தளத்தில் அறுத்தல் இயலுமா?

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் எடுத்த இளைஞர்கள் பல்வேறு அணிகளில் திரண்டு தமது வாழ்வை அர்ப்பணித்தனர். அதன் விளைவாகச் சிங்களப் பேரினவாத அரசு பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளது. பேச்சுவார்த்தையில் பங்கு பற்றித் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணயத்தை விட்டுக் கொடுக்காமலும் இலங்கைப் பல்லின மக்களின் ஆதரவைப் பெற்றும் முன்னெடுக்கும் வல்லமை தமிழர் தரப்புக்கு உண்டா, இல்லையா என்ற வினாவை முன்வைத்து நாம் விடை தேடுதல் மூலம் எமது சமூகத்தின் இருப்பையும் எதிர் காலத்தையும் பற்றிய சிந்தனைகளைப் பரவச்செய்தல் இயலுமாயிருக்கும்.

இலங்கையில் 77ல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளா தாரத்துக்குப் பலியாகிப்போன சமூகத்தில் முன்னிலை வகிப் போராகத் தமிழர் சமூகத்தைக்கருதல் தவறில்லையென நம்புகிறேன். பூகோளமயமாக்கத்தின் புளுகத்தில் தம்மை மறந்து தன் நாமம் கெட்ட சமூகச் சீரழிவிலிருந்து தமிழ் மக்களை மீள்வித்தல் மிகப் பெருஞ் சிரமமான காரியமாகும்.

ஆயுதத்துக்கு ஓய்வு கொடுத்து யுத்தத்தைக் தவிர்த்து ஓராண்டு பூர்த்தியாகும் பூமியிலே வாழும் பல்லினச் சமூகத்தவர்களும் ஆறுதல் பெருமூச்சு விடும் அமைதிச் சூழலில் தமிழ் ஊடகங் களின் வியாபாரப் புத்தியில் மக்கள் மூழ்கடிக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேரினவாதக் கட்சியொன்றின் தலைவரெனிலும் ஊடகங்களுக்கு யுத்த நிறுத்த ஓராண்டு பூர்த்திபற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும்போது தமிழர் தரப்பினரின் நியாயங்களைப் பகிரங்கப்படுத்தியிருந் தார். ஆனால் எமது தமிழ் பத்திரிகைகள் எதுவும் அச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்காதது மட்டுமன்றி ஏனோதானோ மனப்பாங்கில் வெகுஜன ஒன்றியம் என்ற பெயரில் நடந்த ஹர்த்தால் செய்திகளுக்கு முக்கியத்துவமளித்து இனவெறியை கக்கி வியாபாரம் செய்துள்ளன.

இனவெறியையும் துவேஷத்தையும் பரஸ்பரம் தமிழ்-சிங்கள ஏடுகள் தமது வாழ்நாள் முழுவதும் தீனியாக்கி வியாபாரத்தில் ஊதிப்பெருத்துள்ள 'டைனோஸோர்கள்' ஆகி வரலாற்றைப் பின்னுக்கிழுப்பதில் முழுப்பலத்துடன் செயற்படுகின்றன. இச்சூழலில் தமிழர் தரப்பினர் ஒதுக்கப்பட்ட சமூகத்தினரின் குரலாய் ஒலித்து வெற்றிபெறவேண்டுமெனில் அரசியல் தளத்தில் ஆல்போல் வேரூன்றி அறுகுபோல் தழைத்து நிலைக் கத் தம்மைத் தயார்படுத்த வேண்டும்.

இதைவிடுத்து அரசியல் என்பதை ஆதிக்க நோக்கிலும் தத்தமது இருப்புக்களை உத்தரவாதம் செய்வதிலும், மாற்றுக் கருத்துக்களை துரோகமானவை என்பதிலும் சாதியத்தை மிக நுணுக்காகக் கடைப்பிடிப்பதிலும் பண்டைப் பெருமைகளில் மகிழ்ந்து நிற்றலிலும் தொடர்வதே தமிழர் அரசியல் என்றாகிவிட்டது.

பொதுமக்களை மதித்தல், அவர்களின் கருத்துக்குச் செவிமடுத் தல், பொதுமக்களை அரசியல் பேசும்படி ஊக்குவித்தல், அரசியல் ரீதியான ஆக்கபூர்வமான விமர்சனங்களைப் பகிரங்கமாக முன்வைத்தல், மாற்றுக் கருத்துக்களை கௌரவ மாக உள்வாங்கல், பல்லினப் பலமதப் பண்பாட்டு விழுமியங்களையும் வேறுபாடுகளையும் அங்கீகரித்தல், ஒரே இனத்திலுள்ளேயே பல்வேறு வர்க்கத் தரப்பினரின் இருப்பை ஏற்றுக்கொள்ளுதல், அவரவர் வர்க்க குணாம்சத்திற்கேற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துப் பரிமாற்றங்களின் பரிமாணங்களைப் புரிந்துகொள்ளல் மக்களை ஏவலர்கள் என்ற கண்ணோட்டத்துக்கப்பால் எசமானர்கள் என்ற எண்ணக்கருவில் வைத்துப் போற்றுதல், மக்களுக்குக் கட்டளையிடுவதைக் காட்டிலும் மக்களுக்குத் தலைசாய்த்துச் சேவை செய்யத் தயாராயிருத்தல் ஆகிய அரசியல் பண்பாட்டை பரவலாக்கும் பரந்த மனப்பாங்கை விருத்தி செய்வதன் மூலம் மட்டுமே அரசியல் தளத்தில் பலம் பெறமுடியும். இவை இல்லையாயின் தமிழர் தரப்பின் எதிர் காலம் பூஜ்யமாகி விடுமென்பதுடன் இருப்பும் கேள்விக் குறியாகும்.

தமிழர் அரசியல் என்ற யதார்த்தத்திலிருந்து இத்தகைய தமிழ்த் தரப்பு அரசியல் பண்பாட்டுக்குத் தம்மை நகர்த்திச் செல்லுதல் அவசியத் தேவையாகும். மக்களுடைய அடிப்படை அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புகளையும் குறுகியநிலை நின்று நோக்கி னால் தமிழ் மக்களுக்கு விடுதலை என்பது வென்றெடுக்க முடியாததாகிவிடும். தமிழ்த்தேசிய இனத்தின் மீது அக்கறையும் ஆர்வமும் மட்டுமன்றி பழைய படிப்பினை களில் இருந்தும் கற்க முற்படும் எவரும் புதிய அரசியல் பண்பாட்டை தமிழ் மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாதுவிடின் பழைய பல்லவிகள்தான் அரங்கேற இயலும்.

'இரத்தம் சிந்தாத யுத்தமாகிய அரசியல்' நடாத்தும் வல்லமை தாராரோ, தக்கபடி நடவாரோ?

'அரங்கின்றி ஆடமுடியுமா?' அரசியல் அரங்கென்று ஒன்று பாராளுமன்றப்படி தாண்டாத பண்போடு மக்கள் மத்தியில் உருவாக முடியுமா? அரசியல் என்பது ஓர் சமூக விஞ்ஞானம் என்பது எப்போது புரிந்து கொள்ளப்படப்போகிறது?

புதிய பூமி
மார்ச், 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு தேசிய அபிலாஷைகள் இல்லையா? இன்று ஈராக், நாளை ஈழம்? 14

"“இருபது வருடங்களுக்கு மேலாக நாம் ஆயுதந்தாங்கிப் போராடியது இவர்களுக்காகத்தானா?” என்று தமிழ்த்தேசிய அரசியல் ஆய்வாளர் முதல் அன்றாடம் தமிழ்ப் புதினப் பத்திரிகைகளில் அரசியல் வாயலம்பும் தமிழ்ச் சாமானியர் வரை உரத்துக் கேட்பது எமது நெஞ்சை உறுத்துகிறது.

இந்தக் கூற்றுக்குப் பின்னால் உள்ள “இவர்கள் யார்”, “நாம் யார்?” “இந்த இவர்களும் நாமும்” இணைய முடியாத இரு துருவங்களா? இவர்களும் நாமும் என்று பிரித்துப் பேசுபவர்களின் உள்ளத்தினுள்ளே ஒளிந்திருக்கும் தேசியத்தின் அடையாளம் என்ன? 'நாம்' என்று பேசுவோர் தம்முள்ளே இணை பிரியாத தன்னடையாளம் உடையோர்தானா? சாதி, சமய, பிரதேச, வர்க்க, குடும்ப, பால் வேறுபாடுகளும் இரத்த உறவின் மீதான ஊடாட்டமும் ஒற்றுமையும் நுண்ணாய்வுகளில் இவ் அடையாளங்களைச் சிதைப்பதில்லையா? மிஞ்சியிருக்கும் 'நாம்' இல் எத்தனைபேர் தேறமுடியும்? பிரத்தியேகமாக கட்டமைக்கப்பட்ட 'நாம்' இல் எத்தனை பேர் சத்தியத்தின் அடிப்படையில் கட்டுண்டுள்ளனர் என்ற கணிப்பையாவது அறுதியிட்டுக்கூறுதல் என்ன அத்துணை சாத்தியமானதா?

ஆதிக்கக் கருத்தியலில் இந்த 'நாம்' என்பதற்கு அர்த்தம் தேடுதல் இயலாது. அவ்வாறு அர்த்தப்படுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அடக்குவோரின் அதிகாரமொழியில் புரியப்பட வேண்டியதாகும். 'இவர்கள்' என்று பிரித்து வகைப்படுத்தல், தன்மைப் பன்மையிலிருந்து படர்க்கையில் பாகுபடுத்தல் என்பது ஒடுக்குமுறையாளரின் ஆதிக்கக் குரலேயன்றி ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக் குரலாக மாட்டாது. 'இதுவரை நாம் போராடியது இவர்களுக்காகத்தானா' என்ற குரலில் தொனிக்கும் தனிச்சொத்துடைமைச் சிந்தனையின் விபரீதத்தை விளங்கிக்கொள்வதில் எவருக்கும் அதிக சிரமமிருக்காது என நம்புகிறேன்.

சமூக முன்னேற்றத்துக்காக மனித குலத்தில் தோன்றிய விஞ்ஞானிகள் முதல் பல்வேறு அரசியல் ஞானிகள் வரை கண்டறிந்த முடிவுகள்-உண்மைகள்-கண்டுபிடிப்புகளை அவ்வவ் அறிஞர்களின் குடும்பத்தினருக்கோ, மதத்தினருக்கோ, பிரதேசத்தினருக்கோ அல்லது அவ்வத் தேசத்தினருக்கோ என்று மட்டும் நாம் தனியுடமை செய்ய முடியுமா? அவ் அறிஞர்களின் வாழ்வும் அர்ப்பணிப்பும் தியாகமும் தனிப்பட்ட ஒரு குழுமத்தினருக்கென்ற தனிச் சொத்தாக்கப் படக்கூடியதா?

அவர்கள் கண்டிருந்த உண்மையும், நன்மையும் மனுக்குலம் முழுமைக்கும் மட்டுமன்றி இயற்கைக்கும் இப்பிரபஞ்சம் முழுமைக்குமே பொதுமையானது..

இருபத்தைந்து வருடங்களின் முன் தமிழ் மக்கள் ஆயுதம் தாங்கி இன விடுதலைக்காகப் போராடவில்லை என்ற காரணத்தால் சிங்கள பேரினவாத அரசு தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தையோ, இனத் தன்னடையாளத்தையோ அங்கீகரிக்க மறுத்தமையைச் சரியானதென நியாயப்படுத்த முடியுமா? 1972 யாப்பில் பௌத்தத்துக்கு முதன்மை கொடுத்தமை சரியாகுமா? போராடியவருக்கு மட்டுமா அல்லது போராடும் சமூகத்துக்கு மட்டுமா தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என அதன் பிரயோகம் குறுக்கப்படக்கூடியதா?

மாக்சும்- லெனினும் மனுக்குலத்துக்கு வழங்கிய சுயநிர்ணயம் பற்றிய கோட்பாட்டுக்குத் தமிழ்த் தேசியவாதிகள் தமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் என்று உரிமை கோருவது எந்த இரத்த உரித்து வகையைச் சார்ந்தது? முடியுடை மூவேந்தர்கள் சுயநிர்ணய கோட்பாட்டை தமிழர்களுக்கு மட்டுமென்று தமது பொற்கால மனுநீதிகளில் போற்றிப் பாதுகாத்தனரா?

சுயநிர்ணயமும் தேசிய இனத்தனித்துவமும் இலங்கைத் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்கள், மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் பொதுவான தீர்ப்பாகும். வேடர்கள், பறங்கியர் மலாயர்களுக்குங்கூட விரிவுபடுத்தப்பட வேண்டியதாகும்.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது தனியே சைவ சமயத்தவருக்கு மட்டுமுரியதன்று. உலகம் பொதுவுடமையாதலால், அது உலகத்து மனிதர் அனைவருக்கும் பொருந்தக்கூடியது.

பொதுமக்கள், போராளிகள் என தமிழ்-முஸ்லிம்-சிங்கள மக்கள் தமது இன்னுயிரைப் பல்லாயிரக்கணக்கில் பலியிட்டுத் தியாகத்தீயில் ஏற்படுத்தப்பட்ட இன்றைய 'இரத்தம் சிந்தாத யுத்தம்' என்ற அரசியல் பேச்சு வார்த்தையும் அதன் பயன்களும் இந்த நாட்டின் மக்கள் அனைவருக்கும் சொந்தமானது என்பதில் இரண்டாம் பேச்சுக்கு இடமிருக்கமுடியாது.

மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டபோது தமிழ்த் தேசிவாதிகளின் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம், 'இன்று அவர்களுக்கு, நாளை நமக்கு' என்று தீர்க்கதரிசனம் உதிர்த்தவராவார். இவ்வாறு தமிழ்ப் பேசும் மலையகத் தமிழரை ஆரம்பத்திலேயே பாரபட்சமாய்ப் பார்த்த பழக்கம் ஆதிக்க சிந்தனை சார்பாய் அமைந்ததில் வியப்பில்லை.

தமிழரசுக் கட்சி முதல் தமிழர் விடுதலைக் கூட்டணி வரை தமிழ் பேசும் மக்கள் என்பதில் உள்ளடக்கப்பட்ட இலங்கை முஸ்லிம் மக்களைப் புறம்போக்காக்கித் தமிழ் விடுதலை இயக்கங்கள் தம்மைத் தாழ்த்திக்கொண்ட குறுகிய தேசியத்தின் கோளாறுகள் களையப்பட வேண்டியது விடுதலையை நேசிக்கும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் தலையாய பணியாகும்.

இன்று சதாம் ஹூசைனை ஈராக்கிலிருந்து அகற்றும் அமெரிக்க முயற்சியை வெறுமனே இஸ்லாமிய நாடென்ற கண்ணோட்டத்தில் தமிழ்த்தேசிய இயக்கங்கள் கணிப்பதும் பாரபட்சமாக அமெரிக்க ஒடுக்குமுறையைக் கண்டிப்பதற்கோ அல்லது வருத்தம் தெரிவிப்பதற்கோ தயங்கியதும் வரலாற்றுத் தவறாகும்.

இன்று ஈராக்குக்கு நடந்தது நாளை ஈழத்துக்கு நடக்காது என யாரும் ஆரூடம் கூற இயலாது. இன்று பாக்தாக் நாளை யாழ்ப்பாணம் என்று நாம் எதிர்பார்க்காமல் இருக்க முடியாது.

தமிழ்த் தேசியவாதிகளின் உலகக் கண்ணோட்டம் அமெரிக்க வல்லரசின் பக்கமா? ஒடுக்கப்பட்டிருக்கும் தேசங்களின் மக்களின் பக்கமா என்பதைத் தெளிவுபடுத்தவும் குரல் கொடுக்கவும் போராடத் தயார் செய்யவும் இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

வானம் நோக்கி முகத்தை உயர்த்தாமல் நிலத்தை நோக்கி நெஞ்சை நிமிர்த்த தேசியவாதிகள் தயாராவாரா?

ஒடுக்கப்பட்ட உலக மக்களோடு தம்மை இணைத்துக்கொள்ளத் தேசிய வாதிகள் எப்போது முன்வருவர்!

புதிய பூமி
மே, 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித–ஜனநாயக உரிமைகள் எதிர் சுயநிர்ணய உரிமை 15

'தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை கோருவதற்குரிய தகுதிப்பாடு உடையவர்களா' என்றொரு விநோதமான ஐயப்பாடு பொதுவர் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டது.

தமிழ் விடுதலை இயக்கங்கள் என்ற பேரில் கடந்த இருபது வருடங்களாக இளைஞர்கள் தமது வாழ்வை இழந்தும், உயிர்களைத் தியாகம் செய்தும் இன்னுமின்னும் போராடிக் கொண்டிருக்கையில் ஏன் இந்தச் சந்தேகம் எழுந்ததென நாம் ஆராய்தல் அவசியந்தானே!

தமிழ் விடுதலை இயக்கங்கள் தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிப்பவர்கள் தாங்கள் மட்டுமே என்ற தன்முனைப்புக் கொண்டமையால் மக்கள் சார்பை மறந்து மக்களின் மேய்ப்பர்களாகத் தங்களைப் பாவனை செய்துகொண்டு செயற்படுவதால் விளையும் அனர்த்தங்கள் ஏராளம்.

எதிரிக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டைக் கையாள்வது போல் மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைக் கையாளுவதே அடிப்படைக் கோளாறாகும்.

பேரினவாத அரசையும் சாதாரண தமிழ் மக்களையும் சமதராசில் வைத்தது நிறுத்தே தமது தண்டனைகளை வழங்குகின்ற கொடுமையால் மக்கள் மத்தியில் விடுதலை இயக்கங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோதமான மனப்பாங்கு துளிர்விட்டு வளருவதனை நாம் அவதானிக்க முடிகிறது. இத்தகைய விரோதம் பெரும் விருட்சமாக வளருமெனில் அதனால் விளையப் போகும் ஆபத்துக்களை நாம் அறிந்துகொள்ளாதிருக்க முடியாது.

விடுதலைக்கென்று புறப்பட்ட இளைஞர்கள் அனைவரும் இந்தியாவுக்குச் செல்லக் கிடைத்த படகுகளில் எதில் ஏறிக் கொண்டார்களோ அதற்கேற்ப அவ்வவ் இயக்கங்களில் இணைந்து கொண்டனர். அவரவரின் ஊரில் எந்த இயக்கம் ஈடுபாடு அதிகம் கொண்டிருந்ததோ அவ்வவ் இயக்கங்களில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடத் தம்மை இணைத்துக் கொண்டனர், இவ் இளைஞர் இயக்கங்களின் குட்டி முதலாளித்துவக்குணாம்சங்களின் குளறுபடிகளால் 'நான் முந்தி நீ முந்தி' என்று இவர்கள் தம்மிடையே வீரப்பிரதாபங் களில் ஈடுபடத் தவறவில்லை. இதனால் கடந்த இரு தசாப்தங் களில் விளைந்த விபரீதங்கள் கணக்கில் அடங்காதனவாகும்.

தங்களை மக்கள் மத்தியில் பிரபலமாக்குவதற்காக சாதாரண மக்களுக்கு பகிரங்கமாக தந்திக்கம்பத் தண்டனைகள் வழங்குவதும் தமது பெயர்களை அதன் பின் பொறிப்பதுவும் போராட்ட நடவடிக்கையின் தொடக்கங்களாக உருக் கொண்டன. சம்பவங்கள் நடக்கநடக்கச், சாமானியர்களாகச் சாகடிக்கப்பட்டவர்களைச் 'சமூக விரோதிகள்' என அடையா ளப்படுத்தி வீரர்களைப் புகழ்ந்துவிட்டு தமது அன்றாட அலுவல்களை அலுங்காமல் குலுங்காமல் சுயபுத்தியுடன் செய்து முடித்த 'விவேகத் தமிழர்களின்' பொதுப்புத்தி மட்டத்தில் விளைந்து பெருகிய இயக்கங்கள் தமது முத்திரைகளை இவ்வாறாகப் பொறித்துக்கொண்டன.

விடுதலை இயக்கத்துக்கான தகுதிகளாகக் கொலை, கொள்ளை, ஆதிக்கம் என்பன தலைவிரித்தாடின. எனவே இத்தகைய இயக்கங்களிடையே தமது தகுதிப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஒவ்வொன்றை 'ஏகபோகயமாக்கிக் கொள்ள நினைத்துத் தம்முள் மோதிக்கொண்டனர். குட்டி முதலாளித் துவ குணாம்சமான பழிவாங்கும் பண்பு மேலோங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேர்ந்து தமது சகோதரங்களுக்கிடையே பழிவாங்கும் படலத்தை விடாது தொடர்ந்தனர், 'இரத்தத்துக்கு இரத்தம்' எனப் பழி வாங்கும் படலம் குரங்கின் வால் போல் நீண்டு தொடர்ந்து தொடர் கதையாகிவிட்டது.

இத்தகைய பழிவாங்கும் படலம் என்பதில் அந்நிய நாட்டு உளவு நிறுவனங்களுடன் ஊடாடுவதில் தொடங்கி உள்ளூர்ப் பேரினவாத அரசாங்கங்களுடனும் அளவளாவிச் சமாதான சமரசம் செய்தாலென்ன யுத்த பேரிகை தொடர்ந்தாலென்ன அவ் இயக்கங்களுக்கிடையிலான பழிவாங்கல் படலம் தொடக்கமோ முடிவோ அறியாது தொடர்ந்து செல்கிறது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கைக்கு எதிரான அமெரிக்கா, இந்தியா, இலங்கை சிங்களப்பேரினவாத அரசுகளின் கோடிக்குள் கூடிக் குதூகலித்துக் குசலம் விசாரித்துப் போராடப்புறப்பட்டு அவரவர் இயங்க இணைந்த இயக்கங்களிடையேயான மோதல் - காட்டிக்கொடுப்பு - துரோகம் என்பன விடுதலையின் பேரில் தமிழினத்தின் போரில் தொடர்கின்றன.

தமிழ்மக்கள் மத்தியில் ஒன்றுபட்டு நின்று - வேற்றுமையில் ஒற்றுமை கண்டு - பல்வேறு வர்க்கத் தரப்பினரையும் பரந்த ஐக்கிய வெகுசனத் தளத்தில் இணைந்து - அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் இந்தியப் பிராந்திய மேலாதிக்கப் பேரரசினையும் சிங்கள பௌத்த பேரின வெறியையும் எதிர்த்து- ஒருமுகப்பட்டு நின்று சுயநிர்ணய உரிமைக்கான பொதுப்போராட்டத்தில் கைகோப்பதை விடுத்து அந்நியருக்கும் எதிரிகளுக்கும் நல்லவர்களாகவும் போராடப் புறப்பட்ட தம்மிடையே தம் சகோதரர்களையே பகைவர்களாகவும் கருதிக்கொள்ளும் தமிழ் விடுதலை வீரர்களின் விவேகம் எத்தன்மையது என்பதை விளங்கிக்கொள்வதில் அதிக சிரமம் இருக்காது..

அரசியலின் அரிச்சுவடி எதிரி யார், நண்பன் யார் என்பதை வேறுபடுத்திப் புரிந்து கொள்வதிலேயே ஆரம்பமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரிச்சுவடியை நாம் அறியத் தவறியது மட்டுமன்றி இத்தனை இழப்புகளின் பின்னருங்கூட ஆராய மனமின்றி அடாவடித்தனம் புரிவதுடன் சகோதரர்களுக்கிடையே பழிவாங்கல் தொடர்கிறது. எதிரிகளுடன் கூடலும் குலாவலும் இனிதே நடைபெறுகின்றன.

மனித உரிமைமீறல் என்பதை ஒரு எதிரி தனக்குச் சாதகமாக வும் ஜனநாயக மீறலை இன்னொரு எதிரியோ அதே எதிரியோ வேண்டியபடி தனக்கு வசப்படுத்தியும், உலகமயமாதலுக்கு உள்ளக சுயநிர்ணயமென அமெரிக்காவும் அதன் பெப்சி-கொக்காகோலா முதலாளிக் கூட்டத்தினரும் தமது விருப்பிற்கேற்ப வளைக்கக் கூடியவாறு எமது போரும் சமாதானமும் தொடர்வது மிக ஆபத்தானதாகும்.

பொது உலகுக்குக் காட்டப்புறப்பட்டு அமெரிக்க மசாசூ செட்ஸ் மாநிலப் பிரகடனம் எனத் தொடங்கிய எமது சுய நிர்ணயப் போர் இப்போது அதே உலகுகளின் கழுகுப் பார்வைக்குள் அகப்பட்டது மாத்திரமன்றி விஷ வட்டத்துக் குள் இழுத்து வீழ்த்தப்பட்டிருக்கிறது. அபிமன்யு தனது போர்முறை ஆசான் துரோணரின் பத்ம வியூகத்தில் மாட்டுப் பட்டதுபோல் இன்று விடுதலை இயக்கங்கள் சர்வதேச ஏகாதிபத்திய வேடன் விரித்த வலைக்குள் அகப்பட்டுள்ளன.

இத்தகைய நெருக்கடியிலிருந்து மீள்வதெனில் குட்டி முதலாளித்துவ குரோத குணாம்சங்களிலிருந்து விடுபட்டு, பாட்டாளி வர்க்க விஞ்ஞானபூர்வமான சர்வவியாபக உண்மையான மாக்ஸிச லெனினிச மார்க்கத்தில் பாட்டாளி வர்க்க அரசியலை அறிந்து கொள்வதும் அணிதிரள்வதுமே ஒரே வழியாகும்..

மக்களின் மனித உரிமையையும், ஜனநாயக உரிமையையும் பறித்து சுயநிர்ணய உரிமைக்குப் போராடுவதென்பது ‘கண்ணிரண்டும் விற்றுச்சித்திரம் வேண்டுதல்’ போலாகும்.

எனவே சுயநிர்ணய உரிமையின் சாராம்சம் என்பது சுயசார்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித-ஜனநாயக உரிமைகளை மதிப்பது மட்டுமேயாகும். அதுவே அந்நியத் தலையீடுகளிலிருந்து தவறுவதற்கும் நாம் அனைவரும் 'வேற்றுமையில் ஒற்றுமை' காணவுமுள்ள ஒரே மார்க்கமாகும்.

புதிய பூமி
யூலை, 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை எது? கியூபப் பாதையா? இஸ்ரேலிய சியோனிசமா?

தமிழ் மக்கள் தமக்குத் தமது பாரம்பரியத் தாயகத்தில் தன்மானத்துடனும் சுய கௌரவத்துடனும் இறையாண்மை யுடனும் வாழும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற அக்கறையில் சுயநிர்ணய உரிமை கோரிக் கடந்த ஐந்து தசாப்தங்களாகப் போராடி வருகின்றனர்.

மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட காலத்தி லிருந்து வெகுண்டெழுந்த தமிழ் மக்கள் வாழும் உரிமையையும் வாக்குரிமையையும் கூட இழக்க வேண்டி ஏற்பட்டது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது மக்களின் ஜன நாயக மனித உரிமையையும் இறைமையையும் பேணுவதாகவும் அவற்றுக்கு ஊறு விளைக்காததாகவும் இருத்தல் வேண்டும்.

உலகம் முழுவதும் பரந்திருக்கும் பல்தேசியக் கொம்பனிகளுக்கு பாய் விரிக்கும் தேசமாகவோ, உள்ளுறையும் உறைவிடமாகவோ தமிழர் தேசம் மாற்றமடையுமெனில் தமிழர் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழும் விவசாயிகள் - மீனவர்கள் - தொழிலாளர்கள், பெண்கள் அனைவரும் கொம்பனிகளின் கொத்தடிமைகளாக மாறும் அவலம் ஏற்படும்.

உலகெலாம் நிறைந்து வாழும் உலகத் தமிழர்களில் அங்கெல் லாம் தொழிலாளர்களாக வாழும் தமிழர்கள் தமது தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணை தரிசித்துச் செல்வதற்காகவும் தமது உறவுகளோடு அன்பைப் பகிர்ந்து கொள்ளவும் தமது வாழ்க்கையில் ஒரு தடவையோ இரு தடவையோ வந்து செல்லலாம். ஆனால் அகிலமெங்கும் பெரிய வியாபாரிகளாக முதிர்ச்சி பெற்ற உலகத் தமிழர் சிலர் தமிழ் மண்ணின் உறவின் பெயரால் தமது வியாபாரத்தைப் பெருக்கி ஊரில் உள்ள நிலங்களை அபகரித்து இங்கு வாழும் மக்களையும் தமது கூலிகளாக்கும் அபிவிருத்திப் பணியில் தமது மூலதனத்தை குவிக்கும் தமிழ்க் கொம்பனி களின் வேஷத்திலும் சிலர் வந்து கொண்டிருக்கிறார்கள்

தமிழர்களிலும் இரு வகைத் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆண்ட பரம்பரைத் தமிழர்களின் வாரிசுகள் ஒரு வகை, இவர்கள் யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் பணம்பண்ணித் தம் வணிகத்தை வளமாக்கியோர். மற்ற வகையினர் தமிழ் மக்கள் என்போர். இவர்கள் யுத்தகாலத்தில் போராட்டத்திலும் நிலத்திலிருந்தும் நீங்காமல் தமது தொழில்களில் தரித்து நின்று சாவைச் சந்தித்தவர்களும்-தமது சொந்த ஊரில் வாழமுடியாது இடம்பெயர்ந்து புலம்பெயர்ந்து அகதிகளாகவே தொடர்ந்தும் வாழும் தரித்திரர்களான சாதாரண பொதுமக்கள் ஆவர். இவ்வேறுபாட்டை நாம் சுரண்டும் வர்க்கம்-சுரண்டப்படும் வர்க்கம் என வகுக்கலாம். அல்லது முதலாளிகள்-உழைப்பாளி கள் என்று பேதப்படுத்தலாம்.

ஆண்ட பரம்பரையினர், வணிகவர்க்கத்தினர், முதலாளித்துவ சிந்தனை உடைய தமிழர்களை நாம் பொது மக்கள் எனப் பொதுப்பெயரில் அழைக்கமுடியாதளவுக்கு அவர்கள் மேட்டுக்குடிசார் உயர்ந்தவர்களாவர். அவர்களது சிந்தனை-செயல் யாவும் உயர் வர்க்க முதலாளித்துவச் சிந்தனையாகும். இவர்களது இலட்சியம் காசு பண்ணுவதேயாகும். இரத்த உறவை இனிக்கப்பேசி, 'தமிழ்' என்ற மொழியில் 'விஷம்' தடவி, மொழியின் நவீனத்துவம் பற்றியோ, தமிழின் புதுமையையோ, மக்களின் ஜனநாயகப் பண்பாட்டையோ, அரசியல்-சமூக மாற்றத்தைப் பற்றியோ அல்லது பொது நலனில் எவ்வித புரிதலுமோ இன்றி புலிகளுக்குக் காசைக் காட்டித் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களைக் கச்சிதமாகச் செய்துமுடிக்கும் தமது கருமமே கண்ணாயினோர்.

இவர்கள் பெண்களைத் தமது பண்பாட்டின் சின்னங்களாக விலை உயர்ந்த இந்தியச் சேலைகளாலும் தங்க ஆபரணங்களாலும் தமது நாளாந்த நிகழ்வுகளில் அலங்கரித்து- சடங்கு சம்பிரதாயங்களின் பேரில் கடவுளுக்கும் கைலாகு கொடுத்து தமிழ் மணம் பரப்பும் சமூக அக்கறையற்ற தமிழர்களாவர். இவர்களை நாம் மக்களாகக் கருதமுடியாது. இவர்கள் எமது சமூகத்தில் மிக மிகச் சிறுபான்மையினராகிய ஐந்து வீதத்திற்கும் உட்பட்டோரேயாவர்.

இவர்களது ஆடை அணிகலனும் ஆபரணச் சாத்துப்படிகளும் தமிழ்ப் பொதுமக்களுக்குச் சாத்தியமற்றது. எனினும் இவர்களின் ஆதிக்கக் குணாம்சமான, பூகோளமயச் சிந்தனை பொதுமக்களாகிய சாதாரண தொழிலாளி வர்க்கத் தமிழரை ஆட்டிப் படைக்கிறது. ஊர் ஆலயங்களிலே கூட ஆண்டவனைத் தூக்கி வீதிவலம் வருவதற்கு, உள்ளூர் 'குறைந்த' சாதியினரை நுட்பமாகத் தவிர்த்தும் உள்ளூர் காசற்ற உழைப்பாளிகளை ஒதுக்கியும், 'தொண்டர் சபை' என்ற பெயரில் மிக நுட்பமாக ஆண்டபரம்பரையின் அடாவடித்தனம் அதிகரித்துள்ளதெனலாம். இவர்களது பிள்ளைகள் தமிழ் பேசத் தெரியாதவர்களாகவும் அவ்வாறு பேசுவது அவமானமென்றும் வீட்டில் பேசும் தமிழை மட்டுமே கொச்சையாகப் புரிந்திருப்பதே இவர்களது ஆண்ட பரம்பரைப் பெருமையாகும். இந்த ஆண்ட பரம்பரையினரை அரவணைப்பதே தமிழர் தாயகத்தின் நோக்கமாயிருக்குமெனில் அது உயர்வர்க்கச் சார்பாகும்.

உயர் வர்க்கச் சிந்தனை படைத்தவர்களின் உபத்திரவங்களிலிருந்து உழைக்கும் வர்க்கத் தமிழர்கள் தமது சிந்தனையையும் செயலையும் தற்காத்துக் கொள்ளவேண்டியது தமிழ் மக்களின் தலையாய கட்டாயக் கடமையாகும். தமது உழைக்கும் வர்க்கக் குணாம்சத்தைப் பேணுவதும் தமது உறவுகளை இரத்த உறவுகளுக்கப்பால் 'தனக்கெளிது சம்பந்தம்' என்பதுபோல் ஏற்படுத்தும் வர்க்க உறவும் தொடர்புமே உருக்கினையொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியைப் பெற உதவும் வர்க்கக் கண்ணோட்டமாகும்.

தமிழர் தேசியம் பழமைவாதச் சிந்தனைச் சிமிலிக்குள் தேக்கமடைந்து கிடப்பதிலிருந்து மீட்க வேண்டுமெனில் நவீனத்துவச் சிந்தனையாகிய மாக்சியச் சிந்தனையும் நடைமுறையும் மட்டுமே தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கான மார்க்கமாக அமையமுடியும்.

உயர் வர்க்கத் தமிழர்களின் உன்னத இலட்சியம் என்பது தமிழீழம் இஸ்ரேல் பாணியில் உருவாகி மலர வேண்டும் என்பதாகும். சோவியத் யூனியனின் வீழ்ச்சியைக் கண்டு மகிழும் கட்டுரைகளும் சோவியத்தின் வீழ்ச்சியைக் கண்டு அமெரிக்கப்பாணியில் குதூகலிப்பதும் உயர் வர்க்கக் குணாம்சமாகும். இனமுரண்பாடுகளை முதன்முதலில் உலகில் பகை முரண்பாட்டு நிலையில் இருந்து விடுவித்து சிநேகபூர்வமான உறவை ஊட்டி வளர்த்து உருவாக்கிய முன்னுதாரணமிக்க சோவியத் புரட்சியின் ஒக்ரோபர் எழுச்சி யின் பாடங்களையும் கற்க வேண்டும். அதன் வீழ்ச்சியில் ஏற்பட்ட இனக்குரோதக் கோளாறுகளிலிருந்து விஞ்ஞானபூர்வமான மாக்சிய விளக்கங்களையும் கற்றுத்தேறித் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டுக்கும் செயற்பாட்டுக்கும் பிரயோகிக்கக்கூடிய வல்லமையைப் பெறுவதில் லெனினின் அரசியல் பாடங்களைப் பயில்வதன் மூலம் மட்டுமே உயர்வர்க்கத் தமிழ்த் தேசியக் குறுநலப்பித்திலிருந்து எமது சூழலையும் பண்பாட்டையும் மீட்க முடியும்.

இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இந்தியாவும் அமெரிக்காவும் யப்பானும் தத்தமது சுயநல நோக்கில் விலை பேசுகின்றன. தமிழ் மக்களிடையே இயக்க மோதல்களையும் சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இனவெறியையும் இனத் துவேஷத்தையும் பல்வேறு உள்ளூர் அரசியல் தலைமைகளூ டாகவும் விஷவலை விரித்து வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் முதல் பல்தேசிய நிறுவன முதலைகள் வரை ஊடுருவி உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

இவ் ஊடுருவலினை ஊடறுத்து விடுதலையைக் காண வேண்டுவோருக்கு, அமெரிக்காவின் தென்-கிழக்குக் கோடியில் கியூப தேசம் தன் தேசிய விடுதலையைச் சாதித்து தனது தனித்துவத்தை நிலைநாட்டி அமெரிக்கத் தலைமையிலான சர்வதேச சமூகத்தின் பொருளாதாரத் தடையை எதிர்கொண்டு தனது சொந்தப் பொருளாதாரத்தில் தன்னிறைவை நோக்கி நடை பயிலும் பொருளாதாரத் திட்டங்களுடன் உயிர் பிழைத்தமை மட்டுமன்றி ஏகாதிபத்திய அமெரிக்காவுக்கு எதிராகச் சவாலாக விளங்குவதும் இன்றைய உலகில் மிகமுக்கியமான முன்னுதாரணமாகும்.

கியூபத் தலைவர் ஃபிடல் கஸ்ற்ரோவையும் கியூபத் தேசிய விடுதலைப் போராட்ட மார்க்கத்தையும் தமிழர் தேசியம் பின்பற்ற முயலுமா என்பதே இன்றைய கேள்வியாகும்.

புதிய பூமி
ஓகஸ்ட், 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துத்துவ–இந்திய ஒட்டகம் தேடும் ஓட்டையாகக் கீழ் மாகாணம் அமையுமா? 17

தமிழர்கள் தமது தேசிய விடுதலைக்காகப் போராடிப் பல்லாயிரம் தமிழர்களின் உயிர்களை இழந்த இந்த வேளையில் அதன் பயனை அனுபவிக்க முஸ்லிம்களை அனுமதிப்பதா? வீரம் விளைத்தவர்கள்தானே அதன் பயனை அனுபவிக்க வேண்டும். பேரினவாத அரசாங்கம் இரண்டுடனும் அவ்வப்போது கூடி அமைச்சரவையில் சரியாசனம் செய்து ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த முஸ்லிம் அரசியல் கட்சிகள் பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப் புலிகளுடன் சரி சமமாக இன்னொரு தரப்பாக வீற்றிருப்பதை எப்படி ஏற்றுக்கொள்வது. வடக்குக்-கிழக்கைத் தமிழர்களின் தாயகமென ஏற்றுக்கொண்டால், எவ்வாறு இலங்கையின் ஏனைய பகுதிகளில் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்கிறார்களோ அதே போல் வடக்குக்-கிழக்கிலும் முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து வாழ வேண்டியது தானே! வடக்குக்-கீழக்குக்கு வெளியே முஸ்லிம்களுக்கெதிராக சிங்கள இனவாதிகள் காடைத்தனம் செய்வதற்கெதிராக முஸ்லீம்கள் அதிகமாக வாழும் அப்பிரதேசங்களில் தனி அலகு பற்றிப் பேசவோ, யோசிக்கவோ தயங்குபவர்கள் ஏன் வட-கிழக்கில் மட்டும் தனி அலகு பற்றிச் சிந்தித்துத் தீவிரமாகச் செயற்படுகிறார்கள்? தமிழ் மொழி பேசும் முஸ்லிம்களையும் சேர்த்துத்தானே 'தமிழ் பேசும் மக்கள்' என அழைக்கும் போது முஸ்லிம்கள் தம்மை புறம்பாக மதரீதியாக ஏன் பிரித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறார்கள்? தமிழ்நாட்டில் மதரீதியாக இஸ்லாமியர், இந்துக்கள் என அழைத்துக் கொண்டாலும் அங்கெல்லாம் தமிழ் எங்கள் மொழி- இஸ்லாம் எங்க வழி' என்று கூறும் இஸ்லாமியர் தங்களைத் 'தமிழர்கள்' என்றே அடையாளப்படுத்துகின்றனர். அவ்வாறிருக்க இலங்கையில் மட்டும் ஏன் இவர்கள் தம்மை 'இஸ்லாமியத் தமிழர்' என அழைக்காமல் 'முஸ்லிம்கள்' என இன்னொரு தேசிய இனமாக பிரித்து நோக்க வேண்டும்."

இவ்வாறெல்லாம் தமிழ்த் தேசியப் புத்தி ஜீவிகள் முதல் தமிழ்ப் பழமைவாதிகள் வரை பலரும் பேசிக் கொள்வதைக் காது சூடேறும் வரை கேட்கக் கூடியதாகவுள்ளது.

"சிங்களப் பேரினவாதமும் தமிழ்ப்பேரினவாதமும் முஸ்லிம் தேசத்துக்கு விரோதமானவை. தமிழ்த் தேசியவாதத்திடமிருந்து முஸ்லிம் தேசத்தை பாதுகாக்கத் தவறும் முஸ்லிம் பாராளுமன்ற அரசியல்வாதிகளைக் கொலையும் செய்வோம்" என்று பல் கலைக்கழக முஸ்லிம் மாணவன் ஒருவர் கல்முனையில் மக்கள் மத்தியில் பேசியதாக இலங்கை தேசிய சேவையின் 'விடியும் வேளை' ஒலிபரப்பில் முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. ஒருவர் தெரிவித்திருந்தார்.

மூதூர் முதல் சம்மாந்துறை வரை, இந்த இரு தேசிய இனங்களுக்கு மிடையில் நடைபெறும் கொலை, ஆட்கடத்தல், வீடுகள் எரிப்பு என்பனவும் பதட்ட நிலையில் நடைபெறும் ஹர்த்தால் போராட்டங்களும் இன முரண்பாடு சகிப்புத்தன்மையை இழந்து இனவெறியாக மாறி பகை முரண்பாடாக கூர்மையடைவதனை வெளிக்காட்டுகின்றன.

மேற்படி இரு இனங்களுக்கிடையிலான மோதலுக்குத் தேசிய விடுதலைப் போராட்டங்களின் பாராளுமன்ற வியாபார - முலாளித்துவ கண்ணோட்டத்தில் நியாய அநியாயங்களை வகுத்துப் பாதிக்கப்படும் இனத்துக்கு அபயம் அளிப்பதற்கு இந்துத்துவ இந்தியா முயலத் தொடங்கியுள்ளது.

பாரத தேசத்தின் புதிய கீதையின் நாயகனான பாரதீய ஜனதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கமும் 'எங்கெங்கு அநியாயம் நடைபெறுகிறதோ அதற்கெதிராக அங்கங்கெல்லாம் அவதாரம் எடுக்கும்' பாரதப் பண்பு இந்திய மேலாதிக்க விஸ்வரூபமாக அயல்நாடுகளை கபளீகரம் செய்யும் ஆபத்து கடந்த ஐந்து தசாப்தமாகவே இருந்து வருவதனைப் பூகோள அரசியல் வரலாற்றைத் தெளி வாக விளங்க வல்லோர் அறிந்துகொள்ள முடியும்.

அண்மைக்கால உதாரணமாக சிங்களப் பேரினவாதத்திட மிருந்து தமிழரைப் பாதுகாப்பதற்கு தமிழ்த் தேசிய இயக்கங்களுக்கு ஊட்டம் கொடுத்து பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கி அநுராதபுரத்தில் சாதாரண சிங்கள மக்களைப் படுகொலை செய்யும்படி விடுதலை இயக்கங்களுக்குப் பணித்தன. அதற்குப் பணிந்து தம்மை அர்ப்பணித்த விடுதலை இயக்கங்கள் இந்திய மேலாதிக்கத்தை தமக்குப் பயன்படுத்தி தம்மையே பயங்கரவாத இயக்கங்களென முத்திரை குத்திக் கொண்டன. இலங்கைப் பேரினவாத அரசுடன் பௌத்தமும் இந்து மதமும் ஒன்றே என்றும் சிங்கவரும் ஆரியரும் ஒன்றே என்றும் சொல்லித் தமிழ்த் தேசியத்தின் முதுகில் குத்தி, சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்ற சிங்கள பேரினவாத இயக்கங்களுக்கு பணமும் அரசியல் பாடமும் வழங்கித் தமது வியாபார விவகாரங்களை இலங்கையின் இரண்டு அரசாங்கங்களினூ டாகவும் நடைமுறைப்படுத்தி இலங்கையைத் தனது உத்தியோகப் பற்றற்ற மாநிலமாக்கிக்கொண்டமையே நடந்து முடிந்த இலங்கை-இந்திய வரலாற்றுப் பாடமாகும்.

இலங்கைத் தமிழர்களைக் காப்பதற்காக மனிதாபிமான உதவியாகக் கடலில் அனுப்ப முடியாத உணவுப் பொட்டலங்களை விமானம் மூலம் போட்டபோது தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் வாய்பிளந்து வரவேற்றுச் 'சிங்கள சிறீ லங்காவின்' இறைமைக்குப் பாடம் புகட்டியதாக மகிழ்ந்து குதூகலித்தன. இங்கேதான் தேசியவாதக் கோளாற்றின் குழறுபடிகள் உள்ளனவெனலாம்.

இலங்கை-இந்திய ஒப்பந்தப் பிரகாரம் வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரத்தை தற்காலிகமாக வழங்கிய நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டபோதும் அங்கேதான் இந்திய இந்துத்துவ ஒட்டகம் மீண்டும் இலங்கையில் உள் நுழைவதற்கான ஒட்டை வைக்கப்பட்டு அவ்வப்போது பெரிதாக்கப்பட்டு வருகின்றது.

தற்போது புலிகளுக்குப் பாடம் புகட்டுவதற்கு இலங்கை ஜனாதிபதி முதல் முஸ்லிம் தீவிரத் தேசியவாதம் வரை கைகோர்த்துக் காரியங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன. எனவே கீழ் மாகாணமும் இந்தியாவின் மேலாதிக்க நுழைவுக் கான தெரிவிடமாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் தமது குறுகிய முஸ்லிம் விரோத நிலைப்பாட்டைத் தவிர்த்து முஸ்லிம் மக்களை வியாபாரிகள் என்று வெறுத்தொதுக்கு வதை விடுத்துக் கீழ் மாகாண முஸ்லிம் மக்களில் பெரும் பான்மையான விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுடன் இன உறவுகளுக்கப்பால் வர்க்க உறவுகளை வளர்த்து -தமிழ் வர்த்தகர்களின் வியாபாரக் கண்ணோட்டத்தை உதறி ஒழித்து- ஒடுக்கப்பட்ட தமிழ் விவசாயிகள் தொழிலாளர்களுடன் ஐக்கியப்பட்டு வர்க்க உறவு எனும் விருட்சத்தை வளர்த்தெடுப்பதும் முஸ்லிம் தமிழ் இன மோதலை முடிவுக்குக் கொண்டுவந்து பகை முரண்பாடாய்த் தெரியும் உறவைச் சிநேக முரண்பாடாக்கி பண்புடன் பேசித் தீர்ப்பதில் தீவிர அக்கறை செலுத்த வேண்டியது தமிழ் விடுதலை இயக்கங்களின் ஒன்றுபட்ட முயற்சியாக இருப்பது மட்டுமே இந்துத்துவ இந்தியாவின் இடையூறுகளிலிருந்து விலக்க கிடைக்கும் ஒரே தனி வழியாகும்.

வரப்போகும் வெளிநாடுகளின் வில்லங்கத்திலிருந்து தமிழர் தாயகத்தை மீட்க வேண்டுமெனில், கீழ் மாகாணத் தமிழ் மக்களும் விடுதலை இயக்கங்களும் முஸ்லிம் மக்களின் தேசியத்தை அங்கீகரிப்பதும் சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொள்வதும் முன்நிபந்தனையாகும் என்பதை மறுப்போமாயின் ‘முட்டாள் கல்லைத் தூக்குவது தன் காலில் போட்டுக் கொள்ளவே’ என்பது போலாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இன அங்கீகாரத்துக்கு மொழி அடையாளம் மட்டுமே ஏற்புடையதென்பது தமிழ்த்தேசியக் குறுநலப் பார்வையாகும். அந்தந்த இனங்களின் விசேட நிலைமையைக் கவனத்திற் கொண்டு அந்தந்த இனங்களின் அவ்விசேடத் தன்மையை விளங்கிக்கொள்வதன் மூலம் மட்டுமே சுயநிர்ணயத்தின் விரிந்த நவீன அர்த்தத்தை விளங்கும் விசால மனப்பாங்கை விருத்தி செய்ய முடியும்.

சிங்கள மக்களின் இலங்கைத் தேசியம் என்பது இலங்கைத் தீவின் நிலப்பரப்பை ஆதாரமாகக் கொண்டபோதும் மொழியும் மதமும் இணைந்த சிங்களத் தேசியமாக்த் தன்னைக் குறுக்கிக் கொண்டது. அதேவேளை இலங்கைத் தேசியத்தினை நில அடிப்படையில் மட்டும் நோக்கினால் தமிழ்த்தேசியத்தின் அடையாளத்தைக் காண முடியாதென்பதால் அது மொழி மூலமே தனது தேசியத்தை வரையறுப்பதில் முன்னின்றது. அதேபோல் முஸ்லிம் மக்கள் தமது தேசியத்தை மொழி மூலம் மட்டுமே வரையறை செய்ய வேண்டுமென்று உத்தரவிடத் தமிழ்த் தேசித்துக்கு எவ்வித அருகதையும் கிடையாது. முஸ்லிம்களின் தேசியம் என்பது மதம்-பண்பாட்டின் அடிப்படையிலானது என்ற யதார்த்தத்தைப் புரிந்து அங்கீகரித்து வேறுபாட்டைத் தெளிந்து கொள்வதன்மூலம் மட்டுமே இலங்கைத் தீவை பல்லினத் தேசியப் பண்பாடு கொழிக்கும் நாடாக நாம் காண முடியும்.

தமிழ்த்தேசியமும் முஸ்லிம் தேசியமும் தங்களைக் குணப் படுத்திக் கொள்ள முன்வருமா என்பதே நியாய புத்தி படைத்த மனிதர்களிடம் இன்று எழும் கேள்வியாகும்.

புதிய பூமி
செப்டம்பர், 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 சுயநலப் புத்தியும் புகழ்நல நாட்டமும் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளா?

தமிழ்த்தேசிய இனத்தின் மையப்புள்ளியாகத் தனிச் சொத்துடமை ஆதிக்கம் பெற்று விளங்குகின்றது. தனிச்சொத்துடமையின் பாதுகாவலர்களாகப் பாரம்பரியக் குடும்பங்கள் அமைகின்றன. பாரம்பரியக் குடும்பங்களின் மேலாண்மை கிராமங்களைக் கட்டுப்படுத்துகின்றன. கிராமங்களின் சமூக நிறுவனங்களாக கோயில்கள் விளங்குகின்றன. கோயில்களில் தனிநபர்களின் பிரமுகத்தன்மையும் முனைப்பும் பிரத்தியட்சமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

கிராமங்களில் ஏற்படும் வெளிநாட்டுப் பொருளாதார மாற்றங்கள் குடும்பங்களைச் சீர்குலைக்கின்றன. தனி நபர்கள் தனித் தீவுகளாகின்றனர். ஜே. ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் நடைமுறைக்கு முதலில் பலிக்கடாவாக்கப் பட்டது யாழ்ப்பாணத் தமிழர் சமூகமேயாகும். எனினும் அதனையே தமது தகுதியாகவும் மேலாண்மையாகவும் நன்மையாகவும் கருதி 'உலகமெலாந் தமிழ்' எனும் பிரமையைத் தமக்குள் விரித்துக் கொண்டு டொலரையும் பவுண்ஷையும் யூரோவையும் இலங்கைக் காசுப் பெறுமதியில் கணக்குப் பார்த்துத் தன்னிறைவு கொண்டு மயங்கியிருப்பது கவலைக்குரியது.

மேற்குலக வெளிநாட்டு வேலைவாய்ப்பும் அகதி அந்தஸ்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றித் தீர்மானிக்கும் உரைகல்லாக உள்நாட்டு யுத்தமும் தற்செயல் நிகழ்ச்சிகளும் அமைந்து விடுகின்றன. அகதி அந்தஸ்துக்கு உத்தரவாதமளிக்கும் உள்நாட்டு யுத்தம் தவிர்க்கவியலா அவசியத்துவத்தை ஏற்படுத்துகின்றதென்பதை தற்போதைய சமாதான சூழலிற் பலரினதும் கவலை கொள் முகங்களிலும் கதையாடல்களிலுமிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. பல்கலைக்கழகக் கல்வியில் பட்டம் பெற்றவர்களுக்கே வேலை வழங்க முடியாதிருக்கும் அவலத்திலிருக்கும் இலங்கை அரசிடமிருந்து தமிழர்கள் மட்டுமன்றி எந்தச் சமூகத்தினருமே வேலைவாய்ப்பினை எதிர்பார்ப்பதற்கு இல்லை. தனியார் துறையினர் தமது இலாபமீட்டும் நோக்குத் தவிர வேலை வழங்கவேண்டிய அவசியமோ வேறெந்தக் கடப்பாடுமோ உடையவர்களல்ல. இத்தாலிக்குக் கப்பலில் கடத்தப்பட்டுச் செல்லும் இளைஞர்கள் பலர் சிங்களவர்கள் மட்டுமன்றி இந்திய, பாகிஸ்தானிய, சீனப் பிரஜைகளாகவுமுள்ளனர். இவர்கள் அண்மையக் காலங்களில் தென்னிலங்கையில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளனர். இலங்கை இப்போது சர்வதேசக் கடத்தல் கேந்திரமாக மாறிவருகிறது. இந்நிலையில் தமிழர் சமூகமும் இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுமையும் அலைந்து திரியும் அவலத்துக்கு உட்பட்டுவிட்டது. தற்செயல் நிகழ்வுகளே தமது தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்வத னால் மனிதர் கோயில்களில் தஞ்சமடைகின்றனர். கோயில்கள் பெருகுகின்றன. விழாக்கள் அதிகரிக்கின்றன. தான்தோன்றித் தனம் தலைவிரித்தாடுகின்றது.

இத்தகு சூழலிலிருந்து தமிழர்களை மட்டுமன்றி இலங்கை யையும் மீட்கவேண்டுமெனில் இழந்த வாழ்வை மீளப் பெறவேண்டுமெனில் சுய சார்புப் பொருளாதாரமும் தன் னிறைவான சமூகமும் உருவாக்கப்படுவதுடன் திறந்த பொருளா தாரத்தின் கீழ் இரந்து வாழும் பண்பாட்டைத் தூக்கி வீசும் பலத்தையும் அரசியல் ஞானத்தையும் பெறுவதற்கு விடுதலை விரும்பும் தமிழர் சமூகம் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் தகுதியுள்ளதா என்ற வினா எம்முன் எழுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக, மக்கள் மத்தியில் அரசியல் ஞானத்தின் அவசியம் முக்கியமெனலாம். அரசியல் கல்வி என்பது இன்று இலங்கையில் மாணவர்களின் பாடவிதானத்தில் கிட்டத்தட்ட இல்லாமலேயே போய்க்கொண்டிருக்கிறது. தமிழர்களைப் பொறுத்தவரையில் “தமிழீழம், ஏகப்பிரதிநிதி' என்ற கோஷங்கட்கு அப்பால் 'நமக்கேன் இந்த வம்பு' என்ற சாட்டில் தமக்குத் தாமே ஒடுங்கிக்கொள்கின்றனர். 'அரசியல் என்பது அயோக்கியர்களின் புகலிடம்' என மாமனிதராகிய தமிழ்த் தலைவர் ஒருவர் செப்பியதற்கமைய, சமூக அரசியலின் பொது வாழ்விலிருந்து விலகிக் கொள்வதன் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொண்டு தமது சுய நலத்தை விருத்தி செய்து 'ஆமாம் சாமி' போடும் பெருநலத் தொண்டர்களாக மாறிவருகின்றனர். மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதனை மறுதலித்து சுய முன்னேற்றமே 'ஆத்ம ஈடேற்றம்' என்று தப்பித்துக் கொள்கின்றனர். அரசியல் கல்வி என்பது அவசியமற்றதென்றும் அரசியலில் சுத்த சூனியமாக இருப்பதே பாதுகாப்பு என்றும் உள்ளனர். கும்பலில் கோவிந்தா போட்டு அரோகராப் பாடும் பக்தர் கூட்டமாக தாம் இருந்தால் எவ்வித ஆபத்தும் ஏற்படப்போவதில்லை என்று தம்மைக் காவாந்து பண்ணிக்கொள்ள அது வசதியாய் அமைந்துவிடுகிறது. வர்த்தகக் கல்வியும் கணனிக் கற்பனையிலிருந்தும் மீண்டு அரசியல் பாடபோதம் நடாத்தத் தமிழர் சமூகம் அனுமதிக்குமா?

இரண்டாவதாகத், தமிழர்களின் ஒற்றுமையீனம் உலகறிந்தது. சுயநல நாட்டத்தின் மூலம் பணத்தைப் பாடுபட்டுத் தேடித் தேக்கி வைத்துக் கொண்டு திருப்திப்பட்டுவிட முடியுமா? தத் தமது தனிப் புகழ்க் கொடி நாட்டித் தமது பணத்தின் பெருமையையும் நிரூபித்துக் காட்டும் ஆவலில் அவதிப் படுகின்றனர். எனவே கிராமக் கோயில்கள் அவர்களது களங்களாகின்றன. காணி நிலங்களின் விலைகள் உயர்கின்றன. சாதி அகம்பாவத்தை வெளிப்படுத்துவர். எல்லை வழக்குகளில் பிரிவிடல் வழக்குகளில் தமது முத்திரை பதிப்பர். கிராமங்கள் இச்சிலரின் மோலோங்கித் தனத்தால் பிளவுறும். ஊர்கள் இரண்டு படும். குடும்பங்கள் சிதறும். சாதித்திமிர் புதுமெருகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும். பழைய பணக்காரர் புதிய பணக்காரர் என்ற நாட்டாமைத்தனங்கள் மலிந்து பெருகி கிராமங்கள் ஒன்றுபடும் நிலை இல்லாமலாக்கப்படும்.

மூன்றாவதாகப், பொது நோக்கற்ற வாழ்வே கணிக்கப்படும் வாழ்வாகும். 'தானுண்டு தன் குடும்பமுண்டு' என்று தன்னலத்தோடு தாம் தாம் தப்பிக் கொள்ளும் மனப்பாங்கும் - சமூக அக்கறையில்லாது தனி மனிதர்களாகச் செயற்படுவதுமே சமூக கௌரவமாகச் கொள்ளப்படும். "மிதிச்ச புல்லுச் சாகாத நல்ல மனிதர்" என்றவாறு தன்பாட்டைப் பார்த்து பொது நோக்கற்று வாழும் மனிதர்கள் சமூக விமர்சனமெதுவுமற்றுத் தமது பிள்ளைகளைக் கரை சேர்த்த புண்ணியவான் எனக் கணிக்கப்படுவார். அத்தகைய 'நல்ல மனிதர்கள்' மற்றோரைத் தூற்றி நிராகரித்துவிடுவர்.

நான்காவதாகச், சமூகத்தின் பன்மைத் தன்மையை அங்கீகரிக்க மறுக்கும் போக்கு வளர்ந்துள்ளது. முழுமுதல் சிந்தனை மரபின் ஆதிக்கம் தமிழர் சமூகத்தைப் பீடித்துள்ளது. 'ஏகன் அநேகன்' என்ற ஆதர்சமே அனைவரதும் அங்கீகாரத்தை வேண்டி நிற்கின்றது. வளரும் சமூகத்தில் நூறு கருத்துகள் தோன்றுவது தவிர்க்க முடியாதது. அக் கருத்துகளிடையே முரண்பாடுகள் ஏற்படுவது இயற்கையானது. அவற்றுக்கிடையேயான சிநேகபூர்வமான மோதல்களை மதிப்பதும் வளர்ச்சிக்கு உந்துவிசை வழங்குவதும் அனைவரதும் சமூகக் கடமையாகும். மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் மனப்பக்குவமும் மக்கள் மத்தியில் ஊக்குவிக்கப்பட வேண்டும். 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடி' போன்ற விஞ்ஞான ஆதாரமற்ற முதன்மைவாத நோக்கிலிருந்து தமிழ்ச்சிந்தனை மரபு விடுபட வேண்டும்.

ஐந்தாவதாகக், கிராமங்கள் சுயசார்பில் தன்னிறைவு காணும் பொருளாதார பலத்தைப் பெறும் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற் படுத்தப்பட வேண்டும். இயன்றவரை அந்நியப் பொருட் பாவனை, ஆடம்பர மோகம் என்பவற்றிலிருந்து விடுபட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தமது கிராமங்களிலும் சூழலிலும் உருவாக்கும் உற்பத்திப் பொருட்களையே கூடியவரை பாவனைக்குட்படுத்தும் பழக்க வழக்கங்களை மேம்படுத்த வேண்டும்.

ஆறாவதாகத், தமிழ்ப்பண்பாடு என்பது மத நீக்கம் பெற்றதாக மானுட நேயம் மிக்கதாக மாற்றம் பெறுதல் வேண்டும். பெண்கள் மீது மட்டும் தமிழ்ப்பண்பாட்டைத் திணிக்கும் சடங்காசாரங்களிலிருந்து தமிழர் சுயவாழ்வை மீட்கவேண்டும். சடங்கு, சம்பிரதாயங்களில் மட்டும் தமிழ்ப் பண்பாட்டைப் பேணும் எண்ணம் அகன்று வாழ் முறை மாறும் சமூகச் சூழலுக்குப் பொருந்தும் மனித நேய விழுமியங்களைக் கைக்கொள்ளும் பண்பு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

ஏழாவதாக, மேற்குலக மாயையிலிருந்தும் ஆங்கில மோகத்திலிருந்தும் விட்டு விடுதலையாக வேண்டும். தமிழ் மொழியிற் பேசுவதற்கும் பெயர் வைத்துக்கொள்வதற்கும் இருக்கும் தயக்கம் அகல வேண்டும். தமிழ் மொழியைப் போதனா மொழியாகக் கொள்வதில் ஏற்படும் கழிவிரக்கம் துடைத்தெறியப்படவேண்டும். ஆங்கிலம் மட்டுமே அறிவு மொழி என்ற மேற்குலக ஆதிக்க குணாம்சத்தின் அடியாட்களாகிப் போதகர்களாகும் போக்குக் களையப்படவேண்டும்.

எட்டாவதாகத், தனிமனிதர்களுடைய ஆளுமைப் பண்புக்கு கௌரவம் வழங்கும் பொழுது ஊழல், நேர்மையீனம், பணச்செருக்கு ஆகியவற்றில் மூழ்கித் திளைத்தவர்களை மனிதர்களாக மதிப்பதையே தவிர்க்க வேண்டும்.

ஒன்பதாகவதாகத், தமிழர்கள் என்று வரைவிலக்கணப்படுத்தும் பொழுது உழைப்பில் ஈடுபடும் உழைப்பாளர்களான மக்களையே கருதிக் கொள்ளவேண்டும். பெரும் முதலாளிகளை தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் என்று கருதிச் செயற்படலாமே தவிர அவர்களின் ஆதிக்க கருத்தியலுக்கு செவி சாய்த்து தமிழர் சமூகத்தை பலியிடுவதை அனுமதிக்கக்கூடாது.

பத்தாவதாக,, உலகமயச் சிந்தனையை நிராகரித்து ஒடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட மூன்றாமுலக நாடுகளின் நட்புறவை உருவாக்கி உலகமெலாம் ஒடுக்கப்பட்ட தேசங்களுடன் சர்வதேச உறவைப் பூணுவது மட்டுமே தமிழர் விடுதலைக்கான சர்வதேச அனுதாபத்தையும் ஆதரவையும் பெறமுடியும் என்பதால் ஏகாதிபத்திய சார்பு நிலை கைவிடப்பட வேண்டும்.

மேலே எடுத்துக் கூறப்பட்ட பத்து அம்சங்களிலும் உறுதியான பிடிப்பையும் கொள்கையையும் நடைமுறையையும் பகிரங்கப்படுத்திச் செயற்படுவதன் மூலம் மட்டுமே தமிழர் சமூகம் விடுதலையை நோக்கி வீறுநடைபோட இயலும்.

மாறாக, அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் இந்தியாவுக்கும் அஞ்சுவதன் மூலமோ அல்லது அஞ்சுவது போல் பாசாங்கு பண்ணுவதாலோ அல்லது அமெரிக்கா, யப்பான், இந்தியா ஆகியவற்றுக்கு அனுசரணையாக வழிவிட்டு வரவேற்பு பாடுவதாலோ தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களின் அச்சத்தையோ சமாதானத்தின் மீது அவர்களுக்கிருக்கும் அவ நம்பிக்கையையோ போக்கிவிட முடியாது.

தமிழ்த் தலைவர்கள், தொடர்ந்தும் தமிழ் மக்களைப் புறக்கணித்தால், தமிழ் மக்கள் தம் வழியைத் தாமே தீர்மானிக்க நிர்ப்பந்தப்படுவதிலிருந்து தவறமுடியாது,

புதிய பூமி
ஒக்ரோபர், 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 கட்சி சாராத அரசியலும் வெகுஜன வேலைமுறையற்ற இயக்கமும் வெறும் மாயையே

தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டுமெனில் தமிழ்த் தலைவர்கள் தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதைத் தடுத்து நிறுத்துவது தலையாய கடமையாகும்.

தனியே தேர்தலில் தமிழ் அடையாளம் காட்டி ஒன்றுபடுவதும் - தமிழ் முனைப்பை வெளிப்படுத்தித் தமிழின் பெயரால் வாக்குகளைக் கூட்டி அள்ளிச் சேர்ப்பதும்- அவற்றை வைத்துக்கொண்டு வாக்கு வங்கியின் பேரில் சிங்களப் பேரினவாத அரசாங்கங்களுடன் பேரம் பேசி அரசியல் அரங்கில் ஆடிச் சமரசம் செய்து தத்தம் அலுவல்களில் ஈடேற்றம் காண்பதும்- பிரிவதும் தூஷிப்பதும் மீண்டும் மீண்டும் இனத் துவேஷம் ஒன்றே தூய அரசியல் எனக் கூறுவதும்- ஒன்றாய் ஒரே குலமாய் தேர்தலில் நிற்பதும்- தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வ தும்- தமிழின் தூய்மையின் பெயரால் செய்துவரப்படும் ஐம் பது வருடகால அரசியல் பம்மாத்தின் தொடர் கைங்கரியமாகும்.

இத்தகு நச்சுச் சுற்று அரசியற் சூழலிலிருந்து தமிழ் மக்கள் தம்மை விடுவித்துத் தற்காத்துக்கொள்ள வேண்டுமெனில் அரசியலைத் தமது கைகளில் ஏந்தத்தயாராக வேண்டும். எந்தவொரு மனிதரும் அரசியல் பிராணி என்ற இயற்கை நியதியிலிருந்து விலகியிருக்க முடியாது. எனவே பின்வரும் ஏழு அம்சங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதரும் தன்னளவில் நிறைவு செய்வதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு தன்னைத் தயார்ப்படுத்தாது இம்மியளவும் அரசியல் கலவாத தூய்மையாளராக வாழ விரும்பும் ஒருவர் ஊதாரித்தனமான வெற்று அரசியல் விமர்சகராக இருக்கலாமேயொழிய ஒரு சமூக மாற்றத்துக்குரிய பொறுப்புள்ள மனிதராக இருத்தல் சாத்தியமல்ல.

முதலாவதாக, எந்தவொரு மனிதரும் தன்னை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்திக் கொள்வதில் தயக்கம் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். தனிமனிதர் ஒவ்வொருவரும் அரசியல் கொள்கை, கோட்பாடு என்பனவற்றை தேர்ந்து தெளிந்து கொள்வதுடன் மட்டுமன்றி தமது மனச்சாட்சிக்கு விரோதமின்றி ஏதேனுமொரு இயக்கத்துடனோ, கட்சியுடனோ தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு எந்தவொரு ஸ்தாபனத்துடனும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதெனும்போது அவர் அத்தகைய ஸ்தாபனத்தில் ஓர் அங்கத்தவராகவோ ஆதரவாளராகவோ அனுதாபியாகவோ கூட இருக்கலாம். இவ்வாறாகத் தனக்கும் அத்தகைய ஸ்தாபனத்துக்குமிடையிலான உறவை வெளிப்படையாக எங்கும் எப்போதும் எவரிடமும் கூறக்கூடிய துணிவு பெற்றிருக்க வேண்டும். இவ்விதமாக அரசியற் கட்சிகளுடனும் எவ்விதமான உறவுகளுமின்றித் தமது அரசியல் அடையாளத்தை வெளிப்படுத்தத் தயங்குபவர்களும் தடுமாறுபவர்களும் உயர்வர்க்க நலனுடையோரும் மத்தியதர ஊசலாடும் மனோபாவமும் வாய்க்கப்பெற்றவர்களாக இருப்பதுடன் சந்தர்ப்பவாத அரசியலுக்கும் ஆதாயங்களுக்குமாக 'வாடியிருக்கும் கொக்கு'ப் போன்றோராவார். இவர்கள் தம்மைத் தூய்மைவாதிகளாகவும் கண்ணியமிக்க அரசியல் புரிந்தோராகவும் வெளிக்காட்டும் பொய் முகத்தோற்றமுடையோர் எனலாம்.

இரண்டாவதாகப், பாராளுமன்றத் தேர்தல்களில் ஆட்சியாளர் களின் நிகழ்ச்சிநிரலுக்கேற்பத் தாமும் சேர்ந்து தேர்தல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுபவர் களாகவோ அல்லது வெல்லக்கூடிய கட்சிக்கோ இயக்கத்துக்கோ வக்காலத்து வாங்குபவர்களாகவோ அன்றி ஸ்தாபனத்தின் இலக்கை வரித்துக்கொண்டு உண்மையின் பக்கத்திலும் நேர்மையின் பக்கத்திலும் தம்மை வெளிப் படுத்திக்கொள்ள வேண்டும். இதன் மறுமுனையில் பாராளு மன்ற அரசியல் விளையாட்டில் மக்களின் அரசியல் உளவிய லுக்கு விரோதமாகத் தோல்வியே நிஜம் என்று எப்போதும் விரக்தியின் விளிம்பில் நின்று விளாசுவதும் வெறுக்கத்தக்கதா கும். பாராளுமன்றத் தேர்தலின் பிரச்சாரம் மூலமோ தொடர்ந்து பெறும் தோல்விகள் மூலமோ அரசியல் பணியை ஆற்றி ஆறி அமர்ந்துகொள்ள இயலாது. அரசியல் என்பதன் முற்றுமுழுதான களம் பாராளுமன்றம் என மயங்குவது விடுதலையை நேசிக்கும் மக்களின் நிஜமான அரசியலாக இருக்கமுடியாது. எனவே பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பயன்படுத்துவதில் மக்களுக்கு நம்பிக்கையையும் நன்மையையும் ஏற்படுத்துமென்பதுடன் ஸ்தாபன வளர்ச்சிக்கு உந்துவிசை அளிக்குமெனின் மட்டுமே அவற்றில் ஈடுபடல் வரவேற்கக் கூடியதாகும்.

மூன்றாவதாக, அரசியல் என்பது பாராளுமன்ற எல்லைச் சுவர்களுக்கப்பால் பரந்த வெகுஜனத் தளத்தில் நிகழ்த்தப்பட வேண்டியதாகும். பொது மக்கள் மத்தியில் அரசியல் அறிவை ஊட்டுவதிலும் விழிப்புணர்வைத் தூண்டுவதிலும் விட்டுக்கொடுக்காத வேலைமுறையை தனிமனிதர் ஒவ்வொரு வரும் தான் தான் சார்ந்திருக்கும் ஸ்தாபனத்தின் வேலைத் திட்டங்களினூடாக முன்னெடுப்பதும் முக்கியமாகும்.

நான்காவதாக, அரசியல் வேலைத் திட்டம் என்பது வெறுமனே மக்களை ஏதிலிகளாக்குவதாகவோ அன்றி இரப்போராகக் கருதி இயக்கம் என்பது வள்ளண்மை மிக்க ஸ்தாபனமென, வேடம் புனைந்து மேலாதிக்கம் புரிவதோ ஆகாது. அரசியல் பணி. மக்களுக்கு அன்றாடம் நெல்லும் மீனும் கொடுப்பதல்ல. தமது அன்றாட வாழ்வை நடத்தும் ஆற்றல் பெற்றோராக, ஆளுமை மிக்கோராக மக்கள் மாற்றம் பெறும்படி உழைக்கத் தூண்டுவதே அரசியல் பணியாகும். நெல்லும் மீனும் கொடுப்பதற்குப் பதிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்க உழுநிலம் மீன்பிடித்து வாழத் தூண்டிலும் கிடைக்கச் செய்வதே அரசியலாக வடிவம் பெறவேண்டும்.

ஐந்தாவதாக, மக்கள் மத்தியில் வெகுஜனத்தளங்களைக் கட்டியெழுப்ப வேண்டும். ஒவ்வொரு மனிதரும் தான் வாழும் கிராமத்திலோ நகரத்திலோ தன் தொழில் நிலையத்திலோ கடலிலோ வயலிலோ தொழிற்சாலையிலோ மக்களுடன் ஐக்கியப்பட்டு அவர்களின் பல்வேறு ஆற்றல்களையும் வெளிக்கொணர்ந்து ஒன்றுபட்ட சிந்தனைக்கும் செயலுக்கும் உரம் சேர்க்க வேண்டும்.

ஆறாவதாக, உலகமயமாதலின் கீழ் ஒவ்வொருவரும் தன்னைத் தனித் தீவாக்கிக் கொள்வதால் மக்கள் தமக்கிடையே தளை களை போட்டுத் தத்தளித்து நிம்மதி இழந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில் ஒவ்வொரு மனிதரும் சமூக உணர்வு பெறும்படி அரசியல் விழிப்பையும் ஒற்றுமையின் பலத்தையும் அனுபவத்தில் உணரும்படி செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி "இன்பமே எங்கள் இலக்கு" என்ற இலட்சிய வேட்கை பூண்டோராக கலை- பண்பாட்டு விழுமியங்களைப் புத்தாக்கம் செய்து புதுப்பொலிவு பெறும் வண்ணம் ஒவ்வொருவரும் பிறருடன் உறவு கொள்ளல் வேண்டும்.

ஏழாவதாக, எந்தவொரு பிரதேசமும் தனது கருமங்களை தானே செய்யும் வல்லமை பெறக்கூடியதாக இருக்க வேண்டும். நிதிவளம் இரந்து பெறுவதாகவோ பணிந்து பெறுவதாகவோ அமையாது, சுயசார்பிலும் சொந்தக் காலிலும் நின்று பெறுவதாக மாற்றம் பெற வேண்டும். ஒவ்வொரு மனிதரும் தனது நலனுக்காகவும் குடும்பத்தினருக்காகவும் சேமிப்பு நிதியை ஊக்குவிப்பது போன்று அவ்வப் பிரதேச வளத்துக்கும் வளர்ச்சிக்குமாகப் பொது நிதியைச் சேர்க்கவும் சேமிக்கவும் அவ்வவ் பிரதேச மூலவளங்களுக்கேற்பத் தொழில் வாய்ப்பை அபிவிருத்தி செய்யவும் அனைவரும் ஒன்றுபட்டு அரும்பணி ஆற்றுவதில் ஒருமுகமாகச் செயற்படவேண்டும்.

மேற்குறித்த ஏழு விடயங்களிலும் தனிமனிதர்களும் ஸ்தாபனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் ஒருமுகமாகப் பணிபுரியும்போது சமகாலக் குறுந்தேசிய குணாம்சங்களிலிருந்து தமிழ் மக்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ள முடியுமென்பதுடன் மக்கள் புதிய அரசியற் பண் பாட்டை நோக்கி அவதானத்துடன் நடைபோட முடிவதுடன் மாயாவாத அரசியல் வேஷதாரிகளிடமிருந்து விலகி சொந்த பலத்தில் மக்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ளமுடியும்.

இத்தகு வல்லமை மிக்க மக்களின் அரசியல் வழிகாட்டியாக மக்கள் நலன்பேணும் அரசியல் கட்சியொன்று செல்வாக்குடன் செயற்பட்டு புதிய அர்த்தங்களுக்கும் புதிய அரசியல் போக்குகளுக்கும் கட்டியம் கூற முடியும்.

அரசியல் பண்பாட்டை வளர்த்தெடுப்பதன் மூலமே மக்களும் ஸ்தாபனமும் சிறப்படைய முடியும்.

இத்தகைய பண்பாட்டை வளர்த்தெடுக்கத் தமிழர் சமூகம் தன்னை தயார்ப்படுத்திக்கொள்ளுமா?

புதிய பூமி
நொவம்பர், 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவேறு உலகங்கள், இருவேறு மனிதர்கள் 20

பிரபஞ்சத்தில் வீதி உலாவரும் பூமிப்பந்தில் இதுவரை எமது அறிவுக்குட்பட்ட அளவில் மனிதர் வாழும் பூமிப் பூங்காவில் இன்பமயமான உலகைப் படைக்க மக்கள் நாம் காலாதிகால மாக முயன்று வருகிறோம். எனினும் இன்பத்தைத் தேடும் மனிதப் பயணத்தில் இலக்குகளை எட்டிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வேளையும் எவற்றினாலோ நாம் வீழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மனித சமூக சாரத்தின் இன்ப இலக்குகளைத் தட்டிப்பறிக்கும் அந்தப் பகற்கொள்ளைக்காரரர் விண்ணில் உலாவும் எந்த வேற்றுக்கிரகத்தில் இருந்தும் எவரும் வரவில்லை. அப்படி யாயின் யார் அவர்கள்? அவர்கள் இந்தப் பூமிப்பந்திலேயே மிதக்கிறார்கள். அவர்கள் மனித வேடத்தில் பிறந்த ஆதிக்கம் என்கிற சுயபோதை வெள்ளத்தில் சுழியோடும் அதிசூரர்கள். இவர்களின் ஆதிக்க அடிச்சரடாக அமைவது பொருளாதாரப் போதையாகும். தனிச்சொத்துடமை என்கின்ற நோயால் பீடிக்கப்பட்ட மனக்குழப்பக்காரராகும். இவர்களின் பேரா சைக்கு ஒரு குடிசையோ, ஒரு கோபுரமோ, ஒரு குடும்பமோ, ஒரு கிராமமோ, ஒரு நகரமோ, ஒரு பிரதேசமோ, ஒரு நாடோ, ஒரு கண்டமோ, ஒரு முழு உலகமோ மட்டும் போதாது. மனிதர்களை மட்டுமன்றி இயற்கையையும், வேற்றுக் கிரகங்களையும் விழுங்க வேளை பார்த்திருக்கும் சுற்றுச் சூழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோதிகளாக- மக்களின் எதிரிகளாக உள்ளிருந்தே கொல்லும் எயிட்ஸ் வைரஸ் கிருமிகளாக வாழும் மானுடர் எம்முடனேயே கூடிக்குலாவி- எமது இன்ப- துன்பங்களில் பங்காளராகவும் பகையாளராகவும் எம்முடனேயே கூடிக்குலாவி வேண்டிய வேளைகளில் வேடமிட்டு உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை மட்டுமன்றி எம் அனைவரதும் உள்ளத்தினுள்ளே உவப்பாக ஊறித் தமது ஆதிக்கப் புத்தியை மனித ஜீவிப்பாகவே மாற்றிக் கொண்டிருப்பவர்கள். குடும்பம் முதல் குவலயம் வரை ஊடுருவிப்பாய்ந்து பீடித்திருக்கும் ஆதிக்க விஷ வித்துக்கு நீரூற்றி வளர்த்து இன்று உலகமயமாகி பிரபஞ்சத்திலிருந்து இப் பூகோளத்தையே பலியாக்கத் துடித்து நிற்கும் வர்க்க விரோதிகளே மானுடப் பிறவிகளின் முதலாந்தர எதிரிகளாவர்.

இவர்களை இனங்காண்பது மிகவும் கடினமான காரியமாகும். பலபல நூற்றாண்டுகளாக மனிதர்கள் வர்க்கங்களாக பிளவுண்டதிலிருந்து இவர்கள் எம்மை ஆதிக்கம் செய்து வரும் சிறு குழுவினராவர். தனிச் சொத்துடமை- மூலதனம்- பணம் என்ற பாறாங்கற்களை எழ முடியாதவாறு மனித சமூகத்தின் மீது அழுத்தி வைத்திருக்கிறார்கள்

வரலற்றில் ஒரு பெண் அடிமையாக்கப்பட்டபொழுதே ஆதிக்கம் ஆரம்பமாகி விடுகிறது. குடும்பம் என்பது இரத்த உறவினை மீறி பொருளாதார அலகாக ஆக்கப்பட்ட நாளிலிருந்தே மனித ஜீவியின் குணவியல்புகளான அன்பு, பாசம், நேயம் என்ற விழுமியங்கள் யாவும் வீழ்ச்சியடையத் தொடங்கியது மட்டுமன்றி மனித விகாரங்களைப் பெற்று விட்டன.

இந்த ஆதிக்க சக்திகளின் கோட்டைகளாக எமது வரலாறு முதல் சமகால அன்றாட வாழ்வுவரை எம்மைப் பீடித்து நிற்கும் ஆதிக்க குணாம்சத்தை அடையாளம் கண்டு தெளிந்து, அவற்றுக்கப்பால் எமது சுய பாதுகாப்பையும் சுயகௌரவத்தையும் மனுக்குல இன்ப வெளியையும் மீட்க வேண்டுமெனில் நாம் ஒவ்வொரு மனிதரும் ஆதிக்கம் தேடி அலையும் மனோபாவத்தைப் பலியிட வேண்டும். இவற்றுக்குத் தீர்வுகாணச் சமயங்களால் இயலவில்லை. சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தஞ்செய்ய முயன்றவர்களையே ஆதிக்க எசமானர்களான எதிரிகளே தமக்குள் அகப்படுத்திப் பல நூற்றாண்டுகளாக மதப் போர்களால் ஏற்கனவே எமது உலகத்தை சீரழித்தது மட்டுமன்றி இன்றுவரை எம் உள்ளத்திலும் வெளியிலும் ஊடுருவி ஆதிக்க உணர்வுகளையே வளர்த்து வரும் விஷ விருட்சங்களாகிய யதார்த்தமே நடைமுறையாகிவிட்டது. எனவேதான் ஆதிக்க மனோபாவத்தைப் பலியிட மதங்கடந்த மானுட நேயம் நோக்கி நாம் பயணிக்க வேண்டியவர்களாயுள்ளோம்.

எமது சமகால அனுபவத்துக்குட்பட்ட உதாரணத்தை எடுப்போமாயின் 'ஆசையே துன்பத்துக்கு காரணம்' என்ற பௌத்தத்தின் பேரால் இலங்கையில், **1972, 1978** அரசியல் யாப்பில் பௌத்தமும் முதன்மை பெற்ற பேராசையும் அதை எதிர்த்த கிறிஸ்தவமும் இன்றுவரை தீராப் பகையாகி கலவரமாகி யுத்தமாகி ஏகாதிபத்திய-பிராந்தியப் பேராசைகளின் தளமாக அழகிய சிறிய இலங்கைத்தீவு அகப்பட்டுக் கொண்டு விட்டதே! இந்து-இந்தியா-பௌத்தம்-இலங்கை என்ற ஒட்டுறவுப் பண்பாடு பாரதத்தின் ஆதிக்கப் பாம்பாகிப் படமெடுத்தாடும் சிங்களப்பேரின வெறியாகி, ஆழ வேரூன்றி சிஹல உறுமய முதல் ஜே.வி.பி. வரை போதையேறி மேற்குமய கிறிஸ்தவ எதிர்ப்பு என்ற மாயமாலம் காட்டி தம்முடன் வாழும் சக தமிழர்களையே அந்நியராகவும் எதிரிகளாகவும் பார்த்து விகாரை முதல் பாராளுமன்ற வாயிலூடாக ஊடகங்கள் ஈறாக உலகில் சிங்களவருக்குரிய ஒரேநாடு இலங்கை என்று உரு வேற்றி உருக்குலைந்து அழிகிறார்களே! சமயஞ்சாதித்தது என்ன? ஆசை அகன்றதா? துன்பந்தொலைந்ததா? இந்தியா இந்துத்துவத்தால் இந்தியாவையே தேசிய இனங்களின் சிறைக் கூடங்களாகச் சிதைத்துக்கொண்டிருக்கிறதே! சுயநிர்ணய உரிமை என்ற சொல் கேட்டதுமே விஸ்வரூபம் பெற்று இலங்கையைத் தன்காலால் அளந்து தனது பண்பாட்டு ஆதிக்கத்துக்கும் அப்பால் அரசியல்-பொருளாதார நலன் பேணித் தனது உத்தியோகப்பற்றற்ற இன்னொரு மாநிலமாக்கிக் கொண்டுவிட்டதே. ராமர் பால மிடாதது மட்டுமே பாக்கி! ஜெயலலிதா அம்மையாரைப் போற்றுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்க மனோபாவத்தை அகற்ற வேண்டுமெனில் மதத்தை ஆராயப்புகின் எமது மனோபலமே கெட்டுக் குட்டிச் சுவராய்ப்போம். ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் எமக்கு கிடைத்த ஒளி மாக்சியமாகும். அது லெனினிசமாக வளர்ந்த தத்துவஞானமாகும். "பட்டப்பகலில் கொள்ளையிட, முகட் டைப்பிரிக்கத் துணிகின்ற, மூர்க்கர் ஆளும் உலகிதனை, முழு தும் கழட்டிப்பூட்டாமல், முடியாதையா, நலம் காணல் சகட்டு மேனியாய் எதையும், தருமம் என்று காட்டுகிற, சனியன் பிடிச்ச போக்குகளைத், தட்டிக் கேட்க வேண்டாமோ, இகத்திற் பொது மைச் சமன்பாட்டால், இயற்றிக் காட்ட வேண்டாமோ" என்ற முருகையனின் குரலில் முழுச் சமூகமும் முரண்படுவோமா?

வர்க்கங்களாகப் பிளவுண்ட சமூகத்தில் 'எதையும் தருமம் என்று காட்டும் சனியன் பிடிச்ச போக்குகளை தட்டிக் கேட்பது இனி யார்? இறந்த காலத்தைப் பழிப்பதால் பலனில்லை. எதிர் காலத்தை நிகழ்காலத்தில் செப்பனிட நாம் தயாராக வேண்டாமா?

புராதன பொதுவுடமைச் சமூகமாயிருந்து பிளவுண்ட வர்க்கச் சமுதாயத்தை மீண்டும் கழற்றிப் பூட்டித் திருத்த வர்க்கப்போராட்ட மார்க்கமே தனிவழியாகும். அது பன்மைத் தன்மை கொண்ட மானுடநேயம் மிக்க- யுத்தமற்ற- இனவெறியை நிராகரிக்கும் உலகத்தைப் பேணுவதாகும்.

குடும்ப உறவில் நிலவும் பரஸ்பர கடமையை அன்றிப் பொருளாதார அலகின் ஆதிக்க குணாம்சத்தை நாம் ஒவ்வொருவரும் ஆணிவேரோடு- வேரும் வேரடி மண்ணுமாக கிளப்பிவிடவேண்டும். ஊடலும் கூடலும் என்ற சிநேக முரண்பாட்டின் மூலம் சமூகத்தின் புதிய வாழ்வையும்- புதிய பண்பாட்டையும் உருவாக்கும் பணியை நாம் இப்பொழுதிலிருந்தே தீர்மானிக்க வேண்டும்.

நாம் தற்போது முகம் கொடுக்கும் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக மக்கள் போராட்டம், மக்கள் யுத்தம் என்பதற்கு அப்பால் பழமைவாத ஆதிக்க குணாம்சத்தில் 'உலகெலாம் வாழுந்தமிழருக்கு ஒரு நாடில்லை. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழம் அமைப்போம்' என்பது ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசத்தைச் சிலுவைப்போரின் பின்னால் அலைக்கழித்துச் சியோனிச இஸ்ரேலின் பாசறைப்பள்ளி மாணவராக்கி -அமெரிக்க உலக ஏகாதிபத்திய நுகத்தடி சுமப்பவர்களாக ஆக்கிவிடும் அபத்தத்தை தமிழ்த்தேசியம் தெரிந்து கொள்வதும்-தெளிந்துகொள்வதும் காலத்தின் கடனாகும்.

ஆதிக்க சமுதாயத்தில் பலசாலி தான் பயன்படுத்தும் ஆதிக்கம் மூலம் வெல்வான், தமிழ் மக்களைப் பயன்படுத்தல், சிங்கள வரைப் பயன்படுத்தல், முஸ்லிம்களைப் பயன்படுத்தல், இந்தியாவைப் பயன்படுத்தல், அமெரிக்காவைப் பயன்படுத்தல் என்பதை எல்லாம் எம்மை இன்று சர்வதேச சதிவலைப் பின்னலுக்குள் சிக்கவைத்திருக்கிறது. துரோணரின் பத்ம வியூகத்தினுள் அகப்பட்டுள்ள அபிமன்யு போல் இலங்கைத் தீவும் தமிழரும், சிங்களவரும், முஸ்லிம் மக்களும் துடித்துக்கொண்டிருக்கிறோம்.

இதில் வென்றவர் யார் என விவாதிக்க நேரமில்லை. அதுவே மீண்டும் மீண்டும் யுத்தமாகித் தீராத நோயாகிச் செல்லும். தேசிய இனங்களிடையே ஊடுருவியிருக்கும் ஆதிக்கப் பெருமுதலாளித்துவ-பல்தேசிய ஆதிக்க சக்திகளை இனங்கண்டு அடையாளப்படுத்தித் தனிமைப்படுத்திக் கட்டுடைத்துப் பார்க்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

ஒடுக்கப்பட்ட தமிழ்த்தேசியம் இதற்குத் தன்னைத் தயார்படுத் திக் கொள்ளுமா? இருவேறு உலகங்களைத் தேடுமா? இருவேறு மனிதர்களைத்தெரிந்து கொள்ளுமா?

'போராட்டம்-தோல்வி, மீண்டும் போராட்டம்-மீண்டும் தோல்வி, மீண்டும் மீண்டும் போராட்டம் வெற்றிவரை' இதுவே உழைப்பாளரின் போராட்ட விதியாகும். மாற்றம் ஒன்றே மாறா நியதி என்ற சமூக விஞ்ஞானம் காட்டும் ஒளியாகும் - நாம் தயாரா?

புதிய பூமி
டிசம்பர், 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ ஆளுக்குப் பத்துப்பேர் ஊருக்கு நூறு பேர்

இருவேறு உலகங்கள் இருவேறு மனிதர்கள் என்பது உலகத்து இயற்கையாகும். வள்ளுவரின் குறள் மொழியில் கூறுவதானால்,

'இருவே றுலகத் தியற்கை திருவேறு

தெள்ளிய ராதலும் வேறு'

என்பதாகும். பணப்பித்திலுழலும் உளச் சிக்கலுடைய தனியுடைமைக் கொள்கையுடையோர் எக்காலத்திலும் தெள் ளிய அறிவுடையோராகார். ஆதலால் 'இழப்பதற்கு எதுவு மற்றவர்கள் உழைப்பாளர். ஆனால் வெல்வதற்கு உலகை உடையவர் ஆவார். அத்தகைய உழைப்பவர் அதிகாரம் உலகில் நிறுவப்படுவதன் மூலம் மட்டுமே தனியுடைமைப் பித்து தகர்க்கப்படும். தனியுடைமைத் தகர்ப்பின் மீது பொதுவுடைமைக்கான அத்திவாரம் கட்டியெழுப்பப்படும். உலகமும் இயற்கையும் உயர்வர்க்க மானுடப் பிசாசு களிடமிருந்து மீட்கப்பட்டு உழைப்பாளி மக்களுடைய பொதுமைக்காகச் சமர்ப்பணம் செய்யப்படும். இத்தகு வரலாற்றுப் பொருள் முதல்வாத இயங்கியல் விதியினின்று விலகி பிரபஞ்ச வெளியிலிருந்து இப் பூமிப்பந்தை எவராலும் உருட்டிச் சென்றுவிட இயற்கை விஞ்ஞானமும் சமூக அரசியல் விஞ்ஞானமும் அனுமதிக்காது என்பதை உழைக்கும் மக்களின் மாக்சியம் எமக்குத் தெளிவுபடுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த தசாப்த காலத்துக்கு முதல்வரை தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்து எம்மை நெறிப்படுத்தி வழிகாட்டிய தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் சுட்டிய அரசியல் மார்க்கமே இலங்கைத் தமிழ் மக்கள் கண்டு கொள்ள வேண்டிய அரசியற் பாடமாகும். தமிழ்த்தேசியத்தின் தலைமையைத் தரகு முதலாளிகளிடமோ, பெரு முதலாளிகளிடமோ, சிறு முதலாளிகளிடமோ, பல்தேசியக் கொம்பனிகளின் உள்ளூர் முகவர்களிடமோ இன்னும் இருக்கவிட்டு அரசியலில் பேசா மடந்தையராக உழைப்பாளி மக்கள் இனியும் ஒதுங்கியிருந்துவிட முடியாது. எனவே தான் தமிழ்த் தேசியத்தின் வரலாறு, தான் நடந்து வந்த பாதையில் மூன்று கட்டத் தலைமைகளைச் சந்தித்துள்ளது. இவற்றினூடாக மக்கள் அனுபவித்த துன்பங்களும் கொடுமைகளும் அனுபவித்துக் கொண்ட போராட்ட சுவாலைகளும் அதிகம். ஆனால் அவற்றின் விளைபயன்கள் பணப் பித்துடைய தமிழ்த் தேசியவாதிகளின் அரண்மனைகளையே அலங்கரித்தன. ஆனால் உழைக்கும் வர்க்கத் தலைமை உதாசீனம் செய்யப்பட்டது. இந்த நாட்டுத் தமிழ்த்தேசியம் உழைப்பாளரின் கைகளுக்கு மாற்றப்பட வேண்டும். நாலாம் கட்டத் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இன்னும் நெருப்பாற்றை நீந்திச்செல்ல இந்நாட்டு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதனையே அண்மைக் காலச் சர்வதேச உறவுகளும் நெருக்கடிகளும் சர்வதேசச் சதிவலைகளும் எமக்குப் பாடம் போதித்துள்ளன.

இச்சர்வதேசச் சதிவலையை தமிழ் மக்கள் மட்டுமன்றி இலங்கையில் வாழும் பல்லினத் தேசிய சக்திகளும் மக்களும் எதிர் கொள்கின்றனர். முதலாவதாக எமக்கு முன் நிறுத்தப்பட்டுள்ள வினா. இச் சதிவலையில் சிக்கி நாம் சீரழியப் போகிறோமா, பழைய வரலாற்று மத இனவெறி அடிப்படைவாதச் சேற்றுக்குள் மூழ்கப் போகிறோமா? இரண்டாவது மக்கள் அனைவரும் உழைக்கும் மக்கள் என்ற ஒருலக சிந்தனையில் உலகமயச் சதிவலையைச் சவாலாக ஏற்று -பல்லினப் பண்பாடுடைய- சர்வதேசியச் சிந்தனையின் அடித்தளத்தில் ஒன்றுபட்டுச் சமாதானப் புறாக்களாக மாறி உலகமய வேடர்விரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையைத் தூக்கியபடி உயரப் பறந்து தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்தின் சரியான அரசியல் மார்க்கத்தின் திசையினைத் தீர்மானிக்கப்போகிறோமா?

இவ்விரு கேள்விகளில் இந்த நாட்டின் மண்ணின் உப்பில் விழைந்த உதிரத்தையுடைய உழைப்பாளர் தேர்ந்துகொள்ளும் திசைமார்க்கம் எமது அனுபவப் பாடத்தினூடாக இரண்டாவது கேள்விக்கான பதிலேயாகும் எனத் தீர்மானிப்பதைத் தவிர வேறு எவ்வழியினையும் இனியும் ஏற்க முடியாது

எமது நாட்டில் வறுமைக் கோட்பாட்டின்கீழ் கிராமங்களில்-குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்கும் கோபத்தை மெச்சும் உழைப்பாளர் உலகம் ஓரணி திரளவேண்டும். தமிழ்த் தேசியத்தின் குறுநலப் பித்தைக் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

'நாட்டை யெல்லாந் தொலைத்தாய்- அண்ணே

நாங்கள் பொறுத்திருந்தோம்,

மீட்டு எமை யடிமை செய்தாய்,

மேலும் பொறுத்திருந்தோம்..

இரு பகடை யென்றாய்- ஐயோ!

இவர்க் கடிமை யென்றாய்!

'இது பொறுப்பதில்லை- தம்பி!

எரிதழல் கொண்டு வா,

கதிரை வைத்திழந்தான்- அண்ணன்

கையை எரித்திடுவோம்'

என்ற பாரதியின் பாஞ்சாலி சபத வீமன் பாத்திரங்களாக உழைப்பாளர் உலகை ஆளும் தகுதி பெற்றுச் சபதம் செய்ய மக்கள் அனைவரும் தயாராகுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்

தருமம் மறுபடி வெல்லும்' எனுமியற்கை

மர்மத்தை நம்மாலே உலகங் கற்கும்

வழிதேடி... கருமத்தை

மென்மேலுங் காண்போம்'

ஆயின் நமது கருமங்கள் எவையென நாம் திட்டவட்டமாக தீர்மானித்துச் செயற்படல் வேண்டும்.

'முப்பது கோடி ஜனங்களின் சங்கம்

முழுமைக்கும் பொதுவுடமை

ஒப்பிலாத சமுதாயம்

உலகிற்கிது வோர் புதுமை'

என்ற பாரதி கண்ட கனவை வசப்படுத்தி நிசப்படுத்தும் நிதர்சனத்தின் புத்திரர்களாக உழைப்பாளர் அனைவரும் ஒன்றுபடவேண்டும்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே- நம்மில்

ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

நன்றிது தேர்ந்திடல் வேண்டும்- இந்த

ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

பாரதியின் இந்த மந்திர வாசகம் மக்களின் புரட்சிகர விஞ்ஞாபனமாக எமது உழைப்பாளரின் உலகச் சுலோகமாக எங்கும் ஒலிக்கிறது.

'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்ஸ

ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்றுபடுங்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களாக விளங்கும் தமிழர், முஸ்லிம்கள், மலையகத்தவர் தத்தமது தேசிய இனங்களை அடையாளப்படுத்தும் அதேவேளையில் உலகத் தொழிலாளர் ஒற்றுமை பேணுவோராக - சிங்கள உழைக்கும் மக்களின் அணியையும் அரவணைக்கும் விரிந்த மனப்பக்குவம் கொண்டோராக உருப்பெறுவதன் மூலம் மட்டுமே அவரவர் குறுந்தேசியக் கோளாறுகளைக் களைய முடியும் என்பதுடன் வெற்றியை நோக்கிச் சகல தேசியங்களும் பயணிக்க முடியும்.

'சுற்றி ஏறிடினும் பாதை ஆகினும்

தூக்கி நம்மை உயர்த்திடுமே அது

வெற்றி என்பது மேல்நிலை எய்துதல்

விரிந்த விண்ணிடை மேல் உலாவுதல்'

என்ற முருகையனின் இன்ப இலக்குக்கான வெற்றியைச் சாதித்து மேல் நிலை எய்தலாம். சுருக்க வழிமுறைகளும் குறுக்கு வழி காட்டல்களும் இதுவரை மக்கள் ஏற்கனவே சகித்த இன்பங்களையும் சிதைத்துள்ளன என்பது உழைப்பாளர்களின் உள்ளார்ந்த அனுபவ பாடமாகும். சுற்றிச்சுற்றி ஏறினால் மட்டுமே மலைமீது உயரச் செல்லமுடியும். குறுக்கு வழிகள் சாண் ஏற முழஞ்சறுக்குவதாகவே முடியும். சறுக்கு மரச் சங்கதியாகவே மாறும். எனவே பல்லினத் தேசங்களிடையேயும் பகைமுரண் தவிர்த்து சிநேக உறவு பூணுவதும் புரிந்து கொள்வதுடன் பல்லினப் பண்பாட்டுப் பூங்காவில் உலாத்த எமது உள்ளத்தையும் உடலையும் அனுமதிப்பதன் மூலமுமே சமூக மாற்றத்தை சாதிப்பது சாத்தியமாகும். அதன் மூலமே, மேல்நிலை எய்தும் வெற்றியைத் தரிசிக்கமுடியும்.

அடுத்த பத்தாண்டுகள் என்பது இன்றைய சந்ததியினராக வாழும் எமது தோள்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. சமூகந்தானாய் மாறும் என்று மக்கள் தாமுண்டு. தம் அலுவலுண்டு என்று அரசியலிலிருந்து ஒதுங்கி விலகித் தூர ஓடமுடியாது. உழைப்பாளர் ஓட ஓட, மேட்டுக் குடியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலேசாகத் துரத்தியதே வரலாறாகிவிட்டது. எதிர்காலம் உழைப்பாளிக்குரியது. எனவே நிகழ்காலம் வெகுசனங்களின் கருமங்களை வேண்டி நிற்கின்றது.

வெகுசனங்கள், வேற்றாரின் வரவை எதிர்பார்த்துக் கரங்களை உயர்த்தி நீட்டி வரவேற்று 'ஐயா, அம்மா வாருங்கோ' என்று வரவேற்று இரந்துண்டு வாழ்ந்த கதை இறந்த கால வரலாறாகட்டும். மக்களின் வறுமையைத் துடைக்க மக்களே ஒன்றுபடுவோம். எமது பின்தங்கிய கிராமங்களைச் சுற்றிப்படர்வோம் சுயசார்பும் தன்னிறைவும் காண அவ்வப் பிரதேசங்களின் அக நிலைமைகளைப் பரிசீலிப்போம். எமது மண்வளத்தையும் நீர்வளத்தையும் பாதுகாப்போம். மண்ணையும் நீரையும் மற்றவன் கபளீகரம் செய்ய அனுமதியோம். எமது காற்றைச் சுத்தப்படுத்துவோம். அசுத்தப்படுத்தும் அடாவடித்தனங்களை அப்புறப்படுத்துவோம்.

கிராமங்களிலும் நகரங்களிலும் கருமங்கள் அனைத்திலும் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக இணைவோம். திட்ட மிடுவோம். நடைமுறைப்படுத்துவோம். நடைமுறைச் செயற்பாடு மட்டுமே மாற்றத்தை விளைக்கும். எனவே மீண்டும் மீண்டும் ஒன்றுபடுவோம். தமிழர் பண்பாட்டுப் புரட்சியைத் தமிழர் தாயகத்தில் சாத்தியமாக்குவோம். அனைவரும் மாக்சிய சத்தியத்தின் நேர்கோட்டில் உண்மையைக் கண்டுகொள்வோம்.

எமது சமூக வாழ்வே எமக்கு ஆதாரமாகும். உற்பத்தியைப் பெருக்கும் உழைப்பாளிகளே எமது தலைவர்களாவர். எமது கிராமங்களில் தனிமனித அந்தஸ்தில் டொக்டர், இன்ஜினியர், எக்கவுண்டன்ற், படை அதிகாரி, வர்த்தகர் என்பவர்களுக்குக் கொடுக்கும் அந்தஸ்த்தை மீள் பிரிசீலனை செய்வோம். தொழிலாளி, விவசாயி, ஆசிரியர். எழுத்தாளர் உள்ளிட்ட உழைப்போர் என்போரை தமிழர் சமூக அந்தஸ்த்தில் உயர வைப்போம். அவர்களின் தலைமையை சிரமேற்கொண்டு பணி செய்ய அனைவரும் தயாராவோம்.

அகத் திருமணச் சாதிச் சம்பிரதாயங்களுக்கும் அப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலரும் சம்பந்திகளாவோம். புத்தகங்கள் வாசிப்போம். அறிவைப் பெருக்குவோம். விவாதிப்போம் உடன்படுவோம். முரண்படுவோம். அதே வேளை ஒன்று படுவோம். செயற்படுவோம்.

நாம் ஒவ்வொருவரும் பத்துப்பத்துப் பேராக அணிதிரள்வோம். ஒவ்வொரு ஊரிலும் நூறு பேராக ஒன்றுபடுவோம். அடுத்த தசாப்தம் உழைப்பாளரின் ஒற்றுமைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறது. இயற்கை மருமத்தை நம்மாலே உலகங் கற்கும் கருமத்தை மென்மேலும் காண்போம். நாம் தயார். நீங்கள் தயாரா? நேரில் சந்திப்போம்.

புதிய பூமி
டிசம்பர் 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 01

# உடைக்க வேண்டிய பிற்போக்குத் தமிழ்த்தேசியம்

நிலவுடைமை வழிவந்த மேட்டுக்குடி ஆதிக்கக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு அனைத்துத் தளங்களிலும் மிக இறுக்கமான பிற்போக்குத்தனங்களைக் கொண்டிருப்பது.

வெற்று இன, மொழிப் பெருமை பேசிப் பழைமைவாதத்தினுள் உழன்று உழைக்கும் தமிழ் மக்களை இன மொழி உணர்வு மாயைக்குள் அமிழ்த்தி வருவது.

வர்க்க அடிப்படையிலான உழைப்புச் சுரண்டலை நடைமுறையாகக் கொண்டு உழைக்கும் தமிழ் மக்களைப் பன்முக வழிகளில் சுரண்டுவதைப் பாதுகாத்து வருவது.

தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் என்போரின் அடிப்படை உரிமைகளையும் நியாயமான கோரிக்கைகளையும் என்றுமே தமிழ்த்தேசியம் தனது நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளாமல், அவற்றை இன, மொழி, மத, பண்பாட்டு உணர்ச்சிமயத் திரைகளால் மறைத்து திசை திருப்பி நிற்பது.

அரசியல் தளத்தில் சொத்து சுகம் கொண்ட உயர் சாதி, உயர் வர்க்க மேட்டுக்குடி ஆண்ட பரம்பரைச் சிந்தனைகளையும் நடைமுறைகளையும் கொண்டிருப்பது.

பிராமணியக் கருத்தியல் வகுத்தளித்த சாதியப் படிநிலை அமைப்பைப் பேணிப் பாதுகாத்து உயர்குடி வேளாள ஆதிக்கமாக முன்னெடுத்து தாழ்த்தப்பட்ட மக்களைப் புறந்தள்ளி வந்திருப்பது.

சைவ, கிறிஸ்தவ மதங்களது பிற்போக்குத்தனங்களின் மறைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்க அரசியலை முன்னெடுத்துச் சொத்து சுகங்களைப் பாதுகாத்து வருவது.

பழைமைவாதப் பண்பாட்டின் தொடர்ச்சியை மரபு, வழமை, சடங்கு, சம்பிரதாயங்கள் மூலமும் அறிவியலுக்கு முரணான கருத்தியல்கள் மூலமும் மூடத்தனங்களாகப் பேணி வருவது.

தமது அரசியல் இருப்பிற்கும் நீடிப்பிற்குமான, இன-மத-மொழி-பிரதேசத் துவேஷங்களை உசுப்பி இனவாதத்தில் காலூன்றி நிற்பது.

சிங்கள, முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களை இழிவாகவும் இரண்டாம் தரமாகவும் நோக்கச் செய்வதுடன் அவர்களுடனான தமிழ் மக்களின் ஐக்கியத்தை தடுத்துக் கொள்வதில் என்றும் கவனமாக இருந்து வருவது.

அதே வேளை, சிங்கள மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகளோடு வர்க்க, சாதிய உறவு நிலையில் ஐக்கியம் பூண்டிருப்பது.

மதம், பண்பாடு, மரபு, சீதனம் என்பனவற்றின் பெயரால் பெண்களை அடிமைத்தனமாகவும் இரண்டாந்தரமாகவும் நடாத்தும் கருத்தியலை ஏற்றுக் கொண்டிருப்பது.

நச்சுத்தனமான அந்நியக் கலை இலக்கியங்களுடனும் சீர்குலைவுப் பண்பாட்டுக்கோலங்களுடனும் எவ்வித முரண்பாடோ எதிர்பார்ப்போ இன்றி இணங்கிப் போவது.

வரலாற்றுத் தொடர்பு, தொப்புள் கொடி உறவு என்ற பெயர்களில் இந்திய ஆளும் வர்க்கத்திடம் எப்பொழுதும் அடிமைத்தனமாக இருந்து வருவது.

கொலனிய எசமானர்களுடனும் பின்பு ஏகாதிபத்தியவாதிகளுடனும் நம்பிக்கைக்குரிய அடிமை விசுவாசத்துடன் நடந்து கொள்வதுடன் அவர்களது நவகொலனிய பொருளாதார அரசியல் நலன்களுக்குப் பக்கத் துணையாக இருந்து வருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய அனைத்தும், புனிதமானவையாகவும் உயர் வானவையாகவும் சித்திரிக்கப்பட்டு என்றென்றும் கட்டிக்காக்க வேண்டியனவாகக் கூறப்பட்டுத் தமிழ்த் தேசியத்தினுள் படிந்திருக்கும் பிற்போக்குக் கூறுகளாகும். இவை உடைக்கப்படாவிடின் ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனம் உண்மையான விடுதலைப் பாதையில் பயணிப்பது இயலாததாகும்.

# உருவாக்க வேண்டிய முற்போக்குத் தமிழ்த்தேசியம்

தமிழ்த் தேசியம் கொண்டிருக்கும் பழைமைவாத ஆதிக்கக் கருத்தியல் மீது கேள்விகளை எழுப்பிச் சமூக வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவற்றை நிராகரிப்பது.

காலத்திற்கொவ்வாத இன, மொழிப் பெருமை பேசி வீணே காலத்தைக் கழிப்பதையும் வெறும் இன உணர்வு மாயையினின்றும் விலகி யதார்த்தத்தை அறிவியல் பூர்வமாக அணுகி நிற்பது.

உடலுழைப்பில் ஈடுபடும் ஏகப் பெரும்பான்மையான தமிழ் மக்களை அரவணைத்து உழைப்பிற்கும் தொழிலுக்கும் உரிய சமூகத் தகைமையை வழங்குவது.

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களினதும் உரிமைகளையும் கோரிக்கைகளையும் தன் சகல நிகழ்ச்சி நிரல்களிலும் உள்ளடக்கிக் கொள்வது.

அரசியலில் தொடர்ச்சியாக தமிழ்த் தேசியத்தின் பெயரில் ஆதிக்கம் செலுத்தி வரும் சொத்து சுகம் பெற்றவர்களின் மேட்டுக்குடிக் கபடத்தனங்களை அம்பலமாக்கி நிராகரிப்பது.

சமூகப் படிநிலை அமைப்பாக நீடித்துவரும் சாதியத்தை மறுத்து சமூக நீதியையும் தமிழ் மக்கள் மத்தியிலான சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் வலுப்படுத்த முன் நிற்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத நம்பிக்கை என்பதைத் தனிமனித விருப்பு வெறுப்புச் சார்ந்த ஒன்று என்பதற்கு அப்பால், நிர்ப்பந்தங்கள் மூலமும் மூட நம்பிக்கைகள் ஊடாகவும் பிற்போகுச் சிந்தனைகளாகப் பரப்புவதை நிராகரிப்பது.

இனவாதத்தையும் இனத் துவேஷத்தையும் கிளறி அரசியல் லாபமும் பொருளாதார நன்மைகளும் பெறுவதை நிராகரித்து நிற்பது.

சிங்கள, முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களை அந்நியர்களாகக் கொள்ளும் பிற்போக்குத்தனங்களை மறுத்துச் சக மனிதர்களாகவும் சகோதரர்களாகவும் கொள்ளும் மனிதநேய ஐக்கியப் போக்கை வளர்த்துக் கொள்வது.

சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளுக்கும் உழைக்கும் சாதாரண சிங்கள மக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கி, உழைக்கும் சிங்கள மக்களுடன் தமிழ் மக்களின் ஐக்கியத்தை வளப்படுத்துவது.

பெண்கள் மீதான சகலவகைப் பழைமைவாதப் பண்பாட்டு அடிமைத் தனங்களை அடையாளங்கண்டு அவற்றை நிராகரித்து ஆண், பெண் சமத்துவத்தை ஏற்படுத்த முன்னிற்பது.

நச்சுத்தனமான அந்நியக் கலை இலக்கியங்களையும் சீரழிந்த பண்பாட்டுக் கோலங்களையும் துணிவுடன் மறுத்து நிற்பது.

இந்திய ஆளும் வர்க்கத்தின் பிராந்திய மேலாதிக்க நலன்களை விளங்கிக்கொண்டு தமிழ் மக்கள் அதன் கருவியாக்கப்படுவதை மறுத்து நிற்பது.

அவ்வாறே, மேற்குலக ஏகாதிபத்திய சக்திகள் மீதான குருட்டு நம்பிக்கை கொள்ளாதிருப்பதுடன், அந்நிய விசுவாசத்தை நிராகரிப்பது.

நவகொலனிய உலகமயமாதலை எதிர்த்து நிற்பது.

மேற்குறிய அடிப்படையில் முற்போக்கான தமிழ்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியம் உருவாக்கப்படுவதை மாக்சிச லெனினிச வாதிகள் வரவேற்கிறார்கள். அவ்வாறு உருவாகும் முற்போக்கான தமிழ்த்தேசியத்துடன் நட்புறவுடன் இணைந்து பயணிப்பதில் மாக்சிச லெனினிச வாதிகளுக்கு எவ்வித சிரமமோ தடையோ இருக்க மாட்டாது. இது காலத்தின் தேவையாக இருப்பதை உணர்ந்து தமிழ்த் தேசியத்தின் பிற்போக்குத்தனங்களால் ஏமாற்றப்படுவதைத் தடுக்க இளந் தலைமுறையினருக்கு உள்ள ஒரு வழியாக இம் முற்போக்குத் தமிழ்த் தேசியம் உருவாக்கப்படுவது தேவையாயும் பயனுடையதாயும் இருக்கும்.

புதியபூமி

ஏப்ரல்-மே 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 02

# தமிழ்த் தேசியத்தின் பார்வையும் குறுந்தேசிவாத வளர்ச்சியும்

## சிங்களம் கற்றல்

சிங்களப் பேரினவாதம் சிங்களத்தை அரச கரும மொழியாக்கியதன் நோக்கம் தமிழரின் மொழியை அழித்துத் தமிழரைச் சிங்களவராக்குவதாக இருந்திருந்தால், சிங்களம் அரசகரும மொழியாக மட்டுமல்லாது கல்விக்கான மொழியாகவும் திணிக்கப்பட்டிருக்கும்.

சிங்களம் மட்டுமே என்ற கோஷம் மொழிவழி இன உணர்வைக் கிளறிவிட வசதியாயிருந்தது. வாக்குகளைப் பெற்றுத் தேர்தல்களை வெல்ல உதவியாயிருந்தது. தமிழர் சிங்களத்தைப் படித்துச் சிங்களவருடன் போட்டியிடுவார்களேயாயின் சிங்களத்தை அரசகரும மொழியாக்கியதன் முக்கியமான ஒரு நோக்கம் முறியடிக்கப்பட்டிருக்கும். எனினும், சிங்களம் மட்டுமே சட்டம் முழுமையாக நிறைவேற்றப்படுமானால் தமிழ் அழிந்துவிடும் என்ற வாதம், தமிழரசுக் கட்சியால் நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டு வந்ததாகும்.

ஆனால் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்ட பேரினவாத நோக்கங்களில் ஒன்று அரசாங்க உத்தியோகங்களில் தமிழரின் தொகையைக் குறைப்பதாகும். அது வெளிப்படையான பாரபட்சமாக ஒரு காலத்தில் வடிவெடுத்திருக்கும் என்பது ஒரு புறமிருக்க, சிங்களத்தைக் கற்க வேண்டாம் என்று தமிழரை வற்புறுத்தியன் மூலம் தமக்கிருந்த அரசாங்க-வேலை வாய்ப்புக்களைத் தமிழராகவே மறுக்குமாறு தூண்டப் பட்டனர். எந்த விதமான சிங்கள மொழித் திணிப்பும் 1950களிலோ 60களிலோ 70களிலோ கூடப் பாடசாலைகளில் இருந்ததில்லை. சிங்களத்தை ஒரு விருப்பப் பாடமாகக் கற்பிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை யாழ்ப்பாணத்தின் வசதி படைத்த பாடசாலைகள் பலவற்றில் இருந்து வந்தது. எந்த விதமான சிங்கள மொழித் திணிப்புமே இல்லாத ஒரு சூழ்நிலையில் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கக் கூடாது என்ற தடை சமூக நெருக்குவாரங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் பெரிய அபத்தம் என்னவென்றால் சிங்களத்தைக் கற்றால், தமிழ் மொழியின் உரிமை மறுப்புக்கு இடமளிப்பதாகி விடும் என்ற வாதமாகும். தமிழரில் அரசாங்க உத்தியோகங்களில் இருந்தோர் ஒருசில சதவீதத்தினரே ஆவர். சில அரசாங்கத் துறைத் தொழில்கட்குச் சிங்கள அறிவு தேவைப்பட்டிராது. அப்படித் தேவைப்பட்ட உயர் தொழில்களில் சிங்களம் அரச கரும மொழியாக முன்பிருந்தே தமிழிலும் சிங்களத்திலும் குறைந்தபட்ச உரையாடல் ஆற்றல் தேவையாயிருந்தது.. ஆங்கிலத்திற் கருமமாற்றிய இடத்தில் சிங்களத்தில் மட்டுமே கருமமாற்ற வேண்டிய தேவை ஏற்படக்கூடிய சூழலிலும் அது தமிழ்ச் சமூகத்தின் கணிசமான ஒரு சதவீதத்தைப் பாதித்திருக்க இயலாது.

சிங்களம் மட்டுமே சட்டத்தின் அநீதியான ஒரு பக்கம் இருந்தது. அதற்கெதிரான போராட்டத்தைச் சிங்களமொழி எதிர்ப்பு என்ற வடிவத்திற் கொண்டு சென்றதன் பயனாகத் தமிழர் இழந்தது அதிகம். அந்த இழப்பின் முக்கியமான பகுதி நடுத்தர வர்க்கத்தினரை குறிப்பாக அரச உத்தியோகங்களை எதிர்பார்த்திருந்தோரையே பாதித்தது. வசதி படைத்தவர்கள் தேவைக்கேற்பச் சிங்களத்தைப் படித்தோ படிக்காமலோ தம்மை மேலும் வளப்படுத்திக் கொண்டனர்.

சிங்கள மொழித் திணிப்பு என்பது, பிற்காலத்தில் தமிழ் மொழியின் நியாயமான பிரயோகம் பற்றிய சட்டத்திற்குப் பின்பு, அச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்குத் தடைகளை விதிக்கும் முறையில் பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களிலும் செயற்படுத்தப்பட்டது. வருமான வரித் திணைக்களம் குறிப்பிடத்தக்க ஒரு விலக்காக இருந்ததன் காரணங்கள் விளங்க எளியன என நினைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் 1970களின் போக்கிலேயே சிங்களமொழிப் பற்று என்பது படித்த நடுத்தர வர்க்கத்தினரிடையே குறைந்துவிட்டது. அதே அளவுக்குத் தமிழ் நடுத்தர வர்க்கத்தினரிடையிலும் தமிழ்ப் பற்று நலிந்து விட்டது.

சிங்கள மொழிக்கு எதிரான தமிழ்த் தேசிய அரசியல் நடவடிக்கை தொடக்கப்பட்ட காலத்தில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படவுமில்லை. சிங்களம் தமிழர் மீது திணிக்கப்படவுமில்லை. தமிழர் சிங்களம் கற்க மறுத்ததை சிங்கள பேரினவாதிகள் அதிகம் கவனத்தில் எடுக்கவும் இல்லை. ஏனெனில் தமிழர் சிங்களம் படிக்காமல் விடுவது சிங்களவர்களது வேலை வாய்ப்புக்கட்குச் சாதகமானது என்று அவர்கள் கண்டனர்.

தமிழரசுக் கட்சி வெறுமனே மொழியையே பிரச்சினையாக்கிய போது, பேரினவாதம் தமிழரை அரசாங்க உத்தியோகத் துறையினின்றும் உயர் தொழில்களினின்றும் ஓரங்கட்டுவதிலேயே குறியாய் இருந்தது. பாடசாலைகளிற் சிங்களம் கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டதன் மூலம் பொருள் வசதி குறைந்த தமிழரே நட்டப்பட்டனர். அதைவிடச் சிங்கள மக்களுடன் தமிழர் உறவுகளைப் பேணுவதற்குரிய வாய்ப்புக்களும் இழக்கப்பட்டன. பல்வேறு துறைகளிலும் தமிழரும் சிங்களவரும் சமூகங்களாக ஒருவரை ஒருவர் அறிய ஒரு கொலனி ஆதிக்க மொழியே பாலமாக அமைய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குக் குறுகிய தேசியவாதக் கண்ணோட்டங்களே முக்கியமான பங்களித்தன.

## இலங்கை என்ற பேர்

இந்த நாடு அதன் வரலாற்றில் ஈழம், இலங்கை என்ற இரண்டு பேர்களாலுமே தமிழில் பொதுவாக அறியப்பட்டு வந்துள்ளது. பிரித்தானியக் கொலனி ஆட்சிக் காலத்தில் இலங்கை என்ற பேரே இந்த நாட்டைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாயிற்று. சிங்களத்தில் அது லங்கா என்றும் ஸ்ரீ லங்கா என்றும் அறியப்பட்டுள்ளது. 1972ம் ஆண்டு புதிய அரசில் யாப்பு ஸ்ரீ லங்கா என்ற பேரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்தில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் இந்த நாட்டைக் குறிக்கும் பேராகப் பிரகடனஞ் செய்த போதும், தமிழில் அதை இலங்கை என்று அறிய இடமளித்தது. பேரினவாதத் தன்மை கொண்டதாக அறியப்பட்ட அந்த அரசியல் யாப்பின் சாதகமான சில அம்சங்களில் இதுவும் ஒன்றாகும்.

முதன் முதலாக ஈழம் என்ற சொல்லாற் தமிழ்ப் பிரதேசங்களை மட்டுமேகுறிக்கும் போக்குகள் 'தமிழ் ஈழம்' என்ற கோட்பாட்டை ஒரு அரசியல் இயக்கமாக்கும் வரை, தமிழர் நடுவே இலங்கை என்ற பேரே இந்த நாட்டை அடையாளப்படுத்தப் பயன்பட்டது. ஆங்கிலம் படித்தோரிடையே, தமிழர் மட்டுமன்றிப் பிறரும்,

'சிலோன்' என்ற பேரைக் கைவிடச் சில ஆண்டுகள் எடுத்தது.

தமிழ் ஈழம் என்ற தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தும் நோக்கில் இலங்கை என்ற பேருடன் தமிழருக்கிருந்த நெருக்கத்தை நீக்கும் நோக்குடனே இந்த நாடு வலிந்து சிறீ லங்கா என்று அழைக்கப்பட்டது. இந்தப் போக்குத் தம்மை 'இடதுசாரிகளாகக்' காட்டிக் கொள்ள விரும்பிய இயக்கங்களையும் விட்டுவைக்கவில்லை. இலங்கை என்பதற்குப் பதிலாக ஒரு அந்நியத் தன்மை கொண்ட சிறீ லங்கா என்ற பேரால் இந்த நாட்டைக் குறித்து, அதன் மூலம் ஈழம், தமிழீழம் என்ற பேர்கள் அதனின்றும் வேறுபட்ட ஒரு மக்களையும் பிரதேசத்தையும் குறிக்குமாறு செய்ய அவர்கள் முயன்றனர்.

சிங்களப் பேரினவாதிகட்கு அது ஒரு பொருட்டே அல்ல. தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதம் வேண்டுமாறு தமிழிலும் இந்த நாட்டின் பேரை ஶ்ரீ லங்கா என்று வைத்துக் கொள்வதில் அவர்களுக்கு என்ன குறை? அதே வேளை தமிழ் ஈழக் கோரிக்கையால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் (அவை பற்றிய நிச்சயமின்மைகளும் கருத்து வேறுபாடுகளும் ஒருபுறமிருக்க) தவிர்ந்த பிரதேசங்களில் வாழும் மலையகத் தமிழரும் முஸ்லிம்களும் தாம் வாழும் நாட்டை இலங்கை என்று அழைக்க உரிமையுடையவர்களா என்ற கேள்வி எழுகிறது. இவ்வாறு ஶ்ரீ லங்கா என்ற பேரை அவர்கள் மீது திணித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை சிங்கள பேரினவாதிகட்கல்லாது குறுகிய தமிழ்த் தேசியவாதிகட்கே உரியதாகிறது.

## நம்மை வலியுறுத்தும் தேவை

தமிழர்தமது உரிமைகளயும்தாம்பங்குகோரவேண்டியவற்றையும் மறந்துவிடுவதால் தமிழீழக் கோரிக்கை எவ்வளவு தூரம் வலுப்பெற்றுள்ளது என்று என்னால் நிச்சயமாகக் கூற முடியாது. ஆனால் அது கணிசமான வெற்றி என்று கூறமாட்டேன். புலம்பெயர்ந்தோரிடையே சிங்கள மக்களை எதிரிகளாகவும் இந்த நாட்டை அடையாளப்படுத்தும் அனைத்தையுமே அந்நியமானதாகவும் கருதும் போக்கை மேற்கூறிய விதமான அணுகுமுறைகள் ஊக்குவித்து உள்ளன. அதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சாதித்ததென்ன?

இலங்கைக்குள்ளே தமிழீழப் பிரிவினை பற்றிய நம்பிக்கை சோர்ந்துள்ளது ஒரு புறமிருக்க, உரிமைப் போராட்டத்திற் கூட நம்பிக்கையற்ற ஒரு மனநிலைதான் இன்று காணப்படுகிறது. இந்த நிலையில், தமிழ் மக்களிடையே தாம் இழந்த, இழந்து வரும் உரிமைகளையும் அவற்றை வெல்ல முன்னெடுக்க வேண்டிய போராட்டங்களையும் பற்றி உணர்வூட்டும் தேவை இருக்கிறது. இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தை முற்றாக நிராகரித்தும் பிற தேசிய இனங்களின் தேவைகள் பற்றிய அக்கறையின்றியும் முன்னெடுக்கப்பட்டன. ஒரு வகையில், இவை ஒரு அதிகார மனப்பான்மையுடன், ஒரு ஆண்ட பரம்பரைத் திமிருடன், பெரும்பான்மை இனமொன்றுக்குரியதான கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கப்பட்டன என்றே கூற வேண்டும். ‘தனித் தமிழ் ஈழம் என்பது தமிழரின் உரிமை. அதை மற்ற அனைவரும் ஏற்றே தீரவேண்டும்” என்ற மனப்பான்மை உருவாகி வளர்ந்ததற்குரிய காரணங்கள் பல தமிழ் மேட்டுக்குடி அரசியலில் காணக் கூடியன.

தமிழ் மக்களின் விடுதலை அவ்விதமான மேட்டிமைத்தனத்தில் இருந்தும் தமிழரைப் பிற சமூகங்களிலிருந்தும் விலக்கி வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகளிலிருந்தும் விடுபட வேண்டும். அற்பத்தனமான சிந்தனைகள் ஒரு திசைக்கு மட்டும் வரையறுக்கக்கூடியவையல்ல. அவை வேறு திசைகளிலும் இயங்கிச் சமூகத்தின் உள் முரண்பாடுகளையும் கூர்மையடையச் செய்ய இயலும். செய்தும் உள்ளன. தமிழ் மக்கள் எதிர்ப்பது பேரினவாத ஆதிக்கச் சிந்தனையையும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் புறமொதுக்கலையுமே என்றால், அவர்களது செயற்பாடுகள் அந்த ஆதிக்கச் சிந்தனைகளையும் புறமொதுக்கல்களையும் மறுக்கும் நோக்கைக் கொண்டவையாகவும் இந்த நாட்டினில் நமது உரிமைகளை வலியுறுத்துவதுமாகவே அமைய வேண்டும்.

இமயவரம்பன்

புதிய பூமி

ஓகஸ்ட 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 03

## தேசிய வாதத்தில் நிலவுடைமைச் சிந்தனை

தேசியவாதம் என்பது தேச அரசு என்பதன் உருவாக்கத்தையொட்டி உருவான அரசியல் போக்காகும். தேச அரசு என்பது ஐரோப்பாவில் முதலாளியத்தின் எழுச்சியை ஒட்டியும் முதலாளிய நலன்கள் சார்ந்தும் உருவானது. தேசம் எனப்படுவது நாம் இன்று அறிகிறவிதமாக முதலாளியத்திற்கு முன் இருந்ததில்லை. இனங்கள், மொழிகள், மதங்கள், சாதிகள் போன்ற பல வேறு அடையாளங்கள் இருந்து வந்தபோதும், இன்று தேசமாகக் கொள்ளப்படும் எதுவும் அதற்குரிய இன, மொழி அடையாளங்களை உடைய நாடுகளாக இருந்ததில்லை. பேரரசுகள் பல இனங்களையும் மொழிகளையும் தம்முள்ளே கொண்டிருந்தன. ஒரே மொழி பேசும் சமூகங்கள் வெவ்வேறு அரசுகளிடையே பிரிக்கப்பட்டு இருந்துள்ளன. இன்று மூன்றாமுலகம் என்று சொல்லப்படுகிற நாடுகளில் ஏறத்தாழ ஒவ்வொன்றும் கொலனிய, ஏகாதிபத்திய வல்லரசுகளால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளையுடையன. பெரிய நாடுகள் எனப்படுகிறவை முந்திய கொலனிய நிர்வாகம் ஒன்றின் தொடர்ச்சியாகவோ கொலனியத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் தாக்கங்கட்குட்பட்டு எஞ்சிய பழைய பேரரசு ஒன்றின் தொடர்ச்சியாகவே இருக்கக் காணலாம்.

எவ்வாறு மூன்றாமுலக நாடுகளில் முதலாளியம் கொலனிய, ஏகாதிபத்தியக் குறுக்கீட்டால் உருவானதோ அவ்வாறே முதலாளியத்தின் துணைவிளைவான தேசியமும் அயற் குறுக்கீட்டின் விளைவாக உருவானதே. அந்நிய ஆதிக்கத்திற்கு உட்ப்பட்ட நாடுகளில் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான எழுச்சிக்கு அந்த நாடுகளில் உருவான புதிய முதலாளி வர்க்கங்கள் தலைமை தாங்கின. அந்த வர்க்கங்களின் நலன்களைத் தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை இயக்கம் அடையாளப்படுத்தியது. அந்த வர்க்கங்கள் தலைமை தாங்கி விடுதலையை வெல்ல இயலாத நிலைமைகளில், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் சார்பாக விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேரடிக் கொலனி ஆட்சியின் கீழிருந்து விடுதலை பெற்ற பின்பு, நாடுகளின் உள்ளிருந்த தேசிய இனங்களதும் சிறுபான்மை சமூகங்களதும் அடையாளமும் உரிமைகளும் நலன்களும் அடையாளஞ் சார்ந்த விருத்தியும் பற்றிய கேள்விகள் எழுந்தன. தேசிய முதலாளியம் இவற்றைப் பெருமளவும் அடையாள மறுப்பு, இன ஒடுக்கல் போன்ற வழிகளிலேயே கையாண்டது. தொழிலாளி வர்க்கத் தலைமையிலான ஆட்சிகள் தேசிய இன அடையாளங்களை ஏற்று அங்கீகரிக்கும் அணுகுமுறையை மேற்கொண்டன. மூன்றாமுலகில் தேசிய இனப் பிரச்சினை தீர்ப்பதற்குக் கடினமாக உள்ளதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றிற் சில வெளிக்காரணங்களாகும். அந்நியக் குறுக்கீடு பல வடிவங்களில் தேசிய இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பாதிக்கவும் வலிந்து பிரிவினையை இயலுமாக்கவும் செய்துள்ளதை நாம் அறிவோம்.

மூன்றாமுலக நாடுகளில் தேசிய இனப் பிரச்சினையின் வளர்ச்சிக்குக் காரணமாகவும் தீர்வுக்குத் தடையாகவும் உள்ள விடயங்களில் அவற்றின் தேசியவாதங்களின் வர்க்கத்தன்மைக்கும் அவற்றில் ஆதிக்கம் செலுத்துகிற வர்க்கச் சிந்தனைகட்கும் முக்கியமான ஒரு பங்குள்ளது.

ஒரு நாட்டின் முதலாளி வர்க்கமே தேசியத்தை முன்னெடுத்தது என்கிற போது, அந்த முதலாளி வர்க்கம் முன்னேறிய முதலாளிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட முதலாளி வர்க்கமாக இருந்ததா என்பதும் கவனத்துக்குரியது.

மூன்றாமுலகின் தேசிய முதலாளி வர்க்கம் மட்டுமல்லாது ஏகாதிபத்தியத்தின் நண்பனான தரகு முதலாளியமும் நிலவுடைமைச் சமூகத்தில் அல்லது நிலவுடைமை கூட முழுமையாக விருத்தியடையாத ஒரு சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நிலையில் இருந்தோரை அல்லது அந்நிய முதலாளிய முறைக்குட் கொண்டுவருகிற தேவை கொலனித்துவத்துக்கோ ஏகாதிபத்தியத்திற்கோ இருக்கவில்லை. பெருமளவும் அவர்களது முரண்பாடான உறவு அவர்களது ஆதிக்கம் நிலை பெற்ற பின் சமரச நிலைக்கு மாறிவிட்டது. அதன் பயனாக நிலவுடைமையாளர்கள் நடுவிலிருந்து ஒரு உள்நாட்டு அதிகார வர்க்கமும் நிலவுடைமையுடன் (நேரடியான அல்லது மறைமுகமான) நட்புத் தொடர்புகளையுடைய ஒரு முதலாளி வர்க்கமும்உருவாகின. அது மட்டுமல்லாமல்சமூகத்தில்ஆதிக்கம் செலுத்தி வந்த நிலவுடைமைச் சிந்தனையைக் கொலனித்துவ ஏகாதிபத்திய ஆதிக்கங்களின் கீழ் உருவான முதலாளி வர்க்கம் முற்றாக உதற வேண்டிய தேவையும் ஏற்படவில்லை.

எனவே சமூக உறவுகளில் மட்டுமன்றி, விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் இருந்த உற்பத்தி உறவுகளில் மட்டுமன்றி, முதலாளிய நிறுவனங்களிலும் நிலவுடைமைச் சிந்தனையின் ஆதிக்கம் தொடர்ந்தது. அது உலகமயமாக்கலின் கீழும் தொடர்ந்து வருகிறது. இலங்கையில் மிகவும் பின்தங்கிய முதலாளிய உறவுகளைக் கொண்ட பெருந்தோட்டத் துறையில் தொழிலாளர்கள் இன்னமும் பண்ணையடிமை மனநிலையிலிருந்து முற்றாக விடுபடாதுள்ளதையும் தோட்ட எசமானத்துவம் நிலப்பிரபுத்துவத் தன்மையுடன் நடந்து கொள்வதையும் மட்டுமன்றித் தொழிற் சங்கங்கட்குள்ளும் நிலவுடைமைச் சமூகத்திற்குரிய பண்புகளைக் காணலாம். முற்றிலும் முதலாளிய உற்பத்தி உறவுகள் உள்ள நிறுவனங்களிற் கூட அதிகார மட்டத்திலும் உழைப்போர் நடுவிலும் நிலவுடைமைச் சமூகச் சிந்தனைகளின் தாக்கத்தை நாம் இன்னமும் காண முடியும்.

இலங்கையில் சிங்களப் பேரினவாதம் பழைய சிங்கள மன்னர்களது மரபு வழி பற்றி அழுத்தந் தெரிவித்துப் பேசுவதும் தமிழ்த் தேசியவாதம் யாழ்ப்பாண இராச்சியம், சங்கிலி முதலான மன்னர்கள் போன்றோரிலிருந்து தமது தேசிய வரலாற்றைக் கட்டியெழுப்புவதும் நிலவுடைமைச் சிந்தனையுடன் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பின் அடிப்படையிலானவையே. இவற்றை இந்தியாவின் இந்துத்துவவாதிகள் புராண இதிகாசங்களிலிருந்து வரலாற்றைப் புனைவதுடன் ஒப்பிடலாம்.

இதன் கருத்து இலங்கையின் தேசியவாதிகள் நாட்டைப் பழைய நிலவுடைமை உற்பத்தி முறையை நோக்கி நகர்த்த விரும்புகிறார்கள் என்பதல்ல. அவர்கள் வேண்டுவது முதலாளியம். அதைத் தேசிய பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புகிற நோக்கில் தேசிய முதலாளியமாக உருவாக்குவதில் அவர்கள் தோல்வியடைந்தனர். ஏகாதிபத்தியத்தை அதன் நவகொலனிய வடிவில் எதிர்கொள்ள அவர்கட்கு இயலவில்லை. எனவே, பலவாறான சமரசங்கள் தேவைப்படுகின்றன. அவர்கள் முற்றாக ஏகாதிபத்தித்துடன் சமரசம் செய்து கொண்டோராகி விட்டனர். எனினும் தங்களது தோல்வியும் ஏகாதிபத்தியத்துடன் செய்து வந்துள்ள சமரசங்களும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதன் விளைவாக மக்கள் நடுவே எழக் கூடிய எதிர்ப்புணர்வைத் திசை திருப்பப் பேரினவாதம் பயன்படுகிறது. அவ்வாறே, பேரினவாதத்தின் விளைவாக உருவாகி அதனிடமிருந்து ஊட்டம் பெறும் குறுந் தேசியவாதமும் தனது மேட்டுக்குடிகளின் நலன் கருதி ஏகாதிபத்திய எதிர்ப்பைத் தவிர்ப்பதுடன் மக்களின் பிரச்சினைகளை முற்றிலும் தேசியவாதக் கண்ணோட்டத்திலேயே அடையாளங் காட்டுகின்றது.

மேற்கூறியவாறு தேசிய இனப் பிரச்சினையில் இனப் பகைக் கோட்பாட்டை முன்னிலைப்படுத்துவதற்கு இடதுசாரி எதிர்ப்பு இரு தரப்புக்களுக்கும் பயன்படுகிறது. அதேபோலப் பண்பாடு, மதம், மொழித் தூய்மை, சாதியம் போன்ற பலவும், மக்கள் மத்தியில் உள்ள ஆதிக்கச் சிந்தனையின் ஒரு முக்கியமான பகுதியாகத் தொடருகிற நிலவுடைமைச் சிந்தனையின் மிச்சசொச்சங்களே. அவை சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசியங்களின் மீது ஆதிக்கம் செலுத்துமாறு கவனித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறான போக்குத் தென்னாசியாவிற் பரவலாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கூடிய ஒன்றாகும். தேசிய இனங்களின் வளர்ச்சியும் அவற்றின் தேசிய அடையாளமும் நிலவுடைமை அடையாளங்களை உதற இயலாமைக்கு அவற்றின் தலைமைகளது வர்க்க நலன்கள் முக்கியமான காரணமாக பழமைவாதத்துடனும் அதி நவீன முதலாளியச் சுரண்டல் முறையான ஏகாதிபத்திய உலகமயமாக்கலுடனும் தேசியவாதிகள் பேணுகிற முரணான உறவுக்கு நமது சூழலில் முதலாளியம் தனக்கு முந்திய நிலவுடைமைக் காலத்தின் சமூக உறவுகளிலிருந்தும் சிந்தனைகளிலிருந்தும் விடுபடாமை ஒரு காரணமாகவும் வசதியாகவும் உள்ளதெனலாம்.

இமயவரம்பன்
புதியபூமி
நவம்பர், டிசம்பர் 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 04

# பேரினவாதமும் குறுந்தேசியவாதமும் சந்திக்கும் இடம்

சிங்கள மக்களுக்கும் சிங்களப் பேரினவாதிகட்கும் பேரினவாத அரசுக்குமிடையே எந்த வேறுபாட்டையும் காண மறுப்பது தமிழ்க் குறுந்தேசியவாதிகளின் தந்திரோபாயங்களில் முக்கியமான ஒன்று. அதேவேளை சிங்களப் பேரினவாதிகள் விடுதலைப் புலிகட்கும், பிற தமிழ்த் தேசிய வாதத் தலைமைகட்கும் தமிழ் மக்களுக்குமிடையே வேறுபாட்டைக் காண மறுப்பதையிட்டுத் தமிழ்த் தேசியவாதிகள் சினக்கின்றனர்.

இருதரப்புகட்கும் பொதுவான பல பண்புகளில் நேர்மையீனம் முக்கியமானது. வரலாற்றுத் திரிப்பு, உண்மைகளை மறுத்தல் மிகைப்படுத்தல் என்பன அவர்களுடைய நேர்மையீனத்தின் வெளிப்பாடுகள். அதற்கும் மேலாகச் சமூகங்களிடையே உள்ள முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகளாகவே காட்டுவதும் ஒரு சமூகம் இன்னொன்றைத் தனக்குக் கீழ்ப்படுத்துவது அல்லது அழிப்பது முன்னையதன் இருப்பிற்கு அவசியம் என்ற மனநிலையை நாம் காணலாம். அதை வெளிவெளியாகப் பேசுவது எப்போதும் இயலுவதில்லை. எனினும் அவர்களுடைய வேலைமுறைகளில் இவை வெளிப்படுவது தவிர்க்க இயலாதது.

எனவே இனஒழிப்பு என்பது சிலநிலைமைகளில் பேரினவாதத்தின் முக்கிய பண்புகளில் ஒன்றாக அமைகிறது. அதனாற் குறுந்தேசிய வாதம் அதைத் தவிர்க்கும் என்பதாகக் கூற இயலாது. குறுந்தேசியவாதிகள் இன ஒழிப்பில் இறங்காமைக்குக் காரணம் அதற்கான வாய்ப்பின்மையே ஒழிய விருப்பின்மையல்ல.

சிங்களச் சமூகம் தமிழினத்தை அழிப்பதற்கே விரும்புகிறது என்ற கருத்தைக்குறுந்தேசியவாதிகளில்ஒருபகுதியினர்நீண்டகாலமாக வலியுறுத்தியுள்ளனர். அந்த அடிப்படையிலேயே தமிழருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான இன ஒழிப்புப் பற்றிய சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் போக்கும் மேலெழுந்தது. தமிழ்ச் சமூகத்திற்கெதிரான படுகொலைகள் பல்வேறு காலங்களில் நடந்தன. எனினும் அவற்றுக்கிடையே ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி இருந்ததாகவோ அவை ஓர் பெருந்திட்டத்தின் பகுதி என்றோ கூறுவது கடினம். தமிழரை மிரட்டிப் பணியவைக்கும் நோக்கத்தால் அவை உந்தப்பட்டமை உண்மை, தமிழருக்கு எதிரான பாராபட்சமும் திட்டமிட்ட நிலப்பறிப்பும் சிங்களக் குடியேற்றங்களும் தமிழரின் நலன்கட்கும் தேசிய இன அடையாளத்துக்கும் எதிரான செயல்கள் என்பதில் ஐயமில்லை. அவற்றுக்கெதிராகப் போராடும் தேவையை மறுக்க இயலாது.

நாம் கவனிக்க வேண்டியது ஏதெனில் இவ்வாறு ஒடுக்கு முறைக்குட்படும் ஒரு சமூகம் பிற சமூகங்களை எவ்வாறு நடத்துகின்றது என்பதாகும். வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியதை விட மோசமாகச் சிங்களப் பேரினவாதிகள் எதைச் செய்துள்ளனர் என விசாரிப்போமா? நிச்சயமாகச் சில பகுதிகளில் தமிழ்க் கிராமங்களிலும் குடியிருப்புக்களிலும் இருந்த மக்கள் சிங்களக் காடையர்களாலும் அவர்களுக்குத் துணையான படையினராலும் விரட்டப்பட்டுள்ளனர். ஆயினும் அது வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டுவதைப் போன்று திட்டமிட்ட ஒரு நடவடிக்கையாக அமையவில்லை.

அப்பாவிச் சனங்களைக் கொல்லுவது போர்ச்சூழலில் நடப்பதற்கும் போர் முடிந்த பின்பு நடப்பதற்குமிடையில் முக்கிய வேறுபாடுண்டு. அவ்வாறே ஒரு சமூகக் கொந்தளிப்பின் போது நடக்கும் இனப்படுகொலைகட்கும் அவ்வாறில்லாத போது நடக்கும் இனப்படுகொலைகட்கும் வேறுபாடுண்டு. இவ்வாறான படுகொலைகளைச் சிங்களவர்கள் செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டும் தமிழ்க் குறுந்தேசியவாதிகள் தமிழ் மக்களின் பெயரில் விடுதலைப் புலிகளும் பிற தமிழ்த் தேசியவாத வன்முறை அமைப்புக்களும் செய்த படுகொலைகளையும் பேச விரும்புவார்களா?

இந்தியப் படைகள் இலங்கையில் நிலை கொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கில் முஸ்லிம்கட்கு எதிரான வன்செயல்களும் கொடுமைகளும் கொலைகளும் நடந்தமை எதைக் குறிக்கிறது? அனுராதபுரப் படுகொலைகட்கு இந்திய உளவு நிறுவனம் உடந்தையாக இருந்தமை எதைக் குறிக்கிறது?

சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோர் அது நடவாது என்ற நிச்சயத்துடனேயே பலவிடயங்களை விசாரிக்குமாறு கோருகின்றனர். விடயங்கள் முறையாக விசாரிக்கப்படின் விடுதலைப்புலிகளும் இந்தியப் படைகளும் இந்தியா ஆதரவுடன் செயற்பட்ட இயக்கங்களும் தொகையில் இல்லாவிடினும் கொடுமையினதும் மனித உரிமை மீறல்களினதும் தன்மையிற் பேரினவாத அரசாங்கத்தையும் அதன் படைகளையும் ஒத்த நிலையிலேயே காணப்படுவர்.

பெரும்பாலான போர்க் குற்றங்கட்கும் மனித உரிமை மீறல்கட்கும் காரணமான விடுதலைப் புலி இயக்கத் தலைவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர். அவர்கள் இப்போது உயிருடன் இருந்தால் விடுதலைப் புலிகளின் பதிலாட்களாக உள்ள சில தமிழ் அரசியற் கட்சிகள் சர்வதேச விசாரணையை விரும்புமா என்பது ஐயமானது.

விடுதலைப் புலிகளின் மீறல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்த அனைவருமே மனித உரிமை மீறற் குற்றங்கட்கும் போர்க்குற்றங்கட்கும் துணைபோனோரே. விடுதலைப்புலிகளின் போர்க்குற்றங்களை அறிந்து கொண்டே அவர்களுக்கு நிதி திரட்டியவர்கள் அக்குற்றங்களை ஊக்குவித்தோரே.

இவையெல்லாம் தண்டனைக்குரிய குற்றங்களாகும் என்று ஏற்கும் ஒரு சர்வதேச விசாரணைக்கு நமது தமிழ்க் குறுந்தேசியத் தீவிரவாதிகள் ஆயத்தமா? நிச்சயமாக இல்லை.

குறுந்தேசியவாதிகட்கு மேற்குலக நோக்கங்கள் தெரியும். அதை வைத்து ஒர் அரசியற் சூதாட்டத்தில் இறங்கினார்கள். அவர்களது ஈடுபாடு தீவிரமடைந்த போது ஆட்டமும் ஆட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிகளும் மாறிவிட்டன. எனவே மெல்லவும் இயலாமல் விழுங்கவும் இயலாமற் தடுமாறுகிறார்கள். அவர்களுடைய அந்தரிப்பும் தோற்றப்பாட்டிலாவது சர்வதேசத் தன்மையுடைய ஒரு விசாரணை இலங்கை மீது திணிக்கப்பட்டுள்ளதால் தடுமாறுகிற சிங்களப் பேரினவாதிகளின் அந்தரிப்பும் அதிகம் வேறுபட்டவையல்ல.

சர்வதேசக் குறுக்கில்லாமல் இலங்கையிற் போர்க்குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் நம்பகமாக விசாரிக்கக் கூடிய வாய்ப்பை இரு தரப்புக்களிலும் உள்ள பேரினவாத குறுந்தேசிய வன்மமுடைய சக்திகளே இயலாமற் செய்துள்ளன. இதைப் பற்றி நாம் பகிரங்கமாகப் பேசி விவாதிக்கவும் விசாரிக்கவும் வேண்டும்.

புதிய நீதி
ஒக்டோபர் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 05

## முனைப்பும் முதிர்ச்சியும்

01

சிப்பாய்போல் விளையாடும் பழக்கமுள்ள
சிறு பொடியன்
சிணுங்குகிறான்-
அண்ணனிடம் உள்ளவைபோல் ஆயுதங்கள்
கட்டாயம் தர வேண்டும்
என முரண்டு பிடிக்கின்றான்
கதறுகிறான்...
தந்தையையும் தாயினையும் வேண்டுகிறான்

முற்போக்குத் தனமுடைய தந்தையுடன் யோசித்து
முனைப்புரிமைத் திறன் மிகுந்த தாயும் ஒரு முடுவெடுத்தாள்
தற்காப்புத் தேவைக்காய்.
பாக்குவெட்டி, கத்தரிக்கோல்,
தடிக்கம்பு, கைக்கத்தி இவை நான்கும் கொடுத்தார்கள்
அப்போது தொடக்கம் அந்தச் சிறுபொடியன்
போராளி?

02

கத்தரிக்கோல் எடுத்தவன்
தன் தாயார் கூந்தல்
கனமாக வளர்ந்ததென்று கருதிக்கொண்டான்
அத்தனையும் குட்டையாய் நறுக்கிவிட்டான்
அன்னை அவள் தன் பிடரி தடவிப் பார்த்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதனையோ பறிகொடுத்த எண்ணமொன்றும்
எழுந்தது தான் அத்தாயின் இதயமீதில்
அது தனது முனைப்புரிமைக் கொள்கைக்காக
அவள் பொறுத்தாள்
இலேசாக முறுவல் செய்தாள்
அடுத்தபடி சிறு பொடியன்
தந்தையாரை அணுகி,
ஓர் அடி போட்டான் மண்டையோட்டில்-
துடிச்சு விழுந்தொழியும் அப்பா, பேன் எல்லாமே!

சொன்னபடி துள்ளினான், சிறு பையன்,
பாட்டி அங்கே குனிந்திருந்தாள்

சின்னப் பையன்
பாக்கு வெட்டியால் அவளின் செவி அரிந்து
போட்டு விட்டான் வாணலியில்
சுர் சுர் என்று பொரிவனவாம் செவி இரண்டும்
அப்பளம் போல்!
அடுப்பெரிக்க விறகில்லை என்பதாலே
அப்பப்பாட முழங்காலைக் குறுக்கே வெட்டி
மடக்கென்று பிளந்து வைத்தான் நெருப்புக்குள்ளே
மனைக்குள்ளே பெரிய திகில்...
மரண ஓலம்
சிக்கனமும் பொருளியலின் நலமும்
நல்ல சீர்திருத்த நாகரிகப் பாங்கும்
எல்லாம்
இக்கருமம் நான் முனைஞ்சு செய்தாலே
ஏற்படும்
என்று உரைக்கின்றான் சிறிய பையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

சின்னப் பொடியனின் தாயும் தந்தையும்
தீர்மானத்தை மறுபடி ஆய்ந்தனர்-
இளைஞரை ஒடுக்குதல் இழிந்ததே ஆயினும்.
கத்தரிக் கோலும் கம்பும் கத்தியும்
பாக்கு வெட்டியும்
பத்து வயதுக் குழப்படிப் பயலிடம்
கொடுப்பது சரியா
என்பது தொடர்பாய் எண்ணலாயினர்.

தாயகம் (1985)
முருகையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 06

## குறுநலப் பித்தம்

01

ஒரு நாள்... தமிழன்
தனிமையில் கல்லில் உட்கார்ந்திருந்தான்
பெருநாள் கொண்டாட இதுவா
தருணம்?
பெரிய பிழை!
பெருநாள்கள் எப்படி வந்திடுமோ?
என் மனக்கவலைச்
சுருள் தான், குலைந்து சுகம்
வருமோ? என்று சோர்ந்தனனே

02

கண்டங்கள் ஆகிப் பரந்த
உலகில், கணக்கிலவாய்
மண்டும் குழுக்களே
மானுடக் கூட்டம் - மனிதர் இனம்
உண்டும் குடித்தும் மணந்தும்
புணர்ந்தும்
உவகை நிலை கொண்டும்
குலத்தை விரித்தும் திரியும்
குணத்தினதே

ஒவ்வொரு காட்டார் ஒவ்வொரு
பேச்சினர்
உண்பதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

ஒவ்வொரு பாசு முறையை
விரும்பலாம்
ஒவ்வொருவர்
ஒவ்வொருவர் மோடி உடையை
அணியலாம்
ஒவ்வொருவர்
ஒவ்வொரு சோடி மனை கட்டலாம்-
தாம் உறைவதற்கே

ஒவ்வொரு கூட்டமும்
ஒவ்வொரு போக்கில் உணர்வுகளை
ஒவ்வொரு பாட்டாக்கி
ஒவ்வொரு மண்ணிலே ஓதிடலாம்
ஒவ்வொரு கூட்டமும்
ஒவ்வொரு பாணியில் ஊன்றி நின்றே
ஒவ்வொரு கூத்து வகையினை
ஆடலாம் - ஊரகத்தே

ஒவ்வொரு கூட்டமும்
ஒவ்வொரு போக்கிலே ஓவியங்கள்
செய்து, நயங் கண்டு
சிந்தை குளிர்ந்து சிலிர்த்திடலாம்
ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு
சிற்பஞ் செய் உத்திகண்டே
ஒவ்வொரு வண்ணம்
உணர்ச்சி பெருக்கலாம்-
ஓ, இனிதே!

பிறப்புச் சடங்கு முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறாய்ப் பெருகிடலாம்
இறப்புச் சடங்கிலும் ஏதேதோ
பேதம் இருந்திடலாம்
சிறப்புச் சடங்கொன்று கொள்ளப்
படும் மணச் சீர்ச்சடங்கும்
வெறுப்பு விருப்புக்கிசைய
அடையலாம்- வேற்றுமையே

கும்பிடும் தெய்வங்கள் நூறாய்ப்
பலவித கோலங்களில்
நம்பிடும் மாந்தரை ஆட்கொண்டே
உய்தி? நலம் தரலாம்
நம்பிடும் தத்துவம் ஒவ்வொரு
போக்கில் நடந்திடலாம்
செம்பொருள் கண்டால்
அறிவு தெளிவும்? - திறம்படவே

ஆகையினால் மதம்,
சம்பிரதாயங்கள், ஆகமங்கள்,
சாதி, இனங்கள், சடங்கு,
வழமை, சரித்திரங்கள்
தேக நிறங்கள்,
ஒலிக்கின்ற ஓசைகள், செய்யுள் வகை,
வேதம், தரிசனம், ஆலயம்
மார்க்கம் விடும் வழியே...

முன்னை மரபின் மகிமையை
பேசும் மொழி இயல்பை
தன்னின மேன்மையின் சான்றெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்
கொண்டிடும் சாதனையால்
பின்னம் அடைந்தது மானுட சேனை
பெருமை கெட்டே...
உன்னதமான ஒருமையில்லாமல்
ஒழிந்ததுவே

இனமேன்மை வாதக்
குறுநலப்பித்தம் எழுந்ததனால்,
சனமேன்மை வாதத்தின்
சாத்தியப்பாடு தளர்வடைந்து
மனமேன்மை கெட்ட
மனித குலமாகி வாழ்வு கெட்டுச்
சினமேன்மையே ஓங்கிச்
சீரழிவாகிய செய்தி என்னே!

03
ஈழத்தில் மட்டுமா,
இந்த நிலைமைகள்?
எங்கும் உண்டே!
மீளத் துடிக்கின்ற
நாடுகள் தோறும் மிகச் செறிந்தே
ஆழக் கிடக்கும்
அடிப்படை வாதங்கள் அத்தனையும்
நாளும் துளிர்விட்டு
மூச்சாய்ச் செழிப்பன, நம்மிடையே!

எங்கும் பார்த்தாலும் இதுதான்
நிலைபரம்
என்ன செய்வோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு பார்த்தாலும் இதுதான்
அரசியல்- ஈனநிலை
எங்கு பார்த்தாலும் இவைகளே
போர்க்குரல், ஏச்சொலிகள்
எங்கு பார்த்தாலும்
இனக் கொலைப் பாதக ஈனங்களே!

04

எண்ணத்தில் மூழ்கி
இருந்த தமிழன் எழும்பி நின்றான்
கண்ணைத் திறந்து சிறிதே
இமையை கசக்கி விட்டான்
திண்ணமாய் ஒன்றும் தெரியவில்லை
அண்ணாந்து பார்க்கிறான்-
அங்கலாய்ப்பால்...
என்ன ஆகுமிங்கே!

முருகையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 07

# இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு
மூட்டை கட்டி அந்த முழுப்பாரம் பின் முதுகிற்
போட்டுக் குனிந்து புறப்பட்டோம் நீள் பயணம்
தேட்டம் என்று நம்பி, சிதைந்த பழம்பொருளின்
ஓட்டை உடைசல், உளுத்த இறவல்கள்,
பீத்தல், பிறுதல், பிசகி உதிர்ந்தவைகள்,
நைந்த கந்தல், நன்றாக நாறிப் பழுதுபட்டுச்
சிந்தி இறைந்த சிறிய துணுக்கு வகை
இப்படியான இவற்றையெல்லாம் சேகரித்து
மூட்டை கட்டி, அந்த முழுப்பாரம் கண் பிதுங்கக்
காட்டு வாழியற் பயணம் புறப்பட்டோம்

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு
மூட்டை முடிச்சு முதலியன இலாதார்
ஆட்டி நடந்தார், இரண்டு வெறுங்கையையும்
பாதை நடையின் பயணத் துயர் உணரா
மாதிரியில் அந்த மனிதர் நடந்தார்கள்
ஆபிரிக்கப் பாங்கில் அவர்கள் நடந்தார்கள்

மற்றும் சிலரோ வலிமையுள்ள ஆயுதங்கள்
பற்றி, முயன்று, பகை களைந்து, மேலேறி
விண்வெளியை எட்டி வெளிச்செல்லு முன்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்தரையில் வான வனப்பைச் சமைப்பதற்கும்
வாய்ப்பைச் சமனாய் பகிர்ந்து சுகிப்பதற்கும்
ஏய்ப்பை ஒழித்தே இணைந்து நடப்பதற்கும்
நெஞ்சம் இசைந்தார்
நிகழ்த்தினர் நீள் பயணம்,
பின்முதுகிற் பாரப் பெருமை இலாதவர்கள்
இத்தனையும் செய்தார்
இனியும் பல செய்ய
எத்தனிப்போம் என்றார்
இவை கண்டும்
நாமோ
இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை அத்தனையும்
சற்றே இறக்கிச் சலிப்பகற்றி, ஓய்வு பெற்றுப்
புத்தாக்கம் எய்திப் புறப்படவும் எண்ணவில்லை
மேலிருக்கும் மூட்டை இறக்கி, அதை அவிழ்த்துக்
கொட்டி உதறிக் குவிக்கின்ற கூளத்துள்
வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி,
அப்பாலே செல்லும் அறிவு விழிப்பென்பதோ
சற்றேனும் இல்லோம்
சலிப்பும் வலிப்பும் எழ,
பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர்படுத்த
ஊருகிறோம் ஊருகிறோம் - ஓயாமல் ஊருகிறோம்

பரந்த உலகோர் பலரும் சுமையைச்
சுருங்கும் படியாய்க் குறைத்துச் சிறிதாக்கி
கைப்பைக்குள் வைத்துக் கருமங்கள் ஆற்றுகையில்
வெற்றுக் கை கொண்டும் வியப்புகளை ஆக்குகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி நுட்பம், செய்கை நுட்பம், போக்கு நுட்பம் என்பவற்றால்
சித்தி பல ஈட்டிச் செகத்தினையே ஆட்டுகையில்,
நாங்கள் எனிலோ நலிந்து மிகவிரங்கி,
பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர்படுத்த
ஊருகிறோம்
வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி
அப்பாலே செல்லும் அறிவோ குறைவு
ஓ!
இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு:
பண்பாட்டின் பேராற் பல சோலி எங்களுக்கு

இளந்தென்றல் (1972)
முருகையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 08

## உன் மண்ணும் என் மண்ணும்

'என் மண், என் மண்' ணென்று
எப்போதும் நீ சொல்வாய்
கோடேறி வழக்குரைப்பாய்,
மண்ணுக்கும் நீருக்கும் வேலி,
மதிற்சுவர் எழுப்பி
வாராமல் நீ மறிப்பாய்,

இப்போதோ,
'இது நம் மண்' என்கின்றாய்
'எழுக' என ஆர்க்கின்றாய்.

நன்று, ஒரு சிறு கேள்வி,
நீ கூறும் 'நம் மண்' இது
ஆண்டோய்ந்த பரம்பரையார்
மீண்டொருகால் வேள்வியிலே
ஆடாகப் பலியிடவும்
அந்நியருக் கெல்லாமே
அடமானம் வைத்திருந்து
அவர் தயவில் ஆளுதற்கு

ஆசையுறும் மண்ணாமோ?
இல்லையெனில்,
விடுவிக்கப் படை கொணர்ந்த
ரட்சகரின் காலடியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

விடுபடற்கு மறுபடியும்
வெகுண்டெழுந்த காம்போஜம்,
ஆப்கனிஸ்தான் போல் ஒன்றோ?
எல்சல்வடோர் போன்றோ?
பறிபோன பலஸ்தீன மண்போன்றோ?

மாறாக,
ஸியொனிஸத்தின் இஸ்ரேலோ?
ஆப்ரிக்கத் தென்முனையில்
வெள்ளை நிறவெறி உரிமை
கொண்டாடும் மண்போன்றோ?
அடியடியாய் முடியாண்டோர்
நீண்டநெடு வரலாற்றில்
குடுமிபிடிச் சண்டைகளில்
குருதியினாற் சேறான
செம்மண்ணோ, எம் மண்ணோ?

நீகூறும் மண் அதனை
உழுபவனின் மண்ணென்றால்
அவனுக்கே சேரட்டும்
முன்னாலே நிற்கின்ற
ஆண்டைகளின் பங்கென்ன?

நதிக்கரை மூங்கில்
சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 09

# பாட்டன் பரம்பரை

பலநூறு ஆண்டுகள் முன்
பண்ணிவைத்த கோபுரத்தை
அண்ணாந்து பார்த்து அதை
அதிசயித்து உன்மனதுள்
பாட்டனுக்குப் பாட்டனுக்குப்
பாட்டனுக்குப் பாட்டனெவன்
பண்ணியவன் என்றெண்ணிப்
பரவசித்து நிற்பவனே,
பழைய பரம்பரையில்
பாட்டன்மார் பலபேர்காண்

கல்லுடைத்த பாட்டன்மார்
கல்சுமந்த பாட்டன்மார்
பேருனக்குத் தெரியாது

ஆராரோ தேரேறி
வீதிவலம் வருவதற்காய்க்
கையிழந்த பாட்டன்மார்
கண்ணிழந்த பாட்டன்மார்
காலொடிந்த பாட்டன்மார்
கதையுனக்குத் தெரியாது,
கதைமுடிந்த பாட்டன்மார்
கணக்குனக்குத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

கோபுரத்தில் பேர்பொறித்துக்
கொலுவிருந்த மன்னரிடை
பாட்டன் உனக்கொருவன்
எவனிருப்பான் என்றெண்ணிச்
செல்லரித்த ஏடுகளைத்
தேடுகிற பைத்தியமே!
பணக்கார உறவுகளைப்
பழமையிலும் நாடுகிறாய்.

நதிக்கரை மூங்கில்
சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 10

## திசை மாறிய மாஜி நண்பனுக்கு

"இல்லாத ஊருக்கு
நாளை புறப்பட்டு
நேற்றிரவு போய்ச்சேர
இந்த இரவின்
இருளால் வழிகாட்டு"
என்றென்னைக் கேட்டாய்.

"ஏலாது" என்றேன்
"எதிரி" என என்னை
ஏசிவிட்டுப் போனாய்.

முன்னொரு நாள்,
"போகும் இடம் தெரிதல்
வழிதெரிதல், வகைதெரிதல்
நேரம் பெரிதல்ல,

போதல் தனியே
பெரிது" என ஓதிக்
"கீதை மொழி" என்றாய்.

என்னுட் சிரித்தேன்.
என்றோ தெளிவாய்
என்ற எதிர்பார்ப்பில்
ஏமாற வந்தாய்
இரவில் வழிகேட்டு.
என்னைத் தவிர்த்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

உன்னை வழிகாட்ட
இல்லாமலோ போவார்.

போனாய், விடியலிலே
வாலைத் துரத்தி
வளைய வளைய வரும்
நாய்போற் திரிகின்றாய்.

திசைகெட்டு, ஏறுகிற
வெய்யிலுடன் ஏறுகிற
வேகத்தில் ஓடுவாய்
நேரத்தை வெல்லும்
குறி போலும்.

'ஒரு கணமே
நில்' லென்றால் நீ குரைப்பாய்
அல்லாற் கடிப்பாய்.
அறிவேன் அகல்கின்றேன்.
உன்போல் என்னால்
ஓடல் இயலாது.

ஆனால் எனக்குப்
போகும் இடம் தெரியும்
வேளை, வழி, வகையும்.

செம்பதாகையிலிருந்து
தாயகம்-8
ஜூன்-ஜூலை 1984
செப்பனிட்ட படிமங்கள்
சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு II

## புதிய பழமம்

பல ஆயிரம் வருஷப்
படிமங்கள் பொடிபடட்டும்
வார்த்துஞ் செதுக்கியும்
கடைந்தும் குடைந்தும்
கல்லிற் பொழிந்தெடுத்தும்
வார்த்தை பல வரைந்தும்
வர்ணங்கள் தீட்டியும்
மந்தைகள்போற் பெண்குலத்தை
மேய்த்த பரம்பரையோர்
காத்துக் கவனமுடன்
பேணிப் பராமரித்த
கல்லும் உலோகமும்
களிமண்ணும் காகிதமும்
ஓலைகளும் சீலைகளும்
வேய்ந்த சிறைக்கூடம்
வீழ்ந்து நொறுங்கட்டும்
பெண்ணடிமைப் பெருங்கோட்டை
மதில்கள் பொடிபடட்டும்.

அச்சம் அணிகலனோ?
மடமை மணிமுடியோ?
நாணுதலே பெண்மையோ?
தளர்நடையும் மருள்விழியும்
துடியிடையும் கொடியுடலும்
ஆண்குலத்தின் வேட்கைக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்
அமைந்ததுதான் பெண்குலமோ?
பரம்பரையின் பண்பாடும்
தன்மானம் பேணுவதும்
கற்புநெறி நிற்பதுவும்
கைம்மையிலே கருகுவதும்
மாதர் குலச்சுமையோ?

கற்பும் அறநெறியும்
எல்லார்க்கும் பொதுவென்போம்.
அஞ்சுதலும் நாணுதலும்
ஏய்த்துப் பிழைப்போர்க்கும்
எத்திப் பறிப்போர்க்கும்
மானுடரைத் தாழ்த்திக்
கொடுமைபல செய்வோர்க்கும்
தீயோர்க்கும் உரித்தென்போம்.
அஞ்சாமை மனத்துணிவு
அறிவு எமதுரிமை.
மானுடரை மானுடரே
அழித்தல் அடிமைசெயல்
இன்றே ஒழியட்டும்.

பெண்காள் திரள்மின்!
சூழுகின்ற வேலிச்
சுவர்களெல்லாம் சாயட்டும்!
மூடி மறைத்திருக்கும்
கூரை பெயரட்டும்!
தலைகள் நிமிரட்டும்,
கைகள் உயரட்டும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் ஒரு பாதி
அங்கே அமரட்டும்.

தாயகம்- 17, மார்ச் 1978
செப்பனிட்ட படிமங்கள்
சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 12

# இஸ்லாமியனதும் இந்த மண்

இந்த மண் எங்களின் சொந்த மண்- இதன்
எல்லை யார் தாண்டெனச் சொன்னவன்
இந்த மண் எங்களை ஈன்ற மண்- எமக்
கிடமிலை என்றெவன் சொன்னவன்

தந்தையர் தோளெமைச் சுமந்த மண்- அருந்
தாயாரின் மடியிலே சாய்ந்த மண்
பந்தடித்தோடி நாம் ஓய்ந்த மண்- தமிழ்ப்
பாடியும் பேசியும் தோய்ந்த மண்

வான்புகழ் நபிகளின் பாதையில்- பள்ளி
வாசலிற் தொழுகையிற் சேர்ந்த மண்
நோன்பினில் நல்லறஞ் செய்த மண்- நாம்
நாள்தோறும் பன்முறை தொழுத மண்

காதலின் நினைவினில் மிதந்த மண்- பல
கனவிடை ஆழ்ந்துநாம் மகிழ்ந்த மண்
வேதனை வெந்துயர் உணர்ந்த மண்- மனம்
தேறவும் ஆறவும் செய்த மண்

நாமெலாம் ஓரினம் என்றசொல்- செயல்
மாற்றினோர் எங்களைத் தூற்றினோர்
போமென எங்களை ஓட்டினோர்- செயல்
பார்த்ததால் நெஞ்சமே வெந்த மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுநற்தொழில் பொருள் போயினும்- வெறுங்
கையராய் அகதிகள் முகாங்களில்
வாடினும் பன்முறை சொல்கிறோம்- நாளை
வருகுவோம் எங்களின் சொந்த மண்

போரின் முகங்கள்
சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 13

# பெட்டியிலை முடங்காதை பெத்த திரு நாடே!

பாராளு மன்றத்தில பெத்த திரு நாடே - இவை
பலகதையுங் பேசினையாம் பெத்த திரு நாடே
ஆராரோ ஏய்ச்சினமாம் பெத்த திரு நாடே - அதால்
போராடப் போச்சினமாம் பெத்த திரு நாடே

சண்டை முடிஞ்சுமென்ன பெத்த திரு நாடே - அவர்
சன்னதங்கள் தீரவில்லை பெத்த திரு நாடே
வெண்ட பிறகுமெல்லோ பெத்த திரு நாடே - ஆண்டை
வெறியாட்டம் ஆடுகிறார் பெத்த திரு நாடே

போராடித் தோற்றதினால் பெத்த திரு நாடே - இவை
தேர்தலிலை நிற்கினையாம் பெத்த திரு நாடே
சீராக வெல்லவைச்சால் பெத்த திரு நாடே - அயல்
ஆதரவு சேர்ப்பினையாம் பெத்த திரு நாடே

போர்க்குற்றக் கதையெடுத்தால் பெத்த திரு நாடே - அவை
பெருங்கோவங் கொள்ளுகினை பெத்த திரு நாடே
ஊர்ச் சனத்தை ஏய்க்கவெல்லோ பெத்த திரு நாடே - கெட்ட
இனவாதம் பேசுகினை பெத்த திரு நாடே

அமெரிக்கா வந்திடுமாம் பெத்த திரு நாடே - இவைக்
காதரவா அய்நாவாம் பெத்த திரு நாடே
தமிழருக்காய் உலகமெலாம் பெத்த திரு நாடே - இனித்
தங்களுடன் சேர்ந்திடுமாம் பெத்த திரு நாடே



சோ. தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதெல்லாம் தருவினையாம் பெத்த திரு நாடே - எனில்
காணி பொலிஸ் இயலாதாம் பெத்த திரு நாடே
ஆட்டிப் படைச்சவைதான் பெத்த திரு நாடே - அவை
ஆமியுடன் வாறவைதான் பெத்த திருநாடே

வீட்டுக்குப் போட்டமெண்டாப் பெத்த திரு நாடே - இனி
வடதிசையும் தமிழருக்காம் பெத்த திரு நாடே
கூட்டாகக் கேட்கையிலும் பெத்த திரு நாடே - இவை
கூறுபட்டு நிக்கினையே பெத்த திரு நாடே

மொட்டுக்கு வோட்டளிச்சாப் பெத்த திரு நாடே - எங்கள்
மனக்கவலை போய்விடுமாம் பெத்த திரு நாடே
மற்றப் பகுதிக்கெனில் பெத்த திரு நாடே - அவை
மன்னிக்க மாட்டினையாம் பெத்த திரு நாடே

மாகாண சபையிதனால் பெத்த திரு நாடே - நல்ல
மாற்றமெதும் வருகுவதோ பெத்த திரு நாடே
ஆகாத மண்குதிரை பெத்த திரு நாடே - ஏற
அதிகாரந் தேடுகினை பெத்த திரு நாடே

பாராளு மன்றத்துக்குப் பெத்த திரு நாடே - போட்டுப்
பேய்க்காட்டிப் போனபின்னும் பெத்த திரு நாடே
சீரான தேசமிதில் பெத்த திரு நாடே - தேர்தல்
சீரழிவை நம்புவமோ பெத்த திரு நாடே

சி. சிவசேகரம்

நன்றி - ஆச்சியின் கொண்டையூசிகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 14

## செந்தீ

சாதித் திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா - அவர்
நீதி தனக்கொரு நீதி பிறர்க்கொரு
நீதியென் றாடுதடா - தமிழ்
நீதி மறந்தவர் எந்த மதத்தினிற்
சாதி படித்தனரோ - அதை
மோதி யுடைப்பது தானொரு பாதையென்
றோதி எழுந்திடுவாய்

அந்த மனிதனும் இந்த உலகினின்
சொந்த மனிதனடா - அவன்
இந்த உலகினில் வந்து கிடப்பது
நொந்து கிடந்திடவோ - அட
இந்து மதத்தினுக் கிந்த நிலைதனைத்
தந்தது எந்த மறை - அது
வெந்து மடிந்திட உந்தி யெழுந்திடும்
செந்தீ எழுந்திடுவாய்.

- சுபத்திரன் -

நன்றி : கவிஞர் சுபத்திரன் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு 15

## அந்நியம்*

அவன் என் நாட்டவனல்லன்
என்னை முன்பின் அறியவும் மாட்டான்
என் மொழி பேசும் திறமையும் இல்லான்
என் மதமெது மரபெது எனவும் தெரியான்
எனினும்
என் மீதான ஒடுக்கலை அறிவான்
என் துன்பத்தைக் குமுறலைக் கோபத்தைக் கொதிப்பை
என் போராட்டத்தை அறிவான்
எனக்காக என் போராட்டத்தின் நியாயத்துக்காக
எப்போதும் குரல் கொடுப்பான்
அவன் எந் நாட்டவனாயிலென்
இன்னோர் கிரகத்தின் வந்தவனாயிலென்
அவன் என் சோதரன்

நீ என் மொழி பேசுவாய்
நான் வணங்கும் கோயிலில் நீயும் வணங்குவாய்
என் போன்றே
போராட்டம் விடுதலை தாய்நாடு எனப் பல கூறுவாய்
காசுங் கறப்பாய்
போதாமல் ஆணை பல விதித்து அடக்க முனைகிறாய்
அடிபணிய மறுப்பதனாற் சினந்தென்னை ஏசுகிறாய்
ஆள்வைத்து என்னை அடிக்கத் துணிகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும்

என் தாய் வயிற்றைப் பகிர்ந்தவனேயாகிலென்
எனை ஆள முனைபவன் எனக்கென்றும் அந்நியனே

நன்றி : தேவி எழுந்தாள்
சி. சிவசேகரம்

* ஐரோப்பாவின் தமிழ்க் குறுந்தேசியவாத மிரட்டல் அரசியலை வெறுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பம் முதல் சிங்கள பெருந் தேசியம் சிங்கள பௌத்த தேசியவாதத்தை சிங்கள உயர்வர்க்க மேட்டுக்குடி நலன்களுக்காக எவ்வாறு முன்னெடுத்ததோ அவ்வாறே தமிழ்த் தேசியமும் தன்னைக் குறுந் தேசியவாத எல்லைகளுள் வைத்தே முன்னெடுத்து வந்தது. தமிழ்த் தேசியம் என்பது பழைமைவாத தமிழர் மேட்டுக்குடி ஆதிக்க சக்திகளின் உயர் வர்க்க நலன்கள் சார்ந்தே இன்றுவரை, இருந்துள்ளது. அதனிடம் தேசிய நலன்களோ, உழைக்கும் மக்கள் பற்றிய அக்கறையோ இருந்ததில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்போ முற்போக்கான கூறுகளோ தமிழ்த் தேசியத்தில் இன்னமுங் காணப்படவில்லை.



978-624-93177-4-1

ரூ. 500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org